# ஞானச்சுடர்




ஆனி 2024

318ஆவது மலர்

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

**பொருள் :** ஒருவன் படிக்கவேண்டிய நூல்களை நன்றாகக் கற்கக் கடவன்; அவ்வாறு கற்றபின் அக் கல்விக்கு ஏற்ப அவை சொல்லுகிற நெறியில் நிற்கக் கடவன். (391)

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

**பொருள் :** எண், எழுத்து என்று சொல்லுமிரண்டனையும், அறிவுடையோர் மக்களுக்குக் கண் என்று சொல்லுவர். (392)

# நற்சிந்தனை



***மறப்பேனோ குருநாதன் தன்னை***

**அரகர சிவசிவ மறையோனே**

அன்பர்தஞ் சிந்தையில் உறைவோனே
அரகர சிவசிவ மறையோனே 01

பொன்னே மணியே பூங்கோவே
புலவரெல் லாம்புகழ் எங்கோவே 02

காணுங் கண்ணிற் கலந்தவனே
கதிரொளி போலெங்கும் நிறைந்தவனே 03

ஆணும் பெண்ணும் ஆனவனே
அடியவர் பேணும் வானவனே 04

கோணிய பிறையை முடித்தவனே
கொல்புலித் தோலை யுடுத்தவனே 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 318

2024 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| உலகம் ஆயிரம் சொல்லட்டுமே... | பு. கதிரித்தம்பி | 01 - 03 |
| விநாயகப் பெருமான் | கு. சிவபாலராஜா | 04 - 08 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 09 - 12 |
| நா நலம் பேணுவோம்... | கு. சோமசுந்தரம் | 13 - 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 - 21 |
| பற்றற்ற பக்தியுடன்... | எம்.பி. அருளானந்தன் | 22 - 23 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 - 27 |
| அடியும் முடியும் | இராம ஜெயபாலன் | 28 - 32 |
| இலக்கிய மரபுகளால்... | ச. சஜீலன் | 33 - 36 |
| திருச்செந்தூர் | செ. சிவபாதம் | 37 - 41 |
| வள்ளுவர் உபதேசம் | சி. கணபதிப்பிள்ளை | 42 - 44 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 45 - 48 |
| அருணகிரிநாதர் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 49 - 51 |
| ஆலயம் தொழுவது... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 52 - 53 |
| முத்தி சேர்தல்... | பொ. பாலேஸ்வரன் | 54 - 56 |
| அருணகிரிநாதர் விழா | இ. கஜன் | 57 - 60 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:

Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.

Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் வைகாசி மாத மலருக்குரிய வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் திரு செ. ஞானசபேசன் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தனது உரையில் நான் பொதுவாக இம்மாதிரியான மேடைகளில் ஏறி உரையாற்றுவதில்லை. அதற்குக் காரணம் சில சந்தர்ப்பங்களில் பொய் பேசவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதன் காரணத்தால் இவ்வகையான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வது வழக்கம். ஆனால் இம் மேடை அப்படியானது அல்ல. பல வருடங்களாக இம் மலருக்குரிய வெளியீட்டுரையை ஆற்றியிருக்கின்றேன். ஆனால் அந்நேரங்களில் ஆச்சிரமத்துக்கு வெளியே நின்றபடியால் மானசீகமான முறையில் செயற்படுவதில்லை.

கடந்த இரு வருடங்களாக ஆச்சிரமத்தோடு இணைந்து பல பணிகளை ஆற்றும் சந்தர்ப்பங்களில் நானும் இணைந்து அப் பணிகளின் தன்மையின் சிறப்புப்பற்றி அறிந்ததன் காரணத்தால்தான் இம்முறை இம்மேடையில் துணிவாக ஏறி இருக்கின்றேன். ஒரு ஆன்மீகம் சார்ந்த மலர் 317 மாத காலமாக தொடராக வெளிவருவது ஒரு சாதனை என்றே கூறவேண்டும். அத்துடன் மலரின் வளர்ச்சியை உற்றுநோக்கும்போது அதன் பரிணாமமும் மிகப் பெரிது என்று கூறி ஆச்சிரமம் ஆற்றும் பலவித செயற்பாடுகளைப் பற்றி சபையில் உள்ள அடியவர்களுக்கு கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் வைகாசி மாத (317) மலருக்குரிய மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் ஆற்றினார்கள்.

அவ்வகையில் ஆசிரியர் அவர்கள் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் பெறு பேறுகளை தனது மனதில் தோன்றிய கருத்துக்களை வைத்து சபையில் உள்ள அடியவர் களுக்கு விளக்கிக்கூறி ஆரம்ப காலங்களில் இருந்தே இம் மலரின் வளர்ச்சியை நாம் கணித்துக்கொண்டே இருக்கின்றோம். எத்தனையோ விதமான கட்டுரைகளை இம் மலரின் மூலம் பார்க்கக்கூடியதாகவிருக்கின்றது. புதிய புதிய இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவித்து அவர்களது எழுத்தாற்றலையும் வளர்ப்பதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. வருடம் முடிவில் வாசகர் போட்டி என்னும் ஒரு பகுதியை நிகழ்த்துவதன் மூலம் பல வாசகர்களை பங்குபெறச் செய்து வாசிக்கும் திறனையும் வெளிப்படுத்துகிறது. இம் மலர் சிறந்த ஆவணமாக மிளிர் வதற்கு ஆச்சிரமமும் பேரவையினரும் முன்னின்று உழைக்க வேண்டும் என்று கூறியதோடு இம் மலர் தொடர்ந்தும் பிரகாசிக்க சந்நிதி வேலவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.





அதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையினரின் கோரிக்கைக்கு அமைவாக என்பு மச்சை சிகிச்சை மேற்கொள்வதற் கான மருந்துவகைகள் கொள்வன விற்காக பணிப்பாளர் மருத்துவர் திரு த. சத்தியமூர்த்தி அவர்களிடம் 525,000. 00 ரூபா நிதி கையளிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

எமது முன்னோர்களின் ஆலய வழிபாட்டுக்கு சிறந்த வழியாக தல யாத்திரை அமைந்திருந்தது. ஏனெனில் அக்காலங்களில் வாகன வசதிகளோ, தொடர்பாடல் வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ இருக்கவில்லை. எனவே மூர்த்திகரம் கூடிய தெய்வங்களை வழிபாடு செய்வதற்கு நடந்தே செல்லவேண்டும். ஆனால் தனிமையாக நடந்து செல்வது பாதுகாப்பற்றதாகவும், ஆபத்து மிகுந்ததாகவும் அமைந்ததுடன் வழி தடுமாறிச் சென்று உயிர் ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியதாகவும் அமைந்திருந்தது. மன அமைதி வேண்டி இறை தரிசனம் செய்வது என்பது முடியாத காரியமாக அமைந்திருந்தது.

இச் சந்தர்ப்பத்தில் கூட்டமாக கால் நடையாக யாத்திரை செல்கின்ற மரபு ஏற்பட்டது. யாத்திரை நாட்கள் பலவாக அமைந்தமையால் உடல் உபாதைகளை மறந்து உணவு உறக்கங்களில் அக்கறை கொள்ளாது ஒரே இறை சிந்தனையுடனும் இறைவன் நாமத்தை பாடியும் ஆடியும் மனதில் பதியச் செய்து உலகியல் சிந்தனைகளை மறந்து இறை சிந்தனையாகவே இறைவனின் அருட்காட்சியைக் காண்பதற்கான பயணம் அமைந்தது.

அத்தகைய யாத்திரை அனுபவம் உடல் உற்சாகத்தை ஏற்படுத்தியது. மனதை அமைதிப்படுத்தியது. உறவை வலுப்படுத்தியது. உத்வேகத்தைக் கொடுத்தது. யாத்திரையை கைவிடாமல் தொடரச் செய்தது. யாத்திரையின்போது ஏற்பட்ட கஸ்டங்கள் நாம் அனுபவிக்க வேண்டிய வினையை நாமே விரும்பி அனுபவிப்பதனால் எம் தலைமேல் எழுதப்பட்ட அயன் கையெழுத்து அவன் தாள்பட்டு அழிந்துவிடுகிறது என்ற மனத்திருப்தியையும் கொடுத்தது.

நாம் செய்த வினைப்பயனாக இத் தேகம் கிடைத்தது. அதிலும் எம் வினைக் கொடுமையால் சொல்லொணாத் துயரங்கள் ஏற்படுகின்றன. இவையெல்லாவற்றையும் யாத்திரையின் பயனாக கெடச் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுகிறது என்பதை அனுபவத்தினால் உணர்ந்தமையால் போக்குவரத்து வசதிகள் அதிகரித்த இக் காலப்பகுதியிலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவதை கண்ணூடாக பார்க்க முடிகிறது

பாரதத்தில் காசி யாத்திரை, நர்மதா, பரிக்கிரமா யாத்திரை, அமர்நாத் புனித யாத்திரை, கைலாய யாத்திரை, சார்தாம் யாத்திரை, சபரிமலை யாத்திரை என்பன இன்றும் நடைபெற்று வருகிறது.

இவ்வகையில் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரையான பாத யாத்திரை ஈழத்தில் பிரபல்யமானதொன்றாகும். இந்நிகழ்வில் அடியார்கள் பலரும் கலந்துகொள்வதும் நீண்ட பயண யாத்திரையாக அமைவதும் காட்டுப்பாதையினூடாக அரோகரா கோசத்துடன் கூட்டமாகப் பயணிப்பதும் தனித்துவமான பக்திமயமான செயற்பாடாகும். இந்நிகழ்வு முருகன் திருவருளாலேயே நடைபெறுகிறது என்பதை சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலமாக பல கட்டமாக உதவி வழங்க முருகன் திருவருள் பாலித்திருப்பதும் முருகனின் அருட்திறனை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதை சுடர் நினைவுகூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(அளவெட்டி மத்தி)

**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(விதானையார் வளவு, காங்கேசந்துறை)

**கந்தையா ஏகாம்பரம்**
(புறாடிலேன், அரியாலை)

**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**S. சுதர்சன்**
(உடுப்பிட்டி)

**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**செல்வி S. ஜடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**க. இராசதுரை**
(நீர்வேலி)

**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**பா. சாருஜன்**
(மல்லாகம்)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, உடும்பராய்)

**தலைவர் / செயலாளர்**
(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

**ஐ. கணேசலிங்கம்**
(யாழ்ப்பாணம்)

**ஆ. ஜெயக்குமாரன்**
(கப்பூது, கரவெட்டி)

**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)

**ஆனந்தராசா மணிமாறன்**
(அராலி மத்தி, அராலி)

**ந. கவிகரன்**
(சுழிபுரம்)

**T. மணிவண்ணன்**
(மிருசுவில்)

**மு. வைகுந்தநாதன்**
(இலங்கை வங்கி, வல்வெட்டித்துறை)

**S. விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)

**K. சுப்பிரமணியம்**
(கல்லூரி வீதி, இருபாலை)

**மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)

**பொ. வெங்கடேஸ்வரன்**
(நகரசபை, பருத்தித்துறை)

**ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)

**இ. சரவணபவன்**
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

**சு. சிவனேசன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை தங்கராசா
(அன்னை இல்லம், உரும்பராய்)
பரமேஸ்வரன் தயாருபன்
(கல்வியங்காடு)
ச. வடிவேலு
(ஊரெழு, சுண்ணாகம்)
திருமதி அகிலன் அருந்ததி
(போதராமடம், துன்னாலை)
க. பூலோகரட்ணம்
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
S. கமலநாதன்
(புத்தூர்)
ச.சிவனேசன்
(கேணியடி, திருநெல்வேலி)
திருமதி அ. வினிதா
(நல்லூர், யாழ்ப்பாணம்)
கு. நித்தியானந்தன்
(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)
கோ. யோகலிங்கம்
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
சி. நவரெத்தினம்
(துவாரகை, கரணவாய்)
திருமதி அ. குணநாயகம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
த. தயாபரன்
(கரவெட்டி)
திருமதி தங்கராசா ஈஸ்வரி
(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)
கு. லோகேந்திரன்
(மில் ஒழுங்கை, மல்லாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோ. கருணாகரன்**
(சுண்ணாகம்)
**உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
**இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**க. ஆனந்தராசா**
(நெல்லியடி, கரவெட்டி)
**இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
**K. தங்கராஜா**
(நல்லூர்)
**செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**S. குகநாதன்**
(கரவெட்டி)
**வசந்தன் சிவஞானம்**
(அல்வாய் மேற்கு, திக்கம்)
**திருமதி திருத்தேவி ஏகாந்தன்**
(வல்வெட்டித்துறை)
**T. நாகராசா**
(நல்லூர் யாழ்ப்பாணம்)
**கா. தெட்சணாமூர்த்தி**
(பண்டத்தரிப்பு)
**திருமதி ப. இராஜேஸ்வரன்**
(கோண்டாவில்)
**பா. துவாரகன்**
(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)
**ம. பேரின்பநாயகி**
(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீயே நீதிபதி

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

"மனதுக்கு மட்டும் பயந்துவிடு. மானத்தை உடலில் கலந்துவிடு இருக்கின்ற வரையில் வாழ்ந்துவிடு. இரண்டில் ஒன்று பார்த்துவிடு"

இல்லாதது உருவாகி இயற்கையின் வசமாகி பல் உயிர்களின் பாவனையில் பாங்கான மனித இனத்தை முதன்மையாகக் கொண்டதே இந்த உலகு. இந்த மனித குலம் பகுத்தறிவின் பாவனையால் பாருலகில் பக்குவம் அடைந்து விளங்க எண்ணற்ற இயல்புகளை ஈர்ந்து அளித்தான் இறைவன்.

ஏற்றமிகு சமுதாயங்கள் எங்கெங்கும் உருவாகி அல்லலுறு வாழ்வு பெறவே ஆண்டவன் மனித குலத்தை மண்ணுலகிற்கு அனுப்பி வைத்தான். இந்தப் பார் எங்கும் பரந்துபட்டு வாழும் மனித குலம் தாங்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை பூர்த்தி செய்யும் வகையில் பண்பான வாழ்வு முறையை பேணி நின்றே தம் வாழ்வுப் பயணத்தை முன்னெடுக்க வேண்டும். உண்மையே உயர்த்தும் ஏணி நேர்மையே நிறைந்த செல்வம் என்ற உத்தம உடன்பாட்டை உறுதியாகக் கொள்ள வேண்டும். கள்ளம் கபடம் அற்ற வெள்ளையுள்ளம் வேண்டும். கண்ணியம் தவறாத காருண்ணியம் வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் ஊதாரித்தனம் இல்லாது இருக்க வேண்டும். தான் கெட்டாலும் தக்கார் கெடாமல் இருக்க தயவான மனப்பாண்மை வேண்டும். பஞ்சமா பாதகங்களின் பாவனையை பகைத்தொழிக்க வேண்டும். எல்லோர்க்கும் நல்லவராய் இயன்றவரை இலங்கி வரவேண்டும். இதுவே இறைமையின் நோக்கத்தை பூர்த்திசெய்து வாழ்வின் சுவடுகளை வளப்படுத்தும் வழிமுறைகளாகும். இத்தகையோர் எம்மத்தியில் எவ்வகையில் உள்ளனர்? இவர்கள் இலைமறை காய் போலவே இருந்து வருகிறார்கள்.

ஏனையோரின் இயல்புகளை நோக்குவோம். ஆனால் அவர்கள் பொய்யும் புரட்டும் வஞ்சனையும் பொறாமையும் புறம்கூறலும் கொண்டு தீமையான வழிமுறைகளையே தம் வாழ்வாக நிகழ்த்தி வருகிறார்கள். கூட இருந்து குழிபறிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். நல்லவர்கள்போல் நடித்து வல்லவராக மாறி வாழ்நாளில் கடமையில் கண்ணியத்தில் இன்பத்தின் எழுச்சியை அபகரிக்கும் சுயநலவாதிகள். பொதுநலத்தின் மத்தியில் மௌனமாய் இருந்துகொண்டு சுயநலத்தின் வழிபார்க்கும் வண்ணம் நெஞ்சம் படைத்தவர்கள் நீதியைப் புறம் தள்ளி அதன் நெடுந்தூர வழிகளைப் பிளவுசெய்து நேர்மையற்ற முறையில் தங்கள் உயிர்வாழ்வை நிலைநிறுத்த முயல்பவர்கள் அதிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்தை தாங்கிக்கொண்டு அதற்குரிய மாற்றுவழிகளை துணையாகக் கொண்டு பிறரை வஞ்சித்து விமர்சித்து ஏளனம் செய்யும் போக்கையே கொண்டிருப்பவர்கள் இதனையே,

"வீழ்ந்தாரைக் கண்டால் வாய்விட்டு சிரிக்கும்
உயர்ந்தாரைக் கேட்டால் மனதிற்குள் வெறுக்கும்"

என்றும் வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா என்றும் திரைப்பட கவிஞன் பாட்டிசைத்தான்.

மேலும் இதனை மகாகவி பாரதியும் மேற்கோள்காட்டி

"நெஞ்சில் உரம்குன்றி நேர்மைத் திறனும் இன்றி
வஞ்சனை செய்வாரடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரனடி"

என்று வழி மொழிந்தான்.

உண்மையைப் பொய் என்பார். பொய்யை மெய் என்பார். நல்லதைக் கூடாது என்பர். கூடாததை நல்லதென்பார். தம் வாழ்வை தக்க வைக்கும் தந்திர உபாயங்களையே தாரக மந்திரமாகக் கொண்டிருப்பார். இதன் மறுபுறத்திலே எம்மவர்க்குத் தான் வேண்டுவது என்ன? இதற்காகத்தான் எமக்கு வேத வாக்காக ஒரு வாசகம் உருவாகியுள்ளது. அதுதான் உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீயே நீதிபதி என்பதாகும். இதுவே உலக வாழ்வை ஓங்கி வளர்த்தெடுக்கும் உயிர் வேராகும். அதாவது எமக்கென ஒரு மனம் இருக்கின்றது. நல்லதையும் தீயதையும் பகுத்தறிவின் பயன்பாட்டினால் கண்டறிந்து பண்போடு வாழும் ஆற்றல் எமக்குண்டு. இதற்காகவே "என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்" என்று கூறி வைத்தார் யோகர் சுவாமி அவர்கள்.

ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான். அவர் அரிய நெஞ்சில் சிறுதுளி வஞ்சம்கூட இல்லை. அவன் அன்றி எமக்கு வேறு ஆறுதலும் இல்லை. அவனை அடைந்து நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும். அப்படியாக நல்ல வண்ணம் வாழ்வதற்குகந்த வழிபாடோ அர்ச்சனைகளோ தேவைப்பட்டாலும் முதலில் ஆண்டவன் விரும்புவது அது அல்ல முதலில் நாம் எமது மனதை ஒருமைப்படுத்தி தூய்மைப்படுத்தி அவன் பாதங்களை சரணடைய வேண்டும். இந்த மனம் என்ற மலரால் நாம் அவனை அர்ச்சிக்க வேண்டும். இதைத்தான் சுவாமி விபுலானந்தர் "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று கூறிச் சென்றார்.

பூச்சியத்துக்குள்ளே ஒரு இராஜ்ஜியம் உருவானதுபோல் ஒரு உருவமும் இல்லாத உத்வேக மன எழுச்சியின் எண்ண அலைகளிலேதான் இந்த உலக இயல்புகளை நெறிப்படுத்தும் சக்தியின் வலுவாக்கம் நின்று உலாவுகிறது. என்றால் அது மிகையாகாது. எமக்கு எப்போதும் எம் வாழ்வில் ஆண்டவனைப் போல் யாரும் உதவுவதும் உதவப்போவதுமில்லை. அதுபோல் வேறொன்றும் நிலைகொள்ளப் போவதில்லை. "தெய்வம் நமக்குத் துணை பாப்பா ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா என்றும் உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் தெய்வம் உண்மை என்று தான் அறிதல் வேண்டும். வைரமுடைய நெஞ்சு வேண்டும். இது வாழும் முறையடி பாப்பா" என்ற பாரதியின் பாடலும் நினைவு கூரத்தக்கது.

*நல்ல நண்பர்களின் நட்பு நலத்தைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை வெல்லும். சத்தியம் நிலைக்கும். நீதி செங்கோல் ஏந்தும் என்ற இந்த வாழ்வின் சுவடுகள் அனைத்தும் மனிதாபிமானத்தின் மாண்புமிகு சொத்துக்களாகும். எனவே இந்த மனிதாபிமானத்தின் பிறப்பாக்கிகள் ஆகிய நீதி, நேர்மை, உண்மை என்பவற்றை நாம் உயிரினும் மேலாக எப்பொழுதும் கொண்டே ஆகவேண்டும். இதில் இம்மியளவும் பிசகக்கூடாது. இதையே மனதுக்கு மட்டும் பயந்துவிடு மானத்தை உடலில் கலந்துவிடு இருக்கின்ற வரையில் வாழ்ந்துவிடு இரண்டில் ஒன்று பார்த்துவிடு என்றும், என்னதான் நடக்கும் நடக்கட்டுமே இருட்டினில் நீதி மறையட்டுமே தன்னிலே வெளிவரும் தயங்காதே ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே என்றும் வாழ்வின் இலட்சியங்களை வரையறுத்திக் கூறுகின்றான் கவிஞன் கண்ணதாசன். இன்றும் இத்தகைய உத்தமர்களைக் கண்டறிந்து அவர்கள் வேதனைக்கு மேல் சோதனைக்கு ஆளாக்கி ஈற்றில் எல்லையில்லா இன்பங்களைப் பெற்றுக்கொடுத்து உண்மையை உய்வித்து உலகம் நிலைத்துவாழ வழிகோலிய சித்தர்கள் ஞானிகள் முனிவர்கள் போன்ற பெருந்தகையாளர்களை யாரும் எப்பொழுதும் மறக்கமுடியாது. உதாரணமாக விசுவாமித்திரரின் வேட்கை மிகுதியினால் சத்தியம் தவறாத உத்தமனான அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் நாடு நகரம் மனைவி மக்கள் முதலான உலக இன்பங்களை இழந்து முடிவில் அத்தனையும் பெற்று சத்தியத்தின் நித்தியத்தை நிலைநாட்டி நீடு உலகில் நிலைகொள்ள வைத்ததை அகிலம் முழுவதும் அறியும்.

மனித வாழ்வில் மரணம் என்பது உறக்கம் எனக்கொள்ளப்படுவது. பிறப்பு என்பது விழிப்புநிலையை ஏற்படுத்துவது. மானிடர் ஆன்மா மரணம் எய்தாதது. மறுபடி பிறந்திருக்கும். இதுவே பிரபஞ்சத்தின் பெறுபேறும் அழிவற்ற ஆன்மாக்களின் நீரோட்டமும் ஆகும்.

## திருப்புகழ் புகழ்ந்த பெருமான் முருகன்

*ஆடும் பரிவேல் கையுடையோனே*
*அனுதினம் மனம் உனை நினைப்பவன் யானே*
*பாடும் பணி தினம் தந்து அருள்வாயே*
*பன்னிரு கையுடைய எழில் குமரேசா*
*வீடும் நாடும் உன் பொறுப்பாகும்*
*விண்ணும் மண்ணும் உமதருளாட்சி நாம்*
*தேடும் பெரும் தலைமைக் கவியோனே*
*திருப்புகழ் புகழ்ந்திடும் எம்பெருமானே.*

-சின்னப்பு தனபாலசிங்கம்-

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூன் | 10 | வை | 28 | திங்கள் | நமிநந்தியடிகள், சேக்கிழார் |
| யூலை | 09 | ஆனி | 25 | செவ்வாய் | மாணிக்கவாசகர் |
| யூலை | 13 | ஆனி | 29 | சனி | அருளம்பலவர், தங்கம்மை |
| யூலை | 21 | ஆடி | 05 | ஞாயிறு | பட்டினத்தடிகள் |

*மனிதனிடம் சத்துவகுணம் ஓங்கும்போது இறை காட்சிக்காக அவன் ஏங்குகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகப் பெருமான்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

நாம் எக் கருமத்தையும் தொடங்கும்போதும் விநாயகப் பெருமானை வணங்கியபின் தொடங்குதல் மரபாயிருத்தலின் காரணம், விநாயகப் பெருமான் வெற்றியைத் தருவார். அதனால் செய்யும் காரியம் சித்தியடையும் என்னும் நம்பிக்கையினாலாம். இப் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்காத இடமேயில்லை என்பதை உணர்தல் வேண்டும். மரங்களின் கீழ், ஆற்றங்கரை, குளக்கரை, வீதியோரம், வீதிகள் சந்திக்கும் சந்திகளில் மற்றும் திருக்கோயில்கள் தோறும் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்து வருவதைக் காணலாம்.



விநாயகப் பெருமானின் வணக்கம் கி.பி ஏழாம் நூற்றாண்டின் பின்னரே தமிழ்நாட்டில் அறிமுகமானது. என்பதை அறியலாம். பல்லவ மன்னன் நரசிம்மவல்ல பல்லவன் காலத்தில் வாதாபி வெற்றிக்குப் பின் தமிழகத்தில் நுழைந்த ஓர் வழிபாடு விநாயகர் வழிபாடாகும் என்பது அறிஞர் கூற்றாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக் கால ஞானசம்பந்தர் முதலாகத்தான் விநாயகரைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள். அதற்கு முன் காரைக்காலம்மையார் பதிகங்களில் விநாயகர் வழிபாடு பற்றிக் குறிப்பிடப்படவில்லை. திருவாசகத்திலும் விநாயகர் வழிபாடு எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. திருமூல தேவநாயனார் அருளிய திருமந்திரப் பாசுரங்கள் எதிலும் விநாயகர் வழிபாடு குறிப்பிடப் படவில்லை. திருமந்திரம் மூவாயிரம் செய்யுட்களிலும் விநாயகர் தவிர ஏனைய தெய்வங்களான சரஸ்வதி, இலட்சுமி, ஐயப்பன், முருகன், திருமால், பிரமன், உருத்திரன், சதாசிவன், மகேசுவரன், வயிரவி, திரிபுரை, புவனாவதி, ஆதித்தன் ஆகிய பல கடவுள்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாயினும் விநாயகர் பற்றி யாதொன்றும் கூறப்படவில்லை. திருமந்திரம் பொதுப் பாயிரம் பகுதியில் கடவுள் வாழ்த்துப் பாடி அருளிய திருமூலர், கடவுள் வாழ்த்துக்கு முன்னால் காப்புப் பாடலாக ஒரு பாடல் விநாயகரைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. இப் பாடல்தான் திருமந்திரப் பனுவலின் தொடக்கப்பாடல் என்றும், இது திருமூலரால் அருளப்பெற்றது என்றும் சில அறிஞர்களால் கூறப்பட்டுள்ளது. ஏனைய பலவிடங்களில் இவ் விநாயகர் காப்புப் பாடல், திருமூலரால் பாடப்படவில்லை எனவும், இப் பாடலைப் பாடியவர் ஓர் அன்பர் எனவும் கூறியுள்ளார்கள். இப் பாடலைத் திருமந்திரக் காப்புச் செய்யுளாக அமைத்துள்ளனர். எது எப்படியிருப்பினும், இப் பாடல் மிகவும் செறிவான கருத்தமைந்து சிவபெருமானை நினைந்து விநாயகப் பெருமானின் திருவடிவத்தைக் கருத்துடன் சித்தரித்துள்ளமை காணலாம். அப் பாடல் வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

இப் பாடலானது, திருமூலர் ஓராண்டுக் காலம் யோகிருந்து பின்னர் ஓராண்டு முடிய கண் திறந்து அருளிய பாடலாகையால், அவர் யோகிருந்த காலத்திலேயே தன் மனத்தில் நினைத்திருந்த சிவபெருமானின் வடிவத்திலேயே விநாயகப் பெருமானது வடிவத் தையும் கண்டு, அப் பாடலைப் பாடியுள்ளார். இதனை பாடலின் பொருளை நோக்கி அறியலாம். சிவபெருமானின் திருநடன வடிவத்தில் காணும் "சிவாயநம" என்னும் ஐந்தெழுத்து வடிவம்போலும் ஒரு வடிவம் விநாயகப் பெருமானுக்கும் உண்டு என்பதை அவர் பாடலில் காணலாம். சிவனுக்கு நான்கு கரங்களும், ஊன்றிய திருவடியுமாக ஐந்து வடிவங்கள் உண்டு என்றால், விநாயகருக்கு நான்கு கரங்களும், தும்பிக்கையுமாக கரங்கள் எல்லாம் ஐந்தாக அமைத்துப் பாடியமை காணலாம். மூலாதார முக்கோணத்தில் நான்கு இதழ் தாமரையிலே, வம், சம், ஷம், ஸம் என்னும் நான்கு எழுத்துக்களுடன் கூடிய வீணாதண்டத்தின் அடிப் பாகத்தில் சித்தலட்சுமி, வல்லபை என்னும் இரண்டு சக்திகளுடன், தாமரைப் பொகுட்டின்மீது விநாயகப் பெருமான் (கணபதி) வீற்றிருக்கின்றார். இவர் சிசு வடிவப் பிரம்மம் ஆகிய விநாயகர் ஆவார். இவற்றைத் திருமூலர் தனது அனுபவத்தால் அறிந்த வராகலின் யோக நூலை உணர்த்தமுற்பட்டபோது மூலாதாரக் கணபதியை முதற்கண் வணங்கிப் போற்றிப் பாடியுள்ளார்.

ஐந்து திருக்கரங்களையுடையவர் விநாயகப் பெருமான். யானை முகமுடையவர், இளம் பிறையை ஒத்த வளைந்த ஒற்றை யானைத் தந்தத்தை உடையவர். அவர் சிவபெருமானின் மூத்த பிள்ளையாவார். ஞானச் சிகரமாக விளங்குபவர். ஞானத்தின் முடி நிலையாகவுள்ளார். அவரது திருவடிகளை உள்ளத்தில் வைத்துத் துதிக்கின்றேன். இப் பாடலில் "நந்தி" எனக் குறிப்பிடப்படுவது சிவபெருமானது பெயராதல் அறிக. விநாயகர் காப்பு திருமுறைகள் ஒன்றிலும் இல்லை என்பது, இங்கு குறிப்பிடுதல் வேண்டும். திருமந்திர நூலின் தொடக்கப் பாடலாக "ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்" என்னும் திருமந்திரம் கொள்ளப்பட்டுள்ளது. சேக்கிழார் வாக்கும் அதனை ஒத்ததாகவேயுள்ளது. "ஒன்றவன்றான் என எடுத்து முன்னிய அப் பொருள் மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி" என்பதே சேக்கிழார் திருமொழியாகலின், அவர் வழியில் திருமந்திர முதற்பாடல் "ஒன்றவன் தானே" எனக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக விநாயகப் பெருமானை வணங்குதல் கூடாது என்னும் கருத்தில் எதுவும் இங்கு கூறப்படவில்லை. இதை ஒரு நடுநிலைக் கருத்தாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இக் காப்புப் பாடலில் வரும் "ஐந்து கரத்தனை" என்பது முதல் "நந்திமகன் தனை" என்பது வரையுள்ள பகுதிகள், விநாயகப் பெருமானுடைய உருவத் திருமேனியைக் குறித்துள்ளது. ஞானத்தின் கொழுந்து என்பது அருவத் திருமேனியைக் குறிப்பது. அடி

*அசட்டுத் துணிவுடன் எதுவும் எடாதே. ஆழச் சிந்திக்காமல் செயலில் ஈடுபடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அருவுருவத் திருமேனியைக் குறிப்பது. இதில் தந்தம், கரம், முகம் ஆகிய மூன்றினையும் கூறி, சிவனுக்கும் இவருக்கும் தந்தை, மகன் முறையும் கூறலின் அது உருவத் திருமேனியின் இயல்பையும், ஞானத்தின் கொழுந்து என்பது புலப்படாத அறிவுருவமாக இருத்தலும் அது அருவ இயல்பையும், அடி என்பது திருவடி திருவருள் என இரண்டு பொருள் கொள்ளத்தக்கது. எனின் இது அருவுருவ இயல்பினையும் உணர்த்தி நிற்கின்றன. விநாயகர் சிவபெருமானது சக்தி அம்சமாகத் தோன்றிய ஒரு மூர்த்தமே. அதனால் விநாயகர் சிவகுமாரர் என்றும் சொல்லப்படுவர். இவர் சிவத்தின் வடிவினர் அன்றி சிவத்தின் வேறல்லர். உலகங்கள் தோன்றுவதற்கு முதற் காரணம் பிரணவம் ஆகும். பிரணவத்தை மகாமாயை எனவும் சொல்வர். அதன் தலைமையாய் இருக்கும் சிவசக்தியே விநாயகர் ஆவார். “தனக்கு மேலான தலைவர் வேறு ஒருவர் இல்லை” என்னும் பொருள் உணர்த்துவது விநாயகர் என்னும் பெயர். “தாரகப் பிரமமான மாக்கய முகத்து வள்ளல்” என விநாயகப் பெருமானைப் பற்றிக் கந்தபுராணம் கூறியுள்ளது. இவ் வாக்கியம் விநாயகரது வடிவத்தை உணர்த்துகின்றது. பிரணவத்தின் வரிவடிவம் பற்றி காமிக ஆகமம் கூறியுள்ளது. அவ் வடிவமே “பிள்ளையார் சுழி” என விளங்கி வருகின்றது. அது “உ” என்னும் அடையாளமாகும். இந்த எழுத்தில் உள்ள வட்டம் விந்து சக்தியையும், கோடு நாதமாகிய சிவத்தையும் அதாவது சிவசக்தி ஆகிய இரண்டையும் அடக்கியுள்ளது. பிள்ளையார் சுழி ஊமை எழுத்து என்றும் “மூலமனு” என்றும், மௌனாக்கரம் என்றும் கூறப்படும்.

விநாயகர் பிரணவ வடிவினர் என்பதைக் காட்டவே, வட்டப்பொருள்களாகிய தேங்காய், மோதகம், மாதுளம்பழம் முதலிய வட்டப் பொருள்கள் விநாயகருக்கு நிவேதிக்கப்படுகின்றன.

விநாயகரின் ஊர்தி (வாகனம்) பிருச்சாளியாகும். அவர் எப்போதும் அதில் அமர்ந்திருப்பார். விநாயகருக்கு மூன்று கண்கள் உள்ளன. நெற்றியில் உள்ள ஒரு கண் மூன்றாவது கண்ணாகும். இவை இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்றையும் குறிப்பனவாம். விநாயகரைப் பூசித்து அரிய பேறு பெற்ற ஒருவர் பெண் புலவராகிய ஔவையார் ஆவார். அவர் விநாயகரைப்பற்றி விநாயகர் அகவல் பாடியுள்ளார்.

விநாயகரை அர்ச்சிக்க அறுகம்புல் மிக உகந்தது. நிலத்தில் படரும் அறுகம்புல்லை அவர் விரும்புவார். ஏனைய தெய்வங்களுக்கு பூ, மரங்களின் மேல் மலர்ந்திருக்கும் மலர்கள் உகந்தவைகளாக இருக்கும்போது, விநாயகருக்கு நிலத்தில் படரும் அறுகம்புல் மிக உகந்த பொருளாக உள்ளது. அது அவரது எளிமையான அருள்வழங்கும் பேறு ஆகும். மலர்களாலும் விநாயகரை அர்ச்சிக்கலாம். துளசி தவிர்ந்த ஏனைய மலர்களால் விநாயகரை அர்ச்சிக்கலாம். விநாயக விரதங்கள்; வெள்ளிக்கிழமை, விநாயகர் சதுர்த்தி, விநாயகர்சட்டி என மூன்றாகும். வளர்பிறைச் சதுர்த்தி மாதந்தோறும் வருவது. இது விநாயகருக்கு உகந்த விரத நாளாகும். ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தி விநாயகப் பெருமானுக்குரிய மிகச் சிறந்த பலன் கொடுக்கும் விரதமாகும். அந்நாளில் இளம் பிறைச் சந்திரனைப் பார்த்தல் கூடாது.

*மனிதனுக்கும் மிருகத்துக்குமிடையில் உள்ள திரைதான் அறிவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரை வழிபடும் நாடுகள் தமிழ்நாட்டுக்கு மட்டும் இவர் வழிபாடு சொந்தமல்ல. விநாயகர் வழிபாடு வெவ்வேறு பெயர்களில், உருவங்களில் இந்திய நாட்டிலும் மற்றும் சாவகம், போர்ணியோ (இந்தோனேசியா), தீபெத், பர்மா, சீயம், சீனா, யப்பான், இந்தோசீனா மற்றும் தமிழர் வாழும் நாடுகளில் விநாயகருக்குக் கோவில்களும் வழிபாடுகளும் உள்ளன. விநாயகர் பிறந்த நாள் ஆவணி மாதச் சதுர்த்தி வளர்பிறை. வன்னி மரத்தின் இலைகள் விநாயகரை அர்ச்சனை செய்ய மிகச் சிறந்த பச்சிலையாகும். விநாயகர் என்னும் பெயர் வடமொழிப் பெயராகும். தமிழ் மொழியில் வழங்கும் அவரது திருப்பெயர் "பிள்ளையார்" என்பதாகும். விநாயகரின் பெற்றோர் சிவன், பார்வதி (மூலப் பொருளின் மூலமானவர்கள்)

விநாயகரின் சகோதரர்கள்; முருகன், ஐயப்பன், வீரவாகு, உமாதேவியாரின் காற் சிலம்பிலிருந்து தெறித்த நவரத்தினங்களில் உருவான நவ கன்னிகைகளின் பிள்ளைகள் ஒன்பது பேர் பிள்ளையாருடன் சேர்த்துச் சிவனுக்குப் பதின்மூன்று பிள்ளைகள், பன்னிருவர் அப்பா பிள்ளைகள், விநாயகர் மாத்திரம் அம்மா பிள்ளை, விநாயகப் பெருமானுக்கு மனைவியர் இச்சா சக்தியான சித்தி, கிரியா சக்தியான புத்தி, ஞான சக்தியான வல்லபை, இவர்கள் தவிர மகாவிஷ்ணுவின் புத்திரிகளான பன்னிரண்டு பேர் விநாயகரின் புத்திரர்கள் (மகன்கள்) இருவர். அவர்கள் ஷேமம், லாபம் என்ற இருவர். இவர்களுக்கு சித்திராங்கதன், புத்திராங்கதன் என்னும் பெயர்களும் உண்டு. விநாயகரின் மாமன் மகாவிஷ்ணு எனப்பட்டுள்ளார். விநாயகரின் இருப்பிடம் ஆனந்தபுவனம். இந்த இடம் திருக்கையிலாயத்தின் ஒரு பகுதியாகும். மற்றும் விநாயகர் உறையும் இடங்கள் ஆற்றங்கரை, குளக்கரை, மரத்தடி, வீதி முச்சந்திகள் ஆகியன. விநாயகப் பெருமானின் வாகனங்கள் மூஷிகம் (பெருச்சாளி) சிங்கம், மயில், குதிரை, யானை, ரிஷபம் முதலியன கிருதயுகத்தில் சிங்கம், திரேதா யுகத்தில் மயில், துவாபர யுகத்தில் மூஷிகம், கலியுகத்தில் குதிரை. விநாயகருக்குப் பிடித்த கனி மாம்பழம், மாதுளை. பிடித்த பலகாரம் கொழுக்கட்டை மோதகம். பாரதம் எழுதவும், கஜமுகனை அழிக்கவும் தனது தந்தம் ஒடித்தார். காவிரி ஆற்றினைப் பூவுலகில் பாயச் செய்தார். இவ் ஆறு இந்தியத் தமிழகத்தில் பாய்கிறது. விநாயகர் ஒளவைக்கு அருள் கொடுத்தார். மற்றும் அகத்தியர், அரசர்கள், அடியார்கள் ஆகியோருக்கும் அருள் கொடுத்துள்ளார். ஆணவம், கன்மம், மாயை நிறைந்த அசுரர்களை அழித்தார். விநாயகர் திரு அவதாரம் செய்ததன் நோக்கம், தன்னை நினைந்து செய்யும் (தொடங்கும்) செயல்களில் குறுக்கிடும் தடைகளைத் தகர்த்தெறிந்து பக்தர்கள் எண்ணிய எண்ணங்கள் நிறைவேற அருளுதல்.

விநாயகரை வழிபடும்போது நெய்த்தீபம் ஏற்றி வழிபாடு செய்தல் சிறப்புடையது. அத்துடன் சிதறுதேங்காய் அடித்தல் (சூரைத்தேங்காய்), அறுகு சாத்துதல், விநாயகரை வலம்வருதல், தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுதல் ஆகிய வழிபாட்டு முறைகள் விநாயகர் முன்னிலையில் செய்தல் சிறப்புடையன. வெள் எருக்கில் செய்த விநாயகர் வடிவம் வழிபாட்டிற்கு மிகவும் உயர்ந்தது. மஞ்சள், சந்தனம், மலர் முதலியவற்றால் அமைந்த திருவுருவங்கள் வழிபாடு முடிந்தவுடன் தூய நீரில் விடுவதற்குரியன. கருங்கல்,

*கோபமாகப் பேசும்பொழுது அறிவு தன் முகத்துக்குத் திரையிட்டுக் கொள்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன், வெள்ளி, செம்பு, பளிங்கு முதலியவற்றால் செய்யப்பெற்ற விநாயகர் திருவுருவங்கள் வழிபடப்படல் உகந்தது. மாக்கல் கொண்டு அமைக்கப்பெற்ற திருவுருவங்கள் வழிபாட்டிற்கு நல்லதல்ல. மரத்தாலும், களிமண்ணாலும் செய்த திருவுருவங்கள் மற்றும் விநாயகரின் ஓவியங்கள், படங்கள் என்பவை மலர் இட்டு மட்டும் வழிபடலாம்.

கற்பக விநாயகர் சிறப்புடைய பல சித்திகளைத் தருவார். சித்தி விநாயகர் நமக்கு அருள்பாலிப்பார். ஏனைய வடிவங்கள் வடிவ வேறுபாடுகளேயன்றி அருட்கடாட்சத்தை வழங்கிக் கொண்டிருக்கும் தெய்வங்களே. தமிழகத்தில் அமைந்துள்ள பிள்ளையார்பட்டி கற்பக விநாய கருக்கு தினமும் நூற்றெட்டு (108) மோதகங்களைப் படைக்கின்றனர். சதுர்த்தி அன்று பதினெட்டுப்படி அரிசியில் ஒரு மோதகம் செய்து அங்கு படைக்கின்றனர். மூன்று நாட்களில் இதைச் செய்து, பத்துப்பேர் அம் மோதகத்தைத் தூக்கி வந்து கற்பக விநாயகரின் முன் படைத்து வழிபட்டு, மறுநாள் அதைப் பக்தர்கள் அனைவர்க்கும் வழங்குகின்றனர்.

(தொடரும்...

## மஹாளய சிரார்த்தம்

மனித வாழ்க்கையில் பிதிர் வழிபாடு மிக இன்றியமையாதது. புராண, இதிகாச, ஆகமங்கள், தோத்திரப் பாடல்களில் வழிபாட்டின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. மஹாளயம் என்பது மகான்களாகிய பிதிர்கள் பூவுலகில் தங்கும் காலம் மஹாளயம் என அழைக்கப்படும். புரட்டாதி மாத அபரபட்சமே (தேய்பிறை) மஹாளய பட்சத்தினம் ஆகும். இக் காலத்தில் யமதர்மராஜன் தன்னிடமுள்ள பித்ருக்களைப் பூமிக்குச் செல்லும்படி உத்தரவு இடுவார். பிதிர்லோகம் நீங்கிய பிதிர்கள் தமது பாவ வினைகளை எண்ணியவாறு பசியினாலும் தாகத்தினாலும் தமது பிள்ளைகள் முதலியோரின் இல்லம் நாடி பூவுலகில் தமக்கு நெய், தேன், பாயாசம், எள்ளுடன் நீர் என்பன கிடைக்கமாட்டாதா என ஏங்குவார்கள். எனவேதான் அந்த பிதிர்கள் தங்கும் பதினைந்து நாட்களுக்குள் ஒரு நாளாவது மஹாளய விதிப்படி அன்ன சிரார்த்தம் செய்ய வேண்டும்.

இக் காலத்தில் செய்யும் தர்ப்பணமும் மஹாளய சிரார்த்தமும் சிறப்பானதாகும். சிரார்த்தம் செய்யாமல் இருந்தால் பிதிர்களுடைய சாபம் நமக்கு ஏற்படும். வருடத்தில் நாம் செய்யும் பிண்ட தர்ப்பணங்கள் அவர்களுடைய பசியையும் நீர் வேட்கையையும் போக்குகின்றன. நம்மைப் பெற்றவர்களுக்கு வாழுங் காலத்தில் மட்டுமன்றி இறந்த பிறகும் நாம் செய்யும் நன்றிக்கடனே சிரார்த்தமாகும். மஹாளய பட்சத்தில் எல்லா பித்ருக்களும் ஒன்றுகூடுவது என்பது பொருள். பித்ருக்களுக்கு நமது ஒரு வருடம் ஒரு நாள் ஆனதால் நாம் அவர்களுக்குச் செய்யும் சிரார்த்தம் அவர்களுக்கு தினம் உணவு கொடுப்பதுபோலவே. பித்ருக்களை வள்ளுவர் தென்புலத்தார் என்ற சொல்லால் அழைக்கின்றார்.

தேவர்களைப் பிரீதி செய்வதற்கு ஹோமங்கள், யக்ஞங்கள் செய்யவேண்டும். பித்ருக்களைப் பிரீதி செய்வதற்கு சிரார்த்தம், தர்ப்பணம் ஆகியன செய்யவேண்டும். தெய்வ காரியங்களுக்கு பக்தி வேண்டும். பித்ரு காரியங்களுக்கு சிரத்தை வேண்டும். சிரத்தையின்மை பெரும் பாவம். சிரத்தை பாவத்தை அகற்றும். மஹாளய பட்சத்தில் ஒரு நாளிலாவது பிதிர்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம் கூறுகிறது. எனவே மஹாளய பட்சத்தில் நாம் தர்ப்பணமும் மஹாளய சிரார்த்தமும் செய்து மகான்களாகிய பிதிர்களின் பிரீதியைப் பெறுவோம்.

-பொ. திலகவதி-

*உனக்கு நிகழும்வரை எல்லாமே வேடிக்கைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 12

(தொடர்ச்சி...

# கடவுளும் பிரபஞ்சமும்

- திரு பூ. சோதிநாதன் அவர்கள் -

### 14) உயர்ந்த பக்தன்

கடவுளின் மிக உயர்ந்த பக்தன் ஒருவன் கடவுளிடம் இருந்து எதையும் கேட்காதவன் ஆவான். அவன் அறிவையோ, தெளிவையோ, துன்ப நீக்கத்தையோகூடக் கேட்காதவன் ஆவான். அப்படியான பக்தர்களைக் கண்டுபிடிப்பது மிக அருமை. ஏதோ ஒன்று எப்போதும் தேவை என்ற வகையிலேயே எமது மனம் உருவாக்கப்பெற்றுள்ளது. எந்த ஒரு தேவையும் இல்லா மனதின் நிலையைக் கற்பனை செய்வது மிகவும் கடினம். கடவுளிடம் இருந்து கடவுள் நிலையை மட்டுமே கேட்பது மிக உயர்ந்த பக்தியாகும். சிந்தனை செய்யும் ஒரு மனதுக்குப் பக்தியின் இந்தவகையே உயர்வானது என்ற தெளிவு வேண்டும். ஏனெனில் கடவுளிடம் எதனையும் கேட்பதோ, கடவுளுக்கு வெளியே உள்ள எதையும் பெறுவதற்காக அவரை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதோ அவரை அவரது பூரணத் தன்மையில் இருந்து குறைத்துவிடுவதாகவே அமைந்துவிடும். ஆசைகளை நிறைவேற்றும் ஒரு கருவியாகக் கடவுள் இருப்பின் அப்படியான கடவுள் தனது உயர்ந்த நிலையில் இருந்தோ, இறுதி உண்மையில் இருந்தோ நீங்கியவராவர். அப்படி அல்லாவிடில் நாம் கேட்பது கடவுளைக் காட்டிலும் சிறந்த ஒன்றைக் கேட்பதாக அமைந்துவிடும். கடவுள் எல்லாவற்றுக்கும் மேலானவர் என்று அறிவது எல்லா அலுவல்களையும்விட உயர்ந்தது என்பதை உணரவேண்டும். அத்துடன் கொடுக்கின்ற ஒருவர் கொடுப்பதைவிட மேலானவர் ஆவர். அவ்வாறு கடவுளைப் பூரணமானவர் என்று அறிபவர் ஞானி ஆவார். இந்த உண்மையை எமது இதயங்கள் ஏற்குமாயின், கடவுளிடம் இருந்து வருகின்ற எல்லாவற்றைக் காட்டிலும் அவர் மேலானவர் என்பதை உணரலாம். அதனை உணர்ந்தபின் அவருக்கு நிகரான ஒருவகைப் பக்தியிலேயே நாம் மூழ்குவோம். அங்கு அறிவு இருப்பாக வந்து அமைகிறது.

### 15) இருப்பு

இருத்தலில் இருந்து அறிவைப் பிரிக்கமுடியாதபோது நாம் ஓர் உணர்வுநிலையில் இருப்பவர்கள் ஆவோம். அந்த உணர்வுநிலை ஆன்மிக அநுபவத்தின் மிக உயர்ந்த வகையாகும். பகவான் “இவர்கள் எல்லோருமே ஆச்சரியமான பக்தர்கள் ஆவர் என்றும்

*நீ ஏழையாக பிறப்பது உன் தவறில்லை. நீ ஏழையாக சாவதுதான் உன் தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானி நானாகவே ஆகிறான் என்பதால் அவன் மிக உயர்ந்தவன் என்றும்" கூறுகின்றார். கடவுள் எங்குமுள்ளவர் என்ற கருத்தில் ஆழ்ந்து இலயிக்கின்ற ஒருவர் கடவுளது இருப்பின் மேலான பூரணத்துவம் பற்றிய எண்ணத்தில் கூட ஆனந்தம் அடையக் கூடியவராவர். எனவே, அவர் உடனடியாக ஒரு கணத்திலேயே எல்லாவற்றையும் அடைந்தவர் ஆகிறார். அவர் கடவுளின் இருப்போடு தானும் சேர்ந்தவர் ஆகிறார். அத்துடன் அவர் வாழ்க்கைக்கு வேண்டுமென எப்பொருளையும் விரும்பாதவர் ஆவார்.

## 16) பயபக்தி

கீதையின் ஏழாவது அத்தியாயத்தில் வழங்கப்பெறும் மேலே குறிப்பிட்ட இவ் விளக்கங்கள் பிரபஞ்சத்தின் படைப்பாளி என்ற முறையில் கடவுளின் இருப்பைப் பிரபஞ்ச நோக்கில் அணுகுவதாக அமையும். கடவுளின் இருத்தலோடு மற்றைய எல்லா இருத்தல் களையும் ஒன்றாக்கும் கடவுள் பற்றிய உயர்ந்த கருத்தாக்கத்தைக் கீதையின் ஏழாவது அத்தியாயம் கூறுகிறது. எனினும் அது கடவுளை எம்மிடமிருந்து சற்றுத் தூரத்திலேயே வைத்துவிடுகிறது. இதனால் நாம் கடவுளைப் மிகப்பிரமாண்டமான, பயங்கரமான பிரபஞ்ச ஆற்றல் என்று உணர ஆரம்பிக்கின்றோம். அத்துடன் கடவுளுக்கான எமது அன்பும் பயத்தோடு கூடியதாகவே அமையவேண்டி நேரிடுகிறது. இதனால் நாம் ஆச்சரியத்துக்கு உள்ளாகிறோம். அப்படிப் பிரமாண்டமான ஒருவரின் பிரசன்னத்தை எதிர்கொள்வதுகூட எமக்குச் சாத்தியமில்லை என்று உணருகின்றோம். அன்பில் பயப்படுவதற்கு எதுவுமில்லை. பக்தி பற்றிய சிந்தனை முறைகள் இருவகையாகப் பாகுபடுத்தப்படும். கடவுளை உயர்ந்த தலைவராக, எல்லாவற்றுக்கும் மேலான பயத்தையும் மதிப்பையும் வேண்டுபவராகக் கருதுவது ஒருவகையாகும். இரண்டாவது வகை, கடவுளை மிகவும் அன்பு செய்யப் பெறுபவராகக் கருதுவதாகும். கடவுள் தனது படைப்புக்கள் என்ற வகையில் தன்னால் கட்டுப்படுத்தப்படும் எல்லாப் பொருள்களில் இருந்தும் தன்னை ஒருவகையான தூரத்தில் வைத்துப் பேணி வருகின்றார். கடவுள் பற்றிய பயம் அவரது ஆற்றலினால் ஏற்பட்டதாகும். சமுத்திரம் பற்றி எமக்கு ஒரு பயம் உண்டு. அதனால் நாம் அதற்குக் கிட்டப் போக விரும்புவதில்லை. அதற்கான காரணம் பிரமாண்டமான அளவும், விரிவுமாகும். எமக்கு மேலே உள்ள ஆகாயத்தைப் பார்க்கும்போது நாம் பயப்படுகின்றோம். ஆகாயத்தின் விரிவு சிந்திப்பதற்குக்கூட முடியாமல் இருக்கின்றது. அதனைத் தூரத்தில் இருந்துகொண்டு நெடுநேரம் உற்றுநோக்க முடியாமல் ஓரளவின்பின் நாம் எம்பாட்டில் அமைதி அடைகின்றோம். எம்மிடமிருந்து சூரியன் உள்ள தூரத்தைக் கண்டு நாம் பயப்படுகின்றோம். பிரபஞ்சத்தின் அளப்பரும் தன்மை, பருமன் என்பன எம்மைப் பயமுறுத்துவதாகவே உள்ளது. ஒருவகைப் பக்தியில் கடவுள் பற்றிய கருத்து இவ்வாறுதான் உள்ளது. அதனை "ஐஸ்வர்ய பிரதான பக்தி" என்று அழைப்பர். அதாவது கடவுளின் பெருமைகள், புகழ்கள் என்பவற்றை உணருவது இந்தவகைப் பக்தியின் பிரதான அம்சமாகும்.

*பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும்போதுதான் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17) அன்பு

இன்னொருவகைப் பக்தியும் உண்டு. அது ஒருவர் தனது இதயத்தின் உள்ளேயே ஓர் உண்மை எனக் கடவுளைக் கருதும் அன்பாகும். அவர் கடவுளைத் தன்னிலிருந்து வேறாகப் பிரிப்பதில்லை. அவர் தனக்கு அருமையானவை எல்லாவற்றைக் காட்டிலும் கடவுள் அருமையானவர் எனக் கருதுவார். அத்துடன் அவர்தான் அன்பு செலுத்தக்கூடிய பொருள்கள் எல்லாவற்றைக் காட்டிலும் கடவுள் அன்பை உயர்வானதாகக் கருதுவார். மேலும், இனிமையான எல்லாப் பொருள்களைக் காட்டிலும் கடவுள் இனிமையானவர் என்று அவர் கருதுவார். பக்திச் சிந்தனை முறைகளுள் இதனை "மாதுர்ய பிரதான பக்தி" என்று அழைப்பர். இங்கு கடவுளின் ஆற்றலுக்கு முன்னால் எதுவித ஆற்றலும் இல்லாதது போன்ற ஆத்மா அன்பில் கரைந்து உருகிக் கடவுளை நோக்கி விரைந்து செல்லும். எனினும் கடவுளைப் பொருத்தமான அவரது வடிவிலும், அவரோடு உள்ள உறவிலும் நாம் புரிந்துகொள்ளும்போது எமது ஆன்மா என்றே அவரை அன்பு செய்வதன்றி வேறெதுவும் செய்யமுடியாது. ஆனாலும் அவர் நமது ஆன்மா என்று உணரமுடியாமல் இருப்பதற்குக் காரணம் நாம் மிகச் சிறிய தனி மனிதராக இருப்பதினாலேயே ஆகும். அத்துடன் நாம் கடவுளுக்குப் பயந்தவர்களாக இருக்கின்றோம். எனினும் கடவுளின்றி எமக்கு எதுவும் சாத்தியம் இல்லை என்றும் கருதுகின்றோம்.

## 18) பக்தியின் இனிமை

கடவுளின் இருப்பே எமது இருப்பும் என்று நாம் கருதுகின்றோம். மேலும், அவரே நமது ஆன்மா என்றும் நம்புகின்றோம். அவருக்கான எமது அன்பு எமது மற்றைய எல்லா அன்புகளைக் காட்டிலும் உயர்ந்த எமது சொந்த அன்புக்கு இணையானது. பக்தியின் இனிமை என்பது ஆன்மாவில் இருந்து கடவுளைப் பிரிக்க முடியாது என்பதை ஏற்றுக் கொள்வதில் இருந்தே வருகிறது. கீதை கருதும் நான்கு வகையான பக்தர்களைப்பற்றி உள்ள சில சுலோகங்களின் போதனை குறிப்பிடுவன இவையே.

## 19) தகுதி உள்ளவர்களா?

அன்பிலும் பக்தியிலும் எவ்வளவு உயர ஒருவர் செல்கிறாரோ அவ்வளவுக்குக் கடவுளுக்கும் அவருக்கும் இடையேயுள்ள தூரம் குறைகிறது. இறுதியில் அத்தூரம் முற்றாக இல்லாமல் போகிறது. அதன் விளைவாக மிக உயர்ந்த புறப்பொருளாக இருந்த கடவுள் பிரபஞ்சத்தின் ஆன்மா என்ற மிக உயர்ந்த அகப்பொருளாக வந்து அமைகிறது. கீதையின் ஏழாவது அத்தியாயத்தில் இருந்து முன்னேறி அடுத்த அத்தியாயங்களுக்குச் செல்லும்போது எங்களில் இருந்து கடவுள் நிற்கும் பயங்கரமான தூரம் படிப்படியாகக் குறைகிறது. பின் ஒரு கட்டத்தில் நாம் மற்றெல்லாவற்றையும் விடுத்துக் கடவுளைப் பார்க்கும்போது அங்கே நாம் இருக்காத ஒரு நிலை வந்து அமைகிறது. நாம் இந்த வாழ்விலேயே கடவுளை அடையத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறோமா? "ஆம், இந்தப் பிறவியிலேயே கடவுளின்

*தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பில் கலந்து கொள்ளப் போகிறோம்" என்று ஒருவர் தனது இதயத்தைத் தொட்டுக் கூறுவாரா? அல்லது "நல்லதே ஆயினும் அது எனக்குரியதன்று" எனச் சந்தேகிப்போமா? இந்தச் சிக்கல் கீதையின் எட்டாவது அத்தியாய ஆரம்பத்தில் மிக அழகான முறையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

## 20) பகவானின் குறிப்பு

எல்லாவற்றையும் உள்ளடக்கிய இக் கருத்தை அநுபவிப்பது பற்றிக் கூட எம்மில் பலரும் வித்தியாசமாகவே உணருவோம். அந்த எண்ணத்தினாலே கூட நாம் பயமுறுத்தப் படுவோம். அந்தப் பேருண்மையோடு எதுவித தொடர்பும் இன்றி இந்த உலகில் இருந்து நாம் நீங்கலாம் என்பதே அதன் அர்த்தமாகும். நாம் இறக்கும்போது என்ன நடக்கப்போகின்றது? கடவுளை நோக்கிய ஆன்மாவின் இந்தப் பெரும் பாதையில் எமக்குக் கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் எவை? கடவுளை அடைவது அல்லது அவரோடு தொடர்புகொள்வது பற்றிய சாத்தியக்கூறில் ஒரு சிறு நம்பிக்கையாவது எம்மால் கொள்ளக்கூடியதாக இருக்கிறதா? அன்றேல் பூச்சி புழுக்கள்போல எதுவித நம்பிக்கையும் இன்றி நாம் இறக்கவேண்டுமா? இந்த வினாவுக்கு விடைதருமுன் பகவான் எமக்கு பிரபஞ்ச இலட்சியங்களின் இன்னொரு தொகுதியை அறிமுகம் செய்து வைக்கின்றார். முன்னதற்கான நேரடி விடை அவரிடமிருந்து உடனடியாக வரவில்லை. இக்கருத்தின் அறிமுகம் அர்ச்சுனனின் வாயில் இருந்தே வருகின்றது. அவன் இவை எல்லாம் எவற்றைக் கருதுகின்றன என்று அவரிடம் வினவுகின்றான். ஏழாவது அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் பகவானின் குறிப்பு வார்த்தைகளில் இருந்து அவன் பெற்றுக்கொள்வது அந்த விடயமாகும்.

## 21) அர்ச்சுனனின் வினாக்கள்

பிரமம் என்றால் என்ன? பூரணம் என்றால் என்ன? பிரபஞ்சம் என்றால் என்ன? சீவான்மா என்றால் என்ன? இவற்றுக்கு இடையே உள்ள தொடர்பு யாது? இந்த வாழ்க்கையில் சாத்தியமில்லை என்றாலும் எமது உடலைவிட்டபின்னர் உண்மையோடு நாம் தொடர்பு கொள்ளுவதற்கு மேற்கொள்ளவேண்டிய வழி எது? இந்த வினாக்கள் தொட்டுநிற்கும் விடயங்கள் ஏறத்தாழ எல்லாத் தத்துவங்களையும் பற்றியனவாய் இருக்கின்றன. எமது இந்த ஆயுள்காலத்தில் கடவுளைக் காணும் நம்பிக்கை எம்மிடம் இல்லை. அவ்வாறாயின், கடவுளைக் காண்பது முற்றும் ஒரு சாத்தியம் இல்லாத விடயமா? மரணத்தின் பின்னாவது கடவுளோடு தொடர்புகொள்வதோ, அவரது புகழைக் காணும் சாத்தியமோ இருக்கின்றதா? எமது தூல உடலை இவ்வுலகில் விட்டபின்னர் கூட நாம் துன்பப்படுபவர்களாகத்தான் இருக்கவேண்டுமா? கீதையின் எட்டாவது அத்தியாயத்தில் உள்ள அர்ச்சுனனது கேள்வி களுக்குப் பின்னாலுள்ள குறிப்புக்களே இவை யாவும். இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்குப் பகவான் தரும் விடைகளைப் புரிந்துகொள்ள நாம் சிறிய அளவு நேரம் எடுக்கவேண்டி உள்ளது.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நா நலம் பேணுவோம் நலமாக வாழ்வோம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இப் பரந்த பூமியில் வாழுகின்ற மனிதர்களுட் பலர், உணவினை உண்டு உவகை கொள்வதற்காகவே உயிர் வாழுகின்றனர். உணவு, உடை, உறையுள் என்பன, இவ்வுலகில் வாழ்வதற்கு அத்தியாவசியமான தேவைகள் என்பதை மறுப்பதற்கில்லை. அதேவேளை அவற்றில் அளவு, முறை பேண வேண்டியது அவசியம் ஆகும்.

"வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்கிறார் மகாகவி பாரதியார்.

உண்பதும், உறங்குவதும் உல்லாசமாக வாழ்வதுமன்றி வேறொன்றுமறியாத பலரை, இவ்வுலகில் நாம் காண்கின்றோம். அவர்கள் பூமிக்குப் பாரமாகவும் எவர்க்கும் பயனற்றும் விளங்குகின்றனர். மனிதர்கள் வாழ்ந்தால், நாலுபேர் மதிக்கப் புகழோடு வாழவேண்டும். அதேவேளை சமூகத்தவர்க்குப் பயன் உள்ளவர்களாகவும் விளங்கவேண்டும்.

தோன்றில் புகழொடு தோன்றுக அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

-திருக்குறள்.

ஒரு துறையில் ஈடுபாடுகொண்டு விளங்குவதானால் புகழோடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்கு தோன்றுவதைவிடத் தோன்றாமலிருத்தல் நன்று என்பது இக் குறள் தரும் கருத்து ஆகும்.

"உணவு மிகினும் நோய் செய்யும்" என்பது ஆன்றோர் வாக்கு. அதேவேளை குறையினும் நோய் செய்யும். எனவே, உணவு உண்பதில் அளவு, முறை பேணி வந்தால் நோயற்ற வாழ்வை வாழலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" வாழ்வில் அளவுக்கு அதிகமாக உணவை உண்பதும் நீண்ட நேரத்தை உறக்கத்தில் கழிப்பதும், நீண்டகாலத்தை மது, போதைப் பொருள் பாவனையில் கழிப்பதும் தமக்குத் தாமே இழைக்கும் மாபெரும் தீங்கு ஆகும். இன்னும் சொல்லப்போனால் அது தற்கொலைக்குச் சமம். பெருந் துரோகமும் ஆகும்.

மனிதன் ரோகியாவதும் போகியாவதும் யோகியாவதும் பெரும்பாலும் உண்ணும் உணவிலும் உறக்கத்தின் நேர அளவிலும், வாழும் முறையிலுமே தங்கியுள்ளது.

தற்காலத்தில் பல்வேறு விதமாக நோய்களினால் பீடிக்கப்பட்டு வருந்துவோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. முக்கியமானது தவறான உணவு முறையாகும். மற்றையது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் தவறான நேர ஒழுங்குமுறை. நேரங்கெட்ட நேரத்தில் உண்பது, இரவு உணவைத் தவிர்ப்பது, இரவில் நடுநிசியில் உண்பது; காலை உணவை நேரம் பிந்தி உண்பது. இவை பெரும்பாலும் அஜீரணக் கோளாறுகளுக்கு வழிவகுக்கும். முக்கியமாக முதியோருக்கு, உணவு உண்பதிலும், உண்ணும் உணவின் அளவிலும் தரத்திலும் கவனமும் கட்டுப்பாடும் மிக அவசியம். காலம், நேரம், வகை, தொகை என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாமல்; வாய்க்குச் சுவையாக இருக்கிறது; என்பதன் காரணத்தால் உணவை மிகையாக உட் கொண்டால் அதனால் அஜீரணம் ஏற்பட்டு, மரணம் வரை துன்பப்படவேண்டிவரும்.

மேலும் அன்னதானம், திருமணம், அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியம், குருபூசை, சிவபூசை, வருடப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல் தொடர்பாகத் தமது இல்லங்களிலும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தவர் இல்லங்களிலும் மடாலயங்கள், சத்திரம் மற்றும் ஆலயங்களிலும் நடைபெறும் அன்னதானங்கள், விருந்து உபசார வைபவங்கள் ஆகியவற்றிலும் அளவுக்கு அதிகமாக உண்பதால், பலருக்கு அஜீரணக் கோளாறுகள் ஏற்பட்டு, மரணம்வரை கொண்டுசெல்லக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. அதனால், உண்ணும் உணவில் அளவு, பிரமாணம், கால, நேரம், உண்பவரின் உடல்நிலை, மற்றும் வயது என்பவற்றை அநுசரித்து உணவு உட்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எனவேதான், உணவு உண்பதற்கும்; அளவு, நேரம், உணவின் தரம் என்பவற்றைப் பேணுதல், அநுசரித்தல் மிக அவசியம்.

மனிதன் ரோகியாவதும் போகியாவதும் யோகியாவதும் பெரும்பாலும் உண்ணும் உணவின் வகையிலும் அளவிலும் மற்றும் உண்ணும் நேரத்திலும்தான் பெரிதும் தங்கியுள்ளது. மேலும் உணவினை ஆக்கும்போதும் பரிமாறும்போதும், உண்ணும் போதும்; சம்பந்தப்பட்டவர்கள் சுத்தம் பேணவேண்டும்; அகப்புறத் தூய்மையராய் விளங்கவேண்டும்.

"உணவு மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்ற ஆன்றோர் வாக்குப் பொருள் நிறைந்தது. அதனை நாம் வாழ்க்கையில் அநுசரித்து வாழ்ந்தால் நோயின்றி வாழலாம். உயிரைக் காப்பதும் வாழ்விப்பதும் உணவுதான்; அதேவேளை மிகையாக உண்டாலோ அல்லது குறைவாக உண்டாலோ நோய்களை வருந்தி வரவழைப்பதாக முடியும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ஏனைய செல்வங்களான பொருட் செல்வம், கல்விச் செல்வம், அருட்செல்வம் யாவும் நோயுற்றவர்களால் அனுபவிக்க இயலாமல் போய்விடும்.

இன்று பெரும்பாலும் நோய்களின் பிடியில் சிக்கி அல்லற்படுவோர் தொகை, அதிகரித்துச் செல்கிறது. புதிய புதிய நோய்களும் வந்து சேருகின்றன. அவற்றுள் புதிய தொற்று நோய்களும் எங்கெங்கெல்லாமிருந்து வந்து சேருகின்றன. முறையற்ற உணவுப் பழக்கமே பெரிதும் காரணமாகின்றது. நேரந் தப்பி உண்பது; வகைதொகையின்றி அளவு தொகை பாராது முக்குமுட்ட உண்பது; பழுதுபட்ட உணவுகளை உண்பது அதனால் அஜீரணம் ஏற்படுகிறது. அஜீரணக் கோளாறுகள் நோய்களை வரவழைப்பது மட்டுமல்ல; மரணம் வரை இட்டுச்செல்கிறது.

*வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள், உடல் ஆரோக்கியத்துடனும் சமூக ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு நாக்கு என்னும் கருவியை மிகுந்த அவதானத்துடன் கையாள வேண்டியது இன்றியமையாதது. நாவிலிருந்து வெளிப்படும் கொடுஞ்சொல், மனிதர்களுக்கிடையிலான நல்லுறவைக் கெடுக்குந் தன்மையது. அதேவேளை, இன்சொல் குடும்பத்திலும் சரி; சமூகத்திலும் சரி நல்லுறவை வளர்க்கும் பண்பைக் கொண்டது. நல்ல கனிந்த கனியிருக்கக் காய் கவர்ந்து உண்பது போன்றது. இன்சொற்களை உரையாடலில் பயன்படுத்தாது, வன் சொற்களையும் பண்பில்லாத சொற்களையும் பயன்படுத்துவது என்கிறார் திருவள்ளுவர்.

இனிய உளவாக இன்னாது கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

-திருக்குறள் 100.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி, அல்ல மற்றுப் பிற.

-திருக்குறள் 95.

யாரிடத்திலும் அவர்கள் இன்புறத்தக்க இனிய சொற்களை வழங்குவோர்க்கு; துன்பத்தை மிகுதிப்படுத்தும் சொற்களை ஒருபோதும் வழங்காதிருப்போர்க்கும்; வறுமை என்பது இல்லையாகும் என்பது மேற்படி குறட்பா தரும் கருத்து ஆகும்.

அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

-திருக்குறள் 96.

பிறர்க்கு நன்மை தருவனவற்றை நாடி, இனிமை தரும் சொற்களையே பேசி வந்தால், பாவங்கள், பழிகள் தேய்ந்து குறைய; அறம் மற்றும் நற்செயல்கள் வளர்ந்து பெருகும்.

மனிதனின் நாக்குப் போன்று நன்மை செய்வாருமில்லை; அதேநேரம் தீமை புரிவாருமில்லை.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு.

-திருக்குறள் 27.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று கூறப்படுகின்ற ஐந்து வகை புலன்களின் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் தங்கியுள்ளது. இப் பரந்த பூவுலகம் என்பது இக்குறட்பாவின் கருத்து.

மனித மனத்தின் ஒரு கருவி, நாக்கு ஆகும். நாக்கு ஒருவருடைய வாழ்வினைப் பாதுகாக்கிறது; அதேவேளை பாதிக்கவும் செய்கிறது. அறுவைச் சிகிச்சை மருத்துவரின் கையிலுள்ள கூரிய கத்தி, ஒரு மனிதனின் உயிரைப் பாதுகாக்கிறது; ஆனால் ஒரு கொலைஞன் கையிலுள்ள கத்தி, ஒருவனின் உயிரைப் பறிக்கிறது. எந்தக் கருவியும் அதனைப் பயன்படுத்துபவரின் மனநிலையைப் பொறுத்தும் தேவையைப் பொறுத்தும் நன்மையையோ தீமையையோ செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கு என்ற புலன் சுவைத்தல், பேசுதல், ஆகிய இரண்டு முக்கிய தொழிற்பாடுகளில் ஈடுபாடு கொள்கிறது. இரண்டிலும் நன்மையும் தீமையும் உண்டு. மனிதன் நாக்கைக் கையாள்வதிலேயே தங்கியுள்ளது. உணவுப் பொருள்களில் அறு சுவைகளையும் சுவைத்து, உணர்ந்து நமக்கு உணர்த்துவது நாக்கு. அதன் மற்றைய தொழிற்பாடு ஒலியுடன் தொடர்புடையது. அதுவே பேசுதல் எனப்படுகிறது. மனிதன் ஒலியை நாவிலிருந்து பிறப்பிக்கிறான். இந்த ஒலியைப் பயன்படுத்தி, மொழியை ஊடகமாகக் கொண்டு மனிதன் தன் மனதில் எழும் எண்ணங்கள், சிந்தனைகளையும் உணர்ச்சி அலைகளையும்; கருத்துக்கள் மற்றும் முரண்பாடுகள் ஆகியவற்றையும் பிறருக்கு வெளிப்படுத்துகின்றான். ஆகவே தொடர்பாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றல் சாதனமாக, நாக்கு என்னும் கருவி அமைந்துள்ளது.

நாக்கு; அதன் சுவைத்தல், பேசுதல் தொழில்களை மேற்கொள்ளும் அதேவேளை ஒவ்வொரு தருணத்திலும் அளவும் முறையும் நன்கு கவனித்து அவதானமாகச் செயல்பட வேண்டும். தவறினால் ஆபத்து நேரிடும். பின்னர் கவலைப்பட்டுப் பயனில்லை. "அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு" என்பது முதுமொழி. அளவுமீறி உணவு உண்டால்; அதனால் ஏற்படுவது அஜீரணம்; அதன் விளைவு நோய், துன்பம் ஆகும்.

"நீ சீரணிக்கும் அளவுக்குள்ளாக, உணவு உட்கொண்டால், உணவை நீ சீரணிக் கிறாய். அதிகமாக உட்கொண்டால் உணவு உன்னைச் சீரணிக்கும்" இது அர்த்தமுள்ள அனுபவமொழி - மகா வாக்கியம். உணவில் அளவும் தரமும் சுத்தமும்; ஒழுங்கு மற்றும் நேர, கால முறைமையும் தவறினால் சீரணக் கோளாறும் நோய்களும் உண்டாகித் துன்பங்கள் துயரங்களைத் தரும். எனவே சுத்தமானதும், எளிமையானதும் சத்து நிறைந்தது மான உணவு வகைகள், தினசரி நம் உடல் விருத்திக்குத் தேவை. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உணவு மிகினும் குறையினும் உண்ணும் ஒழுங்குமுறை தவறினும் உடல் வளர்ச்சி குன்றும்; நோய்கள் ஏற்படும் மரணத்திற்கும் இட்டுச் செல்லும். அதனால் உணவு உண்பதில் அளவு, பிரமாணம், நேர காலம், தரம் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது மிக அவசியம்.

மேலும் அறுசுவைகளான இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு (உப்பு), துவர்ப்பு, கசப்பு, காரம் (உறைப்பு) இவற்றையும் மிதமாக அளவாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். "மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்ற திருவாக்கு என்றும் உண்ணும்போது, நினைவிலும் கருத்திலும் கொண்டிருக்கவேண்டியது நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு முன் நிபந்தனையாகும்.

"குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடங்கொடுத்தால் தொல்லைகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்" என்பது அனுபவம் மூலம் பெறப்பட்ட உண்மை ஆகும். அவ்வாறே நோய்க்கும் நாம் இடங்கொடுத்தால் அதன் பயனை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். அதனால் "நோய்க்கிடங்கொடேல்" என்ற அமுதவாக்குத் தோன்றியது. கேட்டு நடந்தால் உண்டு நல்வாழ்வு; அல்லது அனைவர்க்கும் தாழ்வு உறுதியாகிவிடும்.

மனிதனின் அற்புத சாதனைகளுள் தலையாயதாக, மொழிப்பண்பாடும் பயன்பாடும் விளங்குகின்றன. மொழியைப் பயன்படுத்தித் தொடர்பாடல் செய்தல்; மொழிமூலம் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி, நாகரிகம் மற்றும் பண்பாட்டு வளர்ச்சி; இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்த்துறைகள் சார்ந்த வளர்ச்சி; ஆன்மீகம், சமயம்சார் வளர்ச்சியும் விருத்தியும் என்பன விளங்குகின்றன. மொழிப் பயன்பாட்டினால் ஆக்கமும் கேடும் ஏற்படுவதினால் அதனை மிகுந்த அவதானத்துடனும் பின்விளைவுகளைக் கருத்திற் கொண்டும் அளவாகவும் தேவைக்கேற்கவும் மரியாதைப் பண்புநலம் பேணியும் பயன்படுத்த வேண்டும்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்கிறார் மகாகவி பாரதியார். வாக்கினிலே உண்டாகும் ஒளி, வாய்மை எனப்படுகிறது. அந்த அறிவு ஒளி அறியாமை இருளை நீக்குகிறது. "வாய்மை எனப்படுவது யாதெனின்; யாதொன்றும் தீமையிலாத சொலல்" என வாய்மைக்கு வரவிலக்கணம் வழங்குகிறார் திருவள்ளுவர். மற்றையோருக்கும் தனக்கும் உடனடியாகவோ, பிற்காலத்திலோ தீமையையோ தீங்கினையோ விளைவிக்காத, பயனுள்ள நயமான சொற்களைப் பேசுகின்ற அறம் வாய்மை எனப்படுகிறது. அப்பர் பெருமானும் "வாயே வாழ்த்துகண்டாய்" என்று நாவுக்கு நல்லுரை வழங்குகின்றார். நாவினை நாம் ஆளவேண்டுமே தவிர, நா நம்மை ஆள்வதற்கு அனுமதித்தல் ஆகாது. பிறரை வாழ்த்துவதற்கும் போற்றிப் பாராட்டுவதற்கும்; பிறருடன் இனிய வார்த்தைகளில் பேசுவதற்கும், நற்செய்திகளை வழங்குவதற்கும் அன்பாகவும் பண்பாகவும் உரையாடுவதற்கும்; ஆசிரியராகவிருந்தால் விளக்கமாகவும் விவரமாகவும் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் பாடங்களைக் கற்பிப்பவராகவும்; சொற்பொழிவாளர்கள் மற்றும் பிரசங்கம் செய்பவர்கள்; இசை, நாடகக் கலைஞர்கள், தத்தம் துறை சார்ந்த விடயங்களை எடுத்துக்கூறுவதற்கும் இசைப்பதற்கும்; மற்றும் நல்ல கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் குடும்ப அமைதிக்கும் சமூக அமைதிக்கும் நாட்டு அமைதிக்கும் ஏற்றவாறும் இசைவாகவும் பண்பாகவும் உணர்ச்சிவயப்படாமலும் சினம் தவிர்த்தும் சகல மனிதர்களும் உரையாடும் பண்பினை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் குடும்பத்திலும் சமுதாயத்திலும் பல்லின மக்கள் பல மதங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு கொள்கைகள், கோட்பாடுகளைச் சேர்ந்த மக்கள் மத்தியில் அமைதி, சாந்தி, ஒற்றுமை, நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" என்கிறது திருமந்திரம்.

உரத்த பேச்சு, கிண்டல் மற்றும் நையாண்டிப் பேச்சு, போகவிட்டுப் புறம் பேசுதல், மற்றும் இழிவாகவும், நையாண்டியாகவும் பேசுதல்; கிண்டல், கேலியாகப் பேசுதல், பிறர் மனம் புண்படும்படி பேசுதல், பொய் பேசுதல், முரண்பட்டுப் பேசுதல், அவதூறுகளை அள்ளி வீசும் அகங்காரப் பேச்சு, திட்டிப் பேசுதல், அமங்கலமான வார்த்தைகளைப் பேசுதல், அவதூறுகளையும் மற்றும் இல்லாததையும் பொல்லாததையும் பேசுதல், தூற்றுதல், வதந்திகளைப் பரப்புதல் என்பன தவிர்க்கப்பட வேண்டியன. மேலும் இருவருக்கிடையே, இரண்டு குடும்பங்களுக்கிடையோ கோள்மூட்டுதல், முடிஞ்சு விடுதல், வாது செய்தல், திட்டித்தேவாங்கடித்தல் போன்ற பிறருக்கு இன்னல்கள், இடும்பைகள் தரும் சமூக ஆரோக்கியமற்ற வாய்வழிச் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், வாழ்வியல்

*உருவத்துக்குத்தான் முக்கியத்துவம் என்றால் யானைதான் காட்டுக்கு ராஜாவாகி இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் ஆகும். "அறம் செய விரும்பு" என்பது ஔவையாரின் அருள்வாக்கு.

"யாகாவராயினும் நா காக்க" என்னும் வள்ளுவர் பெருமான் உலக மக்களுக்கீய்ந்த அன்புக் கட்டளையை விருப்புடன் ஏற்று, அநுசரித்து வாழ்ந்தால், வாழ்வில் நலம் பெறுவோம்; இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற அதி உயர்நிலையை அடையப் பெறுவோம், பகை விலகி விடும்.

"மௌனம் கலக நாஸ்தி" என்பது பொருள் பொதிந்த மகா வாக்கியம். இதிலிருந்து பிறக்கும் மற்றொரு கருத்து; குடும்பத்திலும் உறவினர்களுடனும் கலகமூட்டுவதும் பிரிவினை, விவாகரத்து இடம்பெறுவதும் வாயிலிருந்து நா வழியாக வெளிப்படும் வன்சொற்களாலேயே என்பதை உணர்ந்து நாவினைக் காத்து ஓம்புதல் வேண்டும். மௌனம் மன அமைதி பெறுவதற்கு உறுதுணையாக உள்ளது. மனிதன் தனது குறைகளையும், தவறுகளையும் நிறைகளையும் அலசி ஆய்வு செய்து பார்ப்பதற்கு மௌனம் வாய்ப்பளிக்கிறது. தன்னைத் தானே தற்சோதனை செய்வதற்கும், மன அமைதி, தொடர்ந்து குடும்ப அமைதி பேணுவதற்கும் நா நலம் காத்து ஓம்பி வருவதற்கும், மௌனவிரதம் பேருதவி புரிகின்றது. "உங்கள் கால் இடறினால் கீழே விழுந்து முறிவு ஏற்படும். ஆனால் உங்கள் நாக்கு இடறினால் இன்னொருவருடைய நம்பிக்கையையோ, நட்புநலத்தையோ, மகிழ்ச்சியையோ முறித்து விடுவீர்கள்" என்பது பகவான் சத்தியசாயிபாபா தரும் சத்திய வாக்கு. நாக்கு இடறினால் அதனால் ஏற்பட்ட முறிவையோ, காயத்தையோ, உரசல்களையோ என்றுமே சரிப்படுத்தவோ குணப்படுத்தவோ எவராலும் முடியாது. குடும்பநலம் பேணுவதற்கும் நட்புநலம் பேணுவதற்கும் நா நலம் பேணிவரவேண்டியது மிக அவசியம் என்பதை மனிதர்கள் அனைவரும் அரசன் முதல் ஆண்டிவரை அனைத்து மக்களும் எவ்வித வேறுபாடும் இன்றிப் பேணிவரவேண்டியது மிக அத்தியாவசியம் என்பதை உணர்ந்து, அதிலிருந்து வழுவாதிருத்தல் அறம் ஆகும். "அறம் செய விரும்பு" என்ற ஔவை மூதாட்டியின் அறவுரையை என்றும் நினைவில் கொள்ளுதல் மிக்க அவசியமாகும்.

நாவினால் ஏற்படுத்திய வடு, காயம், புண் சீழ்கட்டியபடியும், வழிந்தபடியுமே இருக்கும். ஆகவே நாநலம் பேணுதல் என்பது பெரும் அறமாகும்.

"தனிமரம் தோப்பாகாது" தனிமையில் ஒருவர் இருக்கும்போது வாக்குவாதம் ஏற்படாது. "ஒரு கைவீசி ஓசை எழாது" என்பது உலகறிந்த உண்மை. ஓசை எழுவதற்கு இரண்டு கைகளையும் ஒன்றையொன்று படும்படி தட்டவேண்டும். இருவர் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல், ஏட்டிக்குப் போட்டியாக; உரத்து உணர்ச்சிவசப்பட்டு வாக்குவாதப்படும்போதே நா நலம் ஊறுபடுகிறது, மாறுபடுகிறது. அற்றுவிடுகிறது.

ஆத்திரமூட்டக்கூடிய இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு தரப்பினராவது மௌனம் கடைப்பிடித்தால் ஒரு பெரிய கலகத்தைத் தவிர்த்த பெருமைக்குரியவர். அதுவே செயற்கரிய செயலாகும். வலியார் மௌனம் பேணிவந்தால் அதுவே பெரிய அறமாகும். மௌனம் ஒருவரின் மிகப்பெரிய பலமாகும். "மோனம் என்பது ஞான வரம்பு" என்பது பொருள் பொதிந்த மகா வாக்கியம். மோனம் ஆனது சாந்தி, சமாதானம், அமைதி ஆகியவற்றிற்கு

*வாழ்வது ஒரே முறை. அதை உனக்காக வாழு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளமாக விளங்குகின்றது. உடல் நலம், மனநலம், உயிர்நலம் பேணுவதற்கு ஆதார சுருதியாக உள்ளது. தினமும் ஒருசில மணித்துளிகள் வாரத்தில் ஒருநாள் மௌன விரதம் அனுட்டித்து வந்தால் எல்லா நலன்களும் குறிப்பாக உடல்நலம், உள நலம், குடும்பநலம், சமூக நலம் உண்டாகும். செல்வங்கள் அனைத்திலும் தலையாயதும் இன்றியமையாததும் ஆக விளங்குவதும் போற்றப்படுவதும் மௌனம் ஆகும். மாந்தர்கள் அனைவரும் மனம் வைத்தால் தேடிக்கொள்ளக்கூடிய அரும்பெரும் செல்வம் மௌனம் ஆகும்.

நா நலத்தை நாம் எல்லோரும் போற்றிப் பேணி வளர்த்துக்கொண்டு; நாவினைப் பிறரை வாழ்த்துவதற்கும், உண்மை பேசுவதற்கும்; வாய்மை பேணுவதற்கும், இன்பந்தரும் இன்சொற்களையே வழங்குவதற்கும் பண்பான முறையில் சமூக அமைதியையும் சாந்தி சமாதானத்தையும் அகத்திலும் புறத்திலும் குடும்பத்திலும் சமுதாயத்திலும் நாட்டிலும் உலகிலும் நிரந்தரமாக ஏற்படுத்துவதற்கும் அவற்றிற்கேற்ற வகையில் தொடர்பாடல் நிகழ்த்துவதற்கும்; நாவினை நலமாகவும் பண்பின் பிறப்பிடமாகவும் அச்சொற்களையே வெளிப்படுத்தும் ஊற்றுக்கண் ஆகவும் பயன்படுத்தவேண்டியது மேலான அறமாகும்.

"நா நலம் பேணுவோம், நலன் பெறுவோம்"

## கண்ணீருக்குத் தீர்ப்பாகி வா!

கட்டிடங்களோ நாளும் வளர்கின்றன
கல்மனமோ இன்னும் கனியவில்லையே!
கல்லும் மணலும் சீமெந்தும் கடந்து
கருங்கல்லில் நாருரிக்கின்றோம்
தொட்டிலையும் தங்கத்தால் செய்து
தோலையும் மாற்றவே துடிக்கின்றோம்
தோசை இட்லி பலகாரம் எல்லாமே
தெரு வீதிக்கே பிரம்மாத மாகிவிட்டன
வட்டிக்கு வாழவும் வடிவாக உடுக்கவும்
வழக்கையும் வெல்லுகின்றோம்
வரம் வாங்கலாம் என்று வைரத்தையும்
வைத்து விசாசமாகின்றோம்
குட்டியிந்தத் தீவிலே கோயில்களோ பல்லாயிரம்
குடிசைகளில் மக்களோ வறுமையில்,
குரோதியே! நீ கோபுரங்களில் குந்திவிடாதே
கண்ணீருக்குத் தீர்ப்பாகி வா!

-கே.எஸ். சிவஞானராஜா-

*உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 84

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 வைபவம் ஒன்றிற்கு சந்தனமும் குங்குமமும்
திருநீறும் வாசலிலே வைத்தழைப்பர் ஏனென்றால்
சிவத்தோடு சக்தியும் விநாயகரும் எமில்அமர
அசுரத்தார் அகன்றங்கே கருமங்கள் சிறந்திடவாம்.

02 நாள்தோறும் வாசலிலே நீர்வைத்துப் பாத்திரத்தில்
மலர்சிறிதும் இட்டுப்பின் மகிமைகொள்வர் ஏனென்றால்
நீருக்குள் இறைவனை பிரதிட்சை செய்து பின்னால்
அவனடிக்கு மலரிடுதல் அர்த்தமென அறிந்து செய்வீர்.

03 நெற்றியிலே தொண்டையிலே உச்சியிலே என்று பெண்கள்
மூன்றிடத்தில் குங்குமத்தைச் சாற்றிடுவர் ஏனென்றால்
தனித்துவமாய் நானிருந்தேன் தலைவனிப்போ மேலுள்ளான்
கீழ்ப்படிந்து நடந்திடுவேன் என்பதுவே அர்த்தமாகும்.

04 வாழைமரம் கட்டிப்பின் வைபவத்தின் வாசலிலே
மாவிலையும் தோரணமும் தொங்க வைப்பர் ஏனென்றால்
அசுரத்தார் வைபவத்தைக் குழப்புவதற்கு வந்திடாமல்
எச்சரிக்கை செய்து பெரும் காவலும் புரிந்திடவாம்.

05 கும்பமும் வைத்துப்பின் குத்து விளக்கேற்றி
வைபவம் தொடங்குமுன்னோர் கிரிகைசெய்வர் ஏனென்றால்
இறைவனின் பிடிக்குள்ளே அசுரத்தை அகப்படுத்தி
தேவரும் சூழ்ந்ததனைத் திறம்படவே நடத்திடலாம்.

06 அர்த்தமுள்ள ஒருவர் முன் ஆராத்தி எடுத்துப்பின்
பொட்டுமதில் தொட்டு வைப்பார் தொடர் கருமம் ஏனென்றால்
அர்த்தமுள்ளோர் போகு முன்னர் அசுரத்தார் சென்றிடாமல்
விநாயகரை முன்னாலே செல்லவைக்க என்றறிவீர்.

*தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள் வாழ்வு இனிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 கூட்டிப் பெருக்கிப்பின் முற்றத்தில் கோலமிட்டு
வீட்டிற்கு முன்னாலே அலங்கரிப்பர் ஏனென்றால்
தாய்க்கெல்லாம் தாயான பூமாதாத் தாயாளை
தலைவாரிப் பூச்சூடி பொட்டிட்டும் பார்ப்பதற்காம்.

08 எக்கருமம் செய்தாலும் தேங்காயை உடைத்துப்பின்
முடியையும் அகற்றியதை முன்வைப்பர் ஏனென்றால்
தேங்காயில் அசுரத்தைப் பிரதிட்சை செய்தழித்து
கருமத்தைத் தொடங்கினால் அதுவெற்றி பெறும் என்பதாலாம்.

09 ஆயிரந்தான் இருந்தாலும் வீடுதேடி வந்தவருக்கு
வெற்றிலை கொடுத்துத்தான் வரவேற்பர் ஏனென்றால்
பகை மறைத்துப் பெருமதியை உயர்த்துகின்ற தன்மை
வெற்றிலைக்கு மட்டுமே உண்டென்ற தன்மையாலாம்.

10 முழுவியளம் என்று சொல்லி வீட்டாரை முன்னிறுத்தி
வெளியாலே செல்கின்ற வழமையுண்டு ஏனென்றால்
பயணங்கள் வெற்றியாக முடியுமென்பதற் காகவன்று
வீட்டாரின் நினைவு திரும்பி வரும்வரை நிலைப்பதற்காம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*நாளைய அறுவடைக்கு இன்றே விதைப்பதுபோல் நாளைய வெற்றிக்கு இன்றே திட்டமிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றற்ற பக்தியுடன் கடவுளைப் பிரார்த்தித்தால் கடவுளைக் காணலாம்

**– திரு மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்** அவர்கள் –

கடவுள் ஏன் நம்முன் தோன்றமாட்டேன் என்கிறார்? அவர் ஏன் நம்முடன் நேரடியாகப் பேசமாட்டேன் என்கிறார்" என்பது போன்ற கேள்விகள் நம்முள் பலர் மனதில் பல தடவைகள் ஏற்படுவதுண்டு. கடவுள் நினைத்தால், அவரால் முடியாதது எதுவுமில்லை. அவரால் நம்முன் தோன்ற முடியும். நம்முடன் பேச முடியும்.

ஆனால் அப்படி அவர் செய்தால், அவரை நாம் எளிதில் விட்டுவிடுவோமா? சாதாரணமாக ஒரு மந்திரி நமக்கு மிக அருகில் வந்து பேசினாலே, நாம் அவரை விட்டு விடுவதில்லை. நமது பிரச்சனைகளைச் சொல்கிறோம். நம்முடைய பல தேவைகளையும், ஆசைகளையும் பூர்த்திசெய்யுமாறும் தொந்தரவு செய்கிறோம். அப்படியிருக்க எல்லாம்வல்ல கடவுள் நமக்கு மிக அருகில் தோன்றினால் அவரை சும்மா விட்டுவிடுவோமா?

கடவுள் ஞானிகளுக்கும் முற்றும் துறந்த முனிவர்களுக்கும் நேரில் தோன்றியிருக்கிறார். அவர்களுடன் பேசியிருக்கிறார். இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறார். அதற்குக் காரணம் அவர்களுடைய தவம், தியானம், அவர்களது ஆன்மீக சாதனைகள்.

நம்மில் பலரும் தவம் இயற்றுகிறோம். தியானம், யோகம் போன்ற பயிற்சிகளைச் செய்கிறோம். ஆனால், அத்தகையோருக்குக்கூட கடவுள் எளிதில் தென்படுவதில்லை.

ஞானிகள் தவத்தால் பெறும் பலனை நம்மால் எளிதில் பெறமுடியவில்லை. காரணம் ஞானிகளும் மகான்களும் எந்தவித ஆசையும் விருப்பமும் இன்றி கடவுளை நோக்கித் தவம் புரிகின்றனர். ஆசைகளிலிருந்தும் உலகப் பந்தங்களிலிருந்தும் விடுபடவேண்டும் என்றுதான் அவர்கள் தவம் செய்கின்றனர்.

ஆனால் நம்மில் பலர் கடவுள் என் முன் தோன்றினால், பணம் கேட்க வேண்டும், வசதி பெருக வரம் கேட்கவேண்டும், உயர்ந்த பதவிபெற அனுக்கிரஹம் பெற வேண்டும் என்றெல்லாம் ஆசைகளை வைத்துக்கொண்டுதான் கடவுளைத் தேடுகிறோம்.

ஞானிகள் தவம்புரியும்போது, வெப்பமும், குளிர்ச்சியும் அவர்களைப் பாதிப்பதில்லை. அசௌகர்யங்களால் அவர்கள் மனம் தளர்வதில்லை. ஆனால் சாதாரண மனிதர்களோ ஒரு சிறு அசௌகர்யத்தைக்கூட பெரிதுபண்ணிக்கொண்டு அதைப் பிரச்சினையாகவே எண்ணிவிடுகிறார்கள். அதைச் சமாளிக்க முன்கூட்டியே ஏற்பாடும் செய்து விடுகிறார்கள். உதாரணமாக "கரண்ட் கட்டாகிவிட்டால் என்னால் சமாளிக்க முடியும். ஏனென்றால் என்னிடம் ஜெனரேட்டர் இருக்கிறது" என்கிறார்கள். இதுதான் சாதாரணமானவர்கள் அசௌகர்யங்களை ஏற்றுக்கொள்ளும் தந்திரம். இப்படி எந்த அசௌகர்யத்தையும் ஏற்றுக்கொள்ளும் தைரியம் இல்லாமல் ஆசைகள் மட்டும் பூர்த்தியாக வேண்டும் என்று விரும்புவோர் செய்கின்ற தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான தவமாகுமா? கடவுளை வழிபடுவது நமது ஆசாபாசங்களைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே இருக்கக்கூடாது. பற்றற்ற பக்தியுடன் கடவுளைப் பிரார்த்தித்தால் கடவுளைக் கண்டிப்பாகக் காணலாம். அவரோடு நிச்சயம் பேசலாம்.

---

## பார்த்தாவது பழகுவோம்

உலகிலே மானிடரை ஆறறிவுடன் இறைவன் படைத்துள்ளார். அந்த அறிவுதான் எம்மை ஏனைய ஜீவராசிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது என்பதனை நினைவிலிருத்தி நாம் எம் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

வெளிநாட்டு மோகம் எமை ஆட்டிப்படைக்கிறது. திரைகடலோடியும் திரவியந் தேடவேண்டும்தான். ஆனால் அங்கே சென்று எமது கலாசாரப் பண்புகளைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் (வெளிநாட்டவர்கள்) கழிவுகளைக் கண்டபடி வீசமாட்டார்கள். ஏனையவர்களுடன் இனிமையாகப் பேசுவார்கள். இவற்றைப் பார்த்துப் பழக வேண்டும். வெளிநாட்டில் அங்குள்ள காலநிலைக்கேற்ப ஆடைகளை அணியலாம். ஆனால் எம் நாடு வந்தவுடன் எமது பண்பாட்டை மறக்கக்கூடாது. சகோதர இன மக்கள் எமது யாழிற்கு சுற்றுலா வருகிறார்கள். அவர்கள் தமது தூய வெண்மையான ஆடைகளையே ஆலயத்திற்கு அணிகிறார்கள். ஏனைய மதத்தவர்களும் தத்தமது ஆடைகளை வணக்கத்தலங்களுக்கு அணிகிறார்கள். இவர்களைப் பார்த்தாவது தமிழினம் ஆடை விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

வணக்கத் தலங்களில் அமைதி பேணப்படுகிறது. எமது ஆலயங்களிலும் அமைதி பேணப்பட வேண்டும். குறிப்பாக திருமுறை ஓதப்படும்போது அமைதி காப்பதைப் பழக வேண்டும். எமது சந்நிதியான் ஆச்சிரமத்தில் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் வழிநடத்தலில் அமைதி பேணப்படுவது சிறப்பான அம்சமாகும். ஏனைய வழிபாட்டிடங்களிலும் இதனைப் பின்பற்ற வேண்டும்.

ஆலயங்களில் தீபங்கள் பரிமாறப்படும்போது ஒரு கையால் ஒரு குருவானவர் வாங்க மற்றொரு குருவானவர் அடுத்த தீபத்தைக் கொடுப்பதை சில ஆலயங்களில் காணக்கூடியதாக உள்ளது. நாவலர் பெருமானது வாக்குக்கிணங்க இதை ஏனைய ஆலய அந்தணப் பெருமக்களும் பின்பற்றலாம்.

"காலையும் மாலையும் கடவுளை வணங்கு" என்பது ஆன்றோர் வாக்கு. ஞாயிறு தேவாலயம் செல்வர் கிறிஸ்தவர்கள். ஐந்து நேரத் தொழுகை இஸ்லாமியர்களிடையே பின்பற்றப்படுகிறது. ஞாயிறு தோறும் பிரித்ஓதி வழிபடுகிறார்கள் பௌத்தர்கள். இந்து மதத்தவர்களாகிய நாமும் எம்மிடையே எமது சமய நியதிப்படி இறைவனை ஆராதிப்போம்.

ஏனைய வணக்கத்தலங்களுக்குள்ளே வீண் வார்த்தைகளோ, ஓடி விளையாடும் சிறுவர்களையோ காணமுடியாது. மதத் தலைவர்களின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். நாமும் இவற்றைப் பின்பற்றி ஆலயங்களை வணக்கத்திற்குரிய இடமாக மட்டும் மிளிரவைப்போம்.

அருட்பிரசாதம் வழங்கப்படும்போது கிறிஸ்தவ தேவாலயத்தில் வரிசையாக நின்று பெற்றுக்கொள்வதை அவதானித்து நாமும் பின்பற்றப் பழக வேண்டும். முண்டியடித்து கீழே சிந்தி விணாக்குகிறார்கள் நம் மக்கள். கிரிசாம்பாள் கதை இப்போதைய சிறுவர்களுக்குத் தெரியுமோ என்பது சந்தேகமே.

ஒருவருக்கு உடல்நிலை பாதிப்படைந்தால் நலம்பெறப் பிரார்த்தனை செய்வதும் எம்மவரிடையே வளர்த்துக்கொள்ளவேண்டிய ஒரு பண்பாகிறது. இத்தகைய எத்தனையோ நல்ல பழக்கவழக்கங்களை ஏனைய சமூகத்தவர்களைப் பார்த்தாவது பழகுவோம். பண்பாடு காப்போம்.

-யூ.பி. ஆனந்தம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| செல்வி சி. சிவசக்தி | பொலிகண்டி | 5000. 00 |
| V.S. மகாலிங்கம் | வெள்ளவத்தை | 5000. 00 |
| திரு தயாபரன் குடும்பம் | ஜேர்மன் | 27000. 00 |
| செ. பாலசுந்தரம் | கனடா | 2000. 00 |
| வீ. இதயகுமார் | குப்பிளான் | 5000. 00 |
| R. யோகலிங்கம் | உரும்பராய் | 5000. 00 |
| ச. விதுஜா | கோண்டாவில் | 1000. 00 |
| சு. ஹரிசன் | கனடா | 10000. 00 |
| S. கோகுலன் | கொற்றாவத்தை | 1200. 00 |
| ஆ. பாக்கியம் | ஆவரங்கால் | 1000. 00 |
| ரா. சுரேஸ்குமார் | அளவெட்டி | 5000. 00 |
| அ. பகீரதன் | நாச்சிமார் கோவிலடி | 1000. 00 |
| ல. ஜேசங்கர் | மட்டக்களப்பு | 2000. 00 |
| உ. ருத்ரா | திருநெல்வேலி | 1000. 00 |
| ச. அகர்சன் | மானிப்பாய் | 15000. 00 |
| செ. ராம்பேகன் | இணுவில் | 3000. 00 |
| திரு விக்னேஸ் குடும்பம் | கொழும்பு | 3000. 00 |
| நா. ராஜதுரை | அச்சுவேலி | 5000. 00 |
| P. பரமநாதன் | காரைநகர் | 5000. 00 |
| ச. இராசமலர் | அச்சுவேலி | 1000. 00 |
| திரு கிரிதரன் குடும்பம் | கோண்டாவில் | 10000. 00 |
| லீலாமணி நினைவாக | மட்டுவில் | 100 டொலர் |
| W. பிறேம்குமார் | லண்டன் | 50 பவுண்ஸ் |
| A. மாணிக்கராசா | கல்முனை | 1000. 00 |

*சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| G. ஜெயராணி | யாழ்ப்பாணம் | 8000. 00 |
| M. பிறேம்குமார் | திருகோணமலை | 10000. 00 |
| வை. சுகந்தன் | நல்லூர் | 5000. 00 |
| நா. பகீரதன் | அவுஸ்திரேலியா | 50000. 00 |
| செ. நாகேந்திரா | அளவெட்டி | 5000. 00 |
| திரு குலதாசன் குடும்பம் | ஜேர்மன் | 10000. 00 |
| சு. ரவிவர்ணன் | மானிப்பாய் | 10000. 00 |
| இ. கபிலன் | இணுவில் | 5000. 00 |
| N. சத்திரூபன் | கொழும்பு | 5000. 00 |
| கி. நகுலேஸ்வரன் | லண்டன் | 5000. 00 |
| கு. சுரேஸ் | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| த. முருகானந்தா | கொக்குவில் | 2000. 00 |
| திரு பிரபாகரன் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| ரூ. அபிராமி | பிரான்ஸ் | 15000. 00 |
| சி. ராஜமலர் | தம்பசிட்டி | 10000. 00 |
| ம. சசிகௌரி | டென்மார்க் | 1000. 00 |
| S. நிமலராஜ் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| து. விக்னேஸ்வரி | குப்பிளான் | 5000. 00 |
| து. பவ்வியா | குப்பிளான் | 5000. 00 |
| கெ. பவித்தா | குப்பிளான் | 5000. 00 |
| க. ஜெயகாந்தன், ஜெ. ஓமியா | கரணவாய் | 2000. 00 |
| ச. சுஜீபன் | நெல்லியடி | 2000. 00 |
| இ. மீனாட்சி | உடுப்பிட்டி | 5000. 00 |
| R. கிருஸ்ணானந்தன் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு ஸ்ரீகாந்தன் குடும்பம் | கந்தரோடை | 15000. 00 |
| சி. நல்லையா | காரைநகர் | 5000. 00 |
| S. செல்வானந்தம் | மீசாலை | 2000. 00 |
| சி. ஜெகநாதன் | அச்செழு | 5000. 00 |
| ச. ஞானசக்தி | அச்செழு | 3000. 00 |
| T. சஜீபன் | கொக்குவில் | 2000. 00 |
| பு. பிரகாசன் | உடுவில் | 5000. 00 |
| மு. சத்விகா | அச்சுவேலி | 5000. 00 |
| ந. துளசிதரன் | சாவகச்சேரி 50 தேங்காய் 1புட்டி அரிசி | |
| பா. வரதராஜ் | லண்டன் | 5000. 00 |
| திரு அஸ்வின் | சங்கானை | 2000. 00 |
| திரு வரதராஜன் குடும்பம் | சுன்னாகம் | 35000. 00 |
| ரஞ்சி | சிறுப்பிட்டி | 39500. 00 |
| க. கருணாகரன் | புத்தூர் மேற்கு | 1000. 00 |

*கஷ்டங்கள் மட்டும் இல்லையென்றால் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முருகன் அடியார் | திருநெல்வேலி | 2000. 00 |
| செ. இராசலிங்கம் | சங்கானை | 10000. 00 |
| கோ. ஞானசேகரம் | வேலணை | மரக்கறி 1புட்டி அரிசி |
| சு. ஸ்ரீஸ்கந்தராசா | வல்வெட்டித்துறை | 1500. 00 |
| S. கணேந்திரன் | கனடா | 5000. 00 |
| கு. பிரபாகரன் | ஜேர்மன் | 2500. 00 |
| சு. வைத்தியநாதக்குருக்கள் | கனடா | 2500. 00 |
| இ. திருகரன் | இணுவில் | 2000. 00 |
| ஆதித்தன் சரணியா | கொழும்பு | 10000. 00 |
| S. மிதுனா | கனடா | 2000. 00 |
| S. கதிர்காமன் | கொழும்பு | 2000. 00 |
| திரு ஜீவா குடும்பம் | கனடா | 10000. 00 |
| திருமதி வரதன் | கொழும்பு | 50000. 00 |
| திரு பரமேஸ்வரன் குடும்பம் | கனடா | 25000. 00 |
| ஸ்ரீ. ஸ்ரீகரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| ஸ்ரீ பாலமோகன் குடும்பம் | கனடா | 27000. 00 |
| திருமதி பிருந்தா குடும்பம் | அமெரிக்கா | 25000. 00 |
| திரு கமலேஸ்வரன் குடும்பம் | கனடா | 25000. 00 |
| N. செல்லையா | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| இ. சிவஞானம் J.P. | புத்தூர் | 2000. 00 |
| S. துவியன் | ஊரெழு | 1000. 00 |
| N. நக்கீரன் | கனடா | 2000. 00 |
| த. அபிராமி | பருத்தித்துறை | 2000. 00 |
| T. தாமரைமணாளன் | சுன்னாகம் | 5000. 00 |
| செ. பாலசுந்தரம் | கனடா | 1000. 00 |
| யசானி பிரபாகரன் | நவக்கிரி | 5000. 00 |
| கஜன் சுஜந்தினி | நவக்கிரி | 2000. 00 |
| ர. டியான் | வல்வெட்டி | 1000. 00 |
| அ. ராகுலன் | வல்வெட்டி | 1000. 00 |
| அ. ஆதித்தியா | கம்பளை | 1000. 00 |
| திரு நவநீதன் குடும்பம், திரு சிவசுப்பிரமணியம் குடும்பம் | ஊரெழு | 5000. 00 |
| மோ. புனிதலட்சுமி | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| து. சுஜிதா | பிரான்ஸ் | 2000. 00 |
| கி. நவிக்கா, கி. அகல்யன் | லண்டன் | 25000. 00 |
| கா. வர்ணகுலசிங்கம், ய. அபர்ணா | நெல்லியடி | 8000. 00 |
| பா. சுரேஷன் மூலம் ராஜாராம் நினைவாக | லண்டன் | 10000. 00 |
| சி. பாலமுரளி | லண்டன் | 20000. 00 |
| ந. குகராஜா | கொக்குவில் | 5000. 00 |

*தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| N. நித்தியானந்தன் | நவாலி | 5000. 00 |
| பொ. மோகனருபன் | உரும்பராய் | 5000. 00 |
| க. ராஜேந்திரன் | உரும்பராய் | 1500. 00 |
| பு. நிமல்ராஜ் | கோண்டாவில் | 5000. 00 |
| S. சிவதாசன் | நெல்லியடி | 1000. 00 |
| ஜெ. ஜெகதீசன் | மானிப்பாய் | 10000. 00 |
| T. ராஜ்குமார் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ஐ. நடராசா | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| வே. கந்தசாமி | உசன் | 1முடை நெல் |
| K. யசோதா | பருத்தித்துறை | மரக்கறி 1புட்டி அரிசி |
| திருமதி கு. பரமேஸ்வரி நினைவாக | கொக்குவில் | 25000. 00 |
| திரு ஞானமூர்த்தி குடும்பம் | கொழும்பு- 5 | 10000. 00 |
| கா. சின்னராஜா | தொல்புரம் | 1000. 00 |
| Dr கமலா வரதராஜன் | அவுஸ்திரேலியா | 60000. 00 |
| சி. ஸ்ரீகிருஸ்ணன் | கரவெட்டி | 2000. 00 |
| T. சத்தியா | மந்திகை | 3000. 00 |
| நிர்மலா திவாகரன் | கொழும்புத்துறை | 5000. 00 |
| வ. அக்ஷயன் | வல்வெட்டித்துறை | 25000. 00 |
| ச. காண்டீபன் | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| சந்தியா சிவகாந்தன் | லண்டன் | 5000. 00 |
| அ. தர்சினி | லண்டன் | 2000. 00 |
| மா. நிலாஸ் | நவக்கிரி | 10000. 00 |
| ஜெ. யுதிஷன் | அளவெட்டி | 5000. 00 |
| சி. தனஞ்சன் | முல்லைத்தீவு | 4புட்டி அரிசி |
| சோ. கமலநாதன் | ஜேர்மன் | 10000. 00 |
| செந்தூரன் கோமகள் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ர. ராசமலர் குடும்பம் | ஜேர்மன் | 10000. 00 |
| ர. நிருபன் | ஜேர்மன் | 10000. 00 |
| சி. மகாலிங்கம் | வல்வெட்டித்துறை | 4500. 00 |
| V. விஜயராஜா | வேலணை | 10000. 00 |
| S. ரவிராஜ் | வேலணை | 10000. 00 |
| S. சிவசோதி | வவுனியா | 5000. 00 |
| பா. ஜெயகுமார் | மானிப்பாய் | 50000. 00 |
| திரு சுரேஸ் குடும்பம் | வல்வெட்டி | 5000. 00 |
| திரு அமிர்தலிங்கம் குடும்பம் | மாங்குளம் | 2000. 00 |
| V.K. வருணநாதன் | இருபாலை | 1000. 00 |
| செ. வரலக்ஷ்மி | தெல்லிப்பளை | 5000. 00 |
| சுஜாதா செல்வராஜன் | தெல்லிப்பளை | 5000. 00 |

(தொடரும்...

*வாய்ப்புக்காகக் காத்திருக்காதே. உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியும் முடியும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

இறைவனை அறிகின்ற முயற்சியும் அறிவிக்கின்ற முயற்சியும் பல்வேறு வகையில் இடம்பெற்று இருக்கின்றது. இங்கே அறிகின்ற முயற்சி இலகுவானதாக இருந்தாலும், அறிவிக்கின்ற முயற்சி சிரமமானது. உதாரணம் ஒரு பெரியவர் தான் அறிந்ததை ஒரு குழந்தைக்கு தான் அறிந்தவாறே சொல்லிவிட முடியாது. எனவே அவரவர்கள் நம்பிக்கைகள் அறிவியல் பக்குவங்களைப் பொறுத்தே அறிவிக்கின்ற முயற்சிகள் இடம்பெற்று இருக்கின்றது. அறிகின்ற முயற்சி சிறிய விடயமாக இருந்தாலும், அறிவிக்கின்ற முயற்சி பெரிய விடயமாகவும் மாறலாம். மேலும் அறிவிக்கின்ற முயற்சியில் புரிய வைக்க முயலும்போது குழப்பங்கள் ஏற்படலாம். ஆனால் சொல்லிச் சொல்லி பக்குவம் ஏற்பட ஆற்றல்கள் வளர்ந்துகொண்டு போகலாம். சில காலங்களில் நேரடியாக அறிவியல்களை அறிவிக்க முடியாத சூழ்நிலையில் விடயங்கள் சுருங்கியிருக்கலாம். இதனால் புராண இதிகாசங்களிலும் சித்தர்கள் பாடல்களிலும் பல்நோக்கு ஒருசேர ஒரே பாடலில் மறைத்தும் வைக்கப்பட்டும் இருக்கின்றது.

இந்த வகையில் இறைவனை அறிவிக்கின்ற பெறுபேறாய் உருவான உருவகக் கதைதான் அடி முடி தேடும் புராணக்கதை. இது சைவ சமயத்தில் மட்டுமல்ல, வைணவ சமயத்திலும் காணப்படுகின்றது. தவிர சித்தர்கள் பாடல்களிலும் காணப்படுகின்றது. இந்தக் கட்டுரையும் இறைவனை அறிவிக்கின்ற முழுமையான முயற்சியும் அல்ல. தொடரான முயற்சியில் ஒரு அங்கம் மட்டும்தான். இந்தவகையில் அடி முடி தேடும் புராணக் கதையில் மாலும் (விஸ்ணு) அயனும் (பிரம்மா) இறைவனின் அடி முடியைத் தேடியதாகவும் கண்டடைய முடியாது. தோல்வியடைந்ததாகவும் மேலும் அந்தப் புராணக்கதை சொல்கின்றது. இந்தக் கதையின் சாராம்சம் இறைவனே எல்லாவற்றிற்கும் மேலானவன் என்ற செய்தியுமாகும்.

ஆனால் திருமூலருடைய திருமந்திரப் பாடலிலே, இறைவனின் திருமுடியைக் கண்டு தரிசித்தது மட்டுமல்லாமல், எமது அகக் கண்களிலும் இறைவனின் திருமுடியை தரிசிக்கக் கூடியதாகவும் பின்வருமாறும் பாடியுமுள்ளார்.

சந்திரன் பாம்பொடுஞ் சூடும் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும் பொருள்
சிந்தையில் மேவித் தியக்கறுத் தானே!

இந்தப் பாடலிலே தெரிந்த கணியத்தைக்கொண்டு, தெரியாத கணியத்தை அறியும் கணியம் உள்ளது. உதாரணம் எம்மால் நேரடியாகப் பார்க்கமுடியாத மறைவிடத்தில் நெருப்பு எரிந்துகொண்டு இருந்தால், நெருப்பில் இருந்து வெளியேறும் புகையைக் கணித்து

துன்பங்களைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு தோல்வியே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடிந்தால் நெருப்பு எரிந்துகொண்டு இருப்பதை ஊகித்து அறியமுடியும். அதுபோல் இறைவனின் திருமுடியில் சந்திரன் இருக்கின்றது என்ற கூற்றைக்கொண்டு சந்திரனை எம்மால் தரிசிக்க முடிந்தால் இறைவனின் திருமுடியையும் ஊகித்தறிய முடியும்.

ஆனாலும் மாலும் (விஸ்ணு) அயனும் (பிரம்மா) காணமுடியாத் திருமுடியைத் திருமூலர் கண்டு தரிசித்தது மட்டுமல்ல அதை எம்மாலும் தரிசிக்கக்கூடியதாகச் செய்தாரா என்ற கேள்வி எழுகின்றது. ஆக இது அறிவிக்கின்ற முயற்சியில் ஏற்பட்ட குழப்பமாகும். இதையொரு அறிவியல் திரிபாகவும் பார்க்கலாம். எனவே அடியும் முடியும் என்ற தலைப்பினூடாக அறிவியல் திரிபுகளை ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கையைப் படைத்த இறைவன்

இறைவன் இந்த இயற்கையை படைக்க முன் இந்தப் பிரபஞ்சம் வெற்றிடமாக வெறுமையாக, இருள்மயமாக தவிர ஒடுங்கிய நிலையிலும் இருந்தது. இறைவன் சடப்பொருள்களுக்கு அடிப்படையாக இருக்கும் அணுக்களை தனித்தனியாக உருவாகச் செய்து, அணுக்கள் ஒன்றிடம் ஒன்று இணைந்து சடப்பொருள்களை உருவாகச் செய்தார். இந்தச் சடப்பொருள்கள் திண்மம் (நிலம்) திரவம் (நீர்) வாயு (காற்று) என மூன்று நிலைகளில் உருவானது. இதற்குக் காரணம் சடப்பொருள்களுக்கான துணிக்கைகள் (அணுக்கள்) அடர்த்தியாகவும் ஐதாகவும் இருந்தமையே காரணமாகும். இவ்வாறு உருவான சடப்பொருள்களில் இருந்து நெருப்பு உருவானது நெருப்பு என்பது பஞ்சபூதங்களில் சக்திக்கு அடையாளமாய் இருப்பது மேலும் படைப்புக்கள் உருவாவதற்கு அடிப்படையாக இருந்த வெற்றிடமே பஞ்சபூதங்களில் ஆகாயமாகவும் கொள்ளப்படுகின்றது.

எனவே படைப்புக்கள் சடப்பொருள்கள் என்பதாலும், அவை உருவாகியமையாலும் படைப்புக்களுக்கு உருவங்கள் ஏற்பட்டது. மேலும் உருவங்களை பார்க்கக்கூடியதாகவும் தொட்டுணரக்கூடியதாகவும் இருந்தமையால் அவைகளுக்கு எல்லைகள் ஏற்பட்டது. எல்லைகள் ஏற்பட்டமையால் அவை அளவீடுகளுக்குள் அடங்கக்கூடியதாக வந்தது.

உதாரணம் கண்தெரியாத ஒருவர் தனது கைப்பிரம்பால், தனக்கு முன்னால் உள்ள பொருள்களைத் தொட்டுணர்ந்து, தனக்கான வழியைத் தீர்மானித்துக்கொள்கின்றார். இந்த வழியே எமது உடலில் காயமாகவும், ஆ என்றால் திறந்தது என்று பொருள்படுவதால் ஆகாயமாகவும் அதாவது பெரு வெளியாகவும் சடப்பொருள்களும் சக்தியும் இணைத்து இயங்கக் களமாக இருப்பதுபோல் எமது உடல் இயங்கவும் வாசல் வழியுமாக இருக்கின்றது. திருமூலருடைய பின்வரும் பாடலிலே காயத்தையும் ஆகாயத்தையும் ஒருசேர வைத்துப் பாடியுள்ளார்.

வெளியில் வெளியே போய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியு மவரே சித்தர் தாமே!

*உன்னால் சாதிக்கமுடியாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வாய் என்னும் வாசல் வழியாக உணவை உண்டு, குதம் என்னும் வழியால் கழிவை வெளியேற்றுகின்றோம். அடுத்து இனப்பெருக்க வாசல் வழியால் விந்தைச் செலுத்தி அது ஒரே வாசல் என்பதால் விந்து சூலுடன் இணைந்து கருப்பையில் அடங்கி, குழந்தையாக உருவாகி பின் அதே வாசல் வழியாகவே வெளியேறுகின்றது. எனவே அது ஒரே வாசலாக இருப்பதால் அடங்கி என்று திருமூலர் விளிக்கின்றார். மேலும் நாம் காணுகின்ற ஒளி, வாசல் வழியாக எமது உடலுக்குள் செல்வதில்லை. மாறாக கண் விழித்திரையில் காட்சிகளாகப் பதிந்து, உணர்வு நரம்புகள் மூலமே மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. எனவே புற ஒளி, ஆன்ம ஒளியில் ஒடுங்கிவிடுகின்றது. மேலும் திருமூலர் வாசல் வழிகளைப் பற்றியும் பிரபஞ்சவெளி பற்றியும் அத்துடன் உடல் பிணிகளைப் போக்கும் மருத்துவங்கள் பற்றியும் பாடியுமுள்ளார். மூலத் துவாரத்தை முக்காலமிட்டிரு மேலைத் துவாரத்தினை மேல் மனம் வைத்திரு (திருமந்திரம் 571) அதாவது வாசல் வழிகள் விரிவடைந்து சுகப்பிரசவம் ஏற்படுவதையும் கூடப் பாடியுமுள்ளார்.

இவ்வாறு திருமூலர் ஒரே பாடலில் பிரபஞ்ச தத்துவங்களையும் கூட பாடியும் உள்ளார். எனவே எமது உடலில் உள்ள வாசல் வழிகளே (காயங்கள்) வெளியாகவும் (ஆகாயம்) இயக்கங்களுக்கு அடிப்படைகளாக விளங்குகின்றது. எனவே படைப்புக்கள் சடப்பொருள்கள் என்பதால் அவைக்கு உருவங்கள் உருவானது தவிர அவைகளைப் பார்க்கவும் தொட்டுணர முடிவதால் அளவுகள் ஏற்பட்டது. உதாரணம் நாம் வாழும் பூமியை எம்மால் பார்க்கமுடியாவிட்டாலும், எமது கால்களில் தொட்டுணரப்படுகின்றது. சந்திரனில் கூட மனிதன் காலடி வைத்துவிட்டான். சக மனிதனை சக மனிதன் தொட்டுணர முடியும். ஆனால் தொட்டுணரமுடியாத வெளியாகவும் வழியாகவும் இருக்கும் ஆகாயம் அளவுகள் இல்லாது விரிந்து கிடக்கின்றது. இதுவே விஸ்ணுபுராணத்தில் மகாபலியிடம் மூன்று அடிகளைத் தானமாகக் கேட்ட, வாமண அவதார கதையின் சூட்சுமம். மேலும் சடப்பொருள்களில் காற்று பார்க்கவும் தொட்டுணரவும் முடியாவிட்டாலும், காற்று பிரபஞ்சம் முழுவதும் விரவியதாக இல்லை. தவிர காற்றைக்கூட பைகளில் அடைக்கமுடியும் என்பதால் அவற்றுக்கும் அளவுகள் உண்டு. எனவே சடப்பொருள்கள் உருவாகியதால் உருவங்கள் ஏற்பட்டது. அவற்றைப் பார்க்கவும் தொட்டுணரவும் முடிந்தது. இதனால் அவைகளுக்கு எல்லைகள் உருவானது. அளவுகளுக்குள்ளும் அடங்கியது.

இறைவன் படைத்தவனே அன்றி அவன் ஒரு படைப்பல்ல. இதனால் இறைவன் உருவாகியவனுமல்ல. உருவங்கள் உடையவனுமல்ல. அவனைப் பார்க்கவோ தொட்டுணரவோ முடியாது. இதனால் அவனுக்கு எல்லைகளோ அளவுகளோ இல்லை. எனவே இறைவனைக் குறித்துக்காட்டும் ஒரு குறியீடாக ஆகாயத்துடன் ஒப்புவிக்கப்பட்டான். இதையே திருமூலருடைய திருமந்திரப் பாடலிலே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பொருள் என்று வருகின்றது.

## இயற்கையே இறைவன்

இறைவனுக்கு உருவமோ வடிவமோ இல்லாதபடியால் அவனைப் பார்த்தோ தொட்டுணர்ந்தோ அறியமுடியாமையால், இறைவன் படைப்பாளி என்ற அடிப்படையில் படைப்புக்களைக் கொண்டு படைப்பாளியை அறியும் முயற்சியே திரிபடைந்து இயற்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் என்ற கோட்பாடு உருவானது. மேலும் இயற்கையைக் குறித்துக்காட்டி உருவான இயற்கை காட்சிகளில் சந்திரனும் ஒன்று என்ற அடிப்படையில் திருமூலருடைய பாடலிலே, சந்திரன் என்ற இயற்கை காட்சி வருகின்றது.

## இயற்கைக்கு உட்பட்டு இறைவன்

இயற்கையில் நன்மை தீமைகள் இருப்பதால், உயர்வானவற்றை இறைவனாகக் காணும் மரபுகள் ஏற்பட்டது. மேலும் இறைவன் கூட நன்மை தீமைகளில் சிக்குப்பட்டு போட்டி பொறாமையுள்ளவனாகவும் இயலாமைக்கு உட்பட்டவனாகவும்கூட, பல பதிவுகள் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் மனித இனத்தை மற்றைய உயிரினங்களில் இருந்து வேறுபடுத்துவதில் முதன்மையானது மொழி. அடுத்து குடும்ப வாழ்க்கை. இதனால் மொழியையும் தாய் தந்தையரையும் இறைவனாகக் காணும் மரபு ஏற்பட்டது.

ஆனாலும் படைப்பு பரிணாமம் ஆண் பெண்கூட பரிணாமம். மனித இனத்தில் ஆண் பெண் உயரிய பெறுமானத்தை அடைந்தமையே வம்சங்களும் வரலாறுகளும் ஏற்பட்டது. மேலும் மொழிகூடப் பரிணாமம். அதனாலேயே உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றது. இந்தவகையில் இறைவன் ஆணையும் பெண்ணையும் முழுமைப்படுத்தி முழு உருவில் படைத்து சந்ததிகளை உருவாக்கவில்லை. இவ்வாறு இறைவன் ஆண் பெண்ணை நேரடியாகப் படைத்து, சந்ததிகளை உருவாக்கியிருந்தால் ஆண் பெண் இணையாமல் சந்ததிகள் உருவாகாது. தாவரங்கள் தண்டு முறையில் இனப்பெருக்கம் செய்வதுபோல் ஒரு பெண்ணின் உடலில் இருந்து ஏதேனும் உடல் கலத்தை எடுத்து, அதை பதிநிலைக்கு கொண்டுவந்து கருவாக்கி அதே பெண்ணின் கருப்பையில் வைத்து ஆண் பெண் இணையாமல் இன்றைய நவீன குளோனிங் மூலம் இனப்பெருக்கம் செய்யமுடியும்.

எனவே இறைவன் படைப்புக்களை பரிணாமத்தால் படைத்து, தனது படைப்புக் களுக்கு சான்றாதாரங்களை வைத்துள்ளார். தவிர மொழியை பரிணாமத்தால் உருவாக வைத்து சான்றாதாரங்களையும் வைத்துள்ளார். அதுபோல் மனித வாழ்வியலும் பரிணாமம் என்பதன் சான்றாதாரங்களையும் இறைவன் வைத்துள்ளார். அதாவது மனிதன் காட்டில் விலங்குகளுடன் விலங்குகளாக வாழ்ந்தவன் என்பதற்கு சான்றாதாரம்தான் பரம் பொடுஞ் சூடும் சடாதரன் என்ற திருமூலர் பாடல் வரிகள் வருகின்றது. மேலும் திருமூலர் பாடலில் பெரு வெடிப்பு கோட்பாடுகளும் மறைத்தும் வைத்துப் பாடியுள்ளார். இவ்வாறு ஒரே பாடலில் பல்நோக்கை பிரதிபலிப்பதாக சித்தர்களாலேயே பாட முடியும். மேலும் திருமூலர் மறைத்துப் பாடியுள்ள பெருவெடிப்புக் கோட்பாடுகளை தனியான இக்கட்டுரைகளில் பின்னர் பார்ப்போம்.

மேலும் திருமூலர் இறைவனை பஞ்சபூதங்களில் தனித்துவமாக உள்ள ஆகாயத்தை இறைவனாக உவமானப்படுத்தியதுபோல், பஞ்சபூதங்களையும் உள்ளடக்கிய பிரபஞ்சத்தை (இயற்கை)யும் இறைவனாகக் காட்டியது மட்டுமல்லாமல், இயற்கைக்கு உட்பட்ட ஆன்மீக

*பொறுமை உள்ள மனிதன் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைகளையும் கூடவே இறைவனாகவும் காட்டியும் உள்ளார். ஆனால் ஆகாயம் என்ற சொல் திரிபடைந்து வானமாக பொருள்படும் நிலை உருவானதைத் தொடர்ந்து, இறைவன் வானத்தில் இருக்கின்றார் என்ற கோட்பாடு உருவானது. இதைப் பின்வருமாறு திருமூலர் தனது பாடலிலே சாடுவதைக் காணலாம்.

வானுக்குள் ஈசனை தேடும் மருளர்காள்
தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே!

இறைவனுக்கு உருவமோ, வடிவமோ இல்லாதபோது அவனை எங்கு தேடினாலும் ஒரே விடைதான் கிடைக்கும். அவன் வடிவம் இல்லா வடிவத்தையுடையவன். அப்படிப்பட்ட இறைவனை எங்கள் ஊனக் கண்ணால் தேடமுடியாது. நாவில் சுவை நரம்புகள் வழியே மூளையில் உணர்த்தப்படும் ஒரு இன்பமே அன்றி நாம் உண்ணும் உணவு உடலின் வயிற்றுப்பகுதிக்குச் சென்று, அங்கு அகத்துறிஞ்சப்படும்போதுதான் நாம் சுவையை அறிவதில்லை. தவிர எமது வயிற்றுப்பகுதியில் புளிப்பான அமிலங்கள் சுரந்து சுவைகெட்ட பின்பே உடல் உணவை அகத்துறிஞ்சுகின்றது. ஆனால் நாக்கின் நரம்பின் வழியே சுவையை மூளை உணர்ந்து எமது மனதை திருப்திப்படுத்துகின்றது. ஆகவே உணவு உருவமுடைய தாகவும் பார்வைக்கு நிறங்கள் உடையதாக இருந்தாலும் சுவைக்கு உருவமோ நிறமோ கிடையாது. அதுபோல் இறைவனையும் உருவத்தின் வழியோ நிறங்களின் வழியோ உணர முடியாது. மாறாக உடலுக்குள் இருக்கின்ற உருவமற்ற நிறமற்ற ஆன்மா பரமாத்மா வாகிய உருவமற்ற நிறமற்ற இறைவனை உணர்கின்ற பக்குவத்தையே திருமூலர் குறிப்பிடு கின்றார்.

**குறிப்பு:**

இறைவன் தந்த இயற்கையான அறிவு மற்றும் இறைவன் தந்த அனுபவங்களையும் கொண்டே இறைவனை அறிகின்ற முயற்சியிலும் அறிவிக்கின்ற முயற்சியிலும் திருமூலர் பாடல்கள் எனக்கு பக்கபலமாக இருப்பதால், கற்றோருக்கும் எனது அறிவினை அறிவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த வகையில் ஞானச்சுடர் சஞ்சிகையில் இடம்பெற்றிருக்கின்ற பல்வேறு அறிஞர்களின் ஆக்கங்கள் என்னை சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது. எனது கருத்துக்களை மெருகூட்ட உதவியிருக்கின்றது. எனவே எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் எனது கருத்துக்களில் தவறேதேனும் இருந்தால் மன்னித்துக்கொள்ளும்படி தாழ்மையாகவும் வேண்டிக்கொள்கின்றேன்.

---

*இந்த உலகத்தில் அன்பின்மூலம் சாதிக்கமுடியாதது எதுவும் இல்லை. எதையும் சாதிக்கமுடியும். பிரதிபலன் எதிர்பார்க்காத, சுயநலக் கலப்பேயில்லாத அன்பினால் இறைவனையும் கட்டிவிடமுடியும்.*

*திட்டங்களில் வெற்றி என்பது இல்லை. திட்டமிடல் என்பதிலே வெற்றி என்பது தங்கியுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மரபுகளால் பெரிதும் அறியப்படும் இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் (தொடர்ச்சி...)

– திரு சண்முகலிங்கம் சஜீலன் அவர்கள் –

## மேலைத்தேயவர்களின் யாழ்ப்பாணம் நோக்கிய வருகையும், கலை பண்பாட்டு இலக்கியங்களின் அழிவும்

கோவிலை மையப்படுத்தியதாகவும், அரச ஆதரவுடனும் பலதரப்பட்ட மக்கள் பங்களிப்பினாலும் வளர்ச்சியடைந்து விரிவடைந்து சென்ற சைவ பண்பாட்டுச் சூழல் மேலைத்தேயவர்களான போர்த்துக்கேயரினதும், ஒல்லாந்தரினதும் வருகையினால் பெரிதும் அழிவுக்குள்ளானது. வணிக மயமாக்கப்பட்ட பொருளீட்டலையும் தமது மதப் பரப்புகையையும் நோக்கமாகக் கொண்டு இலங்கை வந்த போர்த்துக்கேயர்கள் கி.பி. 1619ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றினர். அவர்கள் முதலில் ஊர்காவற்றுறையில் வந்து இறங்கி யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்ததாக குறிப்புக்கள் கூறுகின்றன. இங்கு இந்து சமய வழிபாட்டுக்கு வரலாற்று முக்கியத்துவம் மிக்க பல ஆலயங்களை அழித்தார்கள். இக்காலத்தில் ஆலயக் கட்டடங்கள், விக்கிரகங்கள் பல இடித்தழிக்கப்பட்டதுடன் பெறுமதி வாய்ந்த பல சொத்துக்களும் சூறையாடப்பட்டன. அக்காலத்தில் பேணப்பட்ட கல்வெட்டுக்கள், சாசனங்கள், பட்டையங்கள் பல ஆலயத்தில் பேணப்பட்ட ஏட்டுச்சுவடிகள், மருத்துவக் குறிப்புக்கள், பத்ததிகள் அழிக்கப்பட்டன. இதனையே வரலாற்று ஆசிரியர்கள் கலையழிவு என கொள்கை வர்ணிக்கின்றனர். இது சைவ தமிழ்ச் சமுதாயத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்தியது. கி.பி. 1658 யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் தமது ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் சுதேசிய மத வழிபாட்டிற்கு தடைவிதித்ததுடன் எஞ்சி இருந்தவற்றையும் அழித்தொழித்தார்கள். இவர்களின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிலேயே மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இந்துமதத்திற்கு ஏற்பட்ட அழிவு பற்றியும் அக்காலம் பற்றியும் பல வெளிநாட்டவர்களின் குறிப்புக்கள் துலாம்பரமாக எடுத்துரைக்கின்றன. ஒல்லாந்தர் காலத்தில் நிகழ்ந்த இந்து ஆலயங்கள் அழிப்பு சம்பந்தமாக மல்களாசனம் எனும் ஏடு பின்வருமாறு கூறுகிறது.

1858ஆம் ஆண்டு விளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர்காவற்றுறையை பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் அனேக சைவசமயக் கோவில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்க வந்தபோது நான்குபேர் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதவர்களாயும் இரண்டுபேர் நடக்கமாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக் காலத்தின்பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போன பிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து பூசை செய்து வரும்போது ஒருநாள் வந்து கோவிலையும் இடித்துக் கடலுக்குள்ளே ஓர் கோட்டையும் கட்டினார்கள்.

ஒல்லாந்த தேசத்தவரான பல்டேயஸ் எனும் பாதிரியாரின் இலங்கை பற்றிய ஓர் குறிப்பு பின்வருமாறு கூறுகின்றது.

முதிர்ந்த வயதினை உடையவர்களிடையே, விக்கிரக வழிபாடு, பேய் வழிபாடு தொடர்ந்து நிலவின. இவ் வினோத கோட்பாட்டினை உடைய நூல்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

இதன்மூலம் பெறுமதி வாய்ந்த இந்து சமய இலக்கிய நூல்கள், தலபுராணங்கள், பிரபந்த நூல்கள், ஏட்டுச்சுவடிகள் அழிக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. இதனைவிட போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் சில தலங்கள் அவர்களின் அழிப்புக் கொள்கையிலிருந்து காப்பாற்றப்பட்ட அல்லது தப்பிய செய்தியினையும் அறிய முடிகின்றது. அவர்கள் அழிக்க வந்தபோது அவ்வூர் மக்கள் இது கன்னிமரியாளின் (மேரிமாதா) ஆலயம் எனக் கூறிவிட்டுச் சென்றுள்ளனர். பெரும்பாலும் அம்மன் ஆலயங்கள் இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளன. சில ஆலயங்களில் கன்னிமரியாளின் சிலையை வைத்துவிட்டு இது மாதா ஆலயம் எனக் கூறியுள்ளனர். பிள்ளையார் ஆலயங்கள் சில இவ்வாறு காப்பாற்றப் பட்டுள்ளன. இவ்வாறான ஆலயங்கள் சில மாதாங் கோயில் என இன்றும் மக்களால் அழைக்கப் படுகின்றது. சில தலங்கள் அத் தலத்தில் உறையும் தெய்வங்களின் அற்புதச் செயல்கள்மூலம் காப்பாற்றப்பட்ட செய்தியினையும் அப் பிரதேச ஆலயங்களின் கர்ண பரம்பரைக் கதைகள், ஆலய வரலாறுகள் மூலம் அறிய முடிகின்றது. இவ்வகை ஆலயங்களுக்கு உதாரணமாக சுழிபுரம் பறாளை ஈசுர விநாயகர் ஆலயம் (கண்ணைக் கொத்திக் காக்கா பிள்ளையார் ஆலயம்) சாவகச்சேரி மண்டுவில் சோலையம்மன் ஆலயம், புங்குடுதீவு பட்டயக்கார அம்மன் ஆலயம் ஆகியவற்றைக் கூறலாம். இவ்வாறாக தலங்கள் சிலவற்றினை ஐரோப்பியர் அழிக்க வந்தபோது ஆலய விக்கிரகங்கள் பெறுமதி வாய்ந்த பொருட்கள், உபகரணங்கள், சொத்துக்களை மண்ணில் புதைத்தும், கிணறு, குளம், கடல் ஆகியவற்றில் போட்டும் ஆலயத்தினை சார்ந்தோரும், பொது மக்களும் காப்பாற்றியதாக ஆலயத் தகவல்கள் கூறும். இவ் விக்கிரகங்கள், பொருட்களே பின்னர் வெவ்வேறு காலகட்டங்களில் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வெட்டுக்கள், சாசனங்களைத் தன்னகத்தே கொண்ட ஆலயங்கள்

கல்வெட்டுக்கள், சாசனங்கள் என்பன ஓர் இலக்கிய வடிவமாகவே கொள்ளப்படத் தக்கன. முற்காலத்தில் ஓலைச் சுவடிகளும், ஏடுகளும் பாவனைக்கு வரமுன்னர் கல் வெட்டுக்களில் பொறிக்கும் வழக்கம் இருந்துள்ளது. பொதுவாக கல்வெட்டுக்களும், சாசனங் களும் கருங்கல்லில் பொறிக்கப்படுவதால் நீண்டகாலம் பாதுகாப்பாக இருந்துள்ளன. பழங்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களும், சமூகத்தில் உயர் அந்தஸ்து பெற்றவர்களும், பரோபகாரிகளும் பொதுப்பயன் பாட்டிற்கு தாங்கள் மானியங்களாக, தானங்களாக வழங்கியவற்றை கல்வெட்டுக்களில் சாசனங்களாகப் பொறித்துள்ளனர். அந்தவகையில் உரும்பராய் பரத்தைப்புலம் எனும் பகுதியில் அமைந்துள்ள கருணாகரப் பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கருணாகரப் பிள்ளையார் கோயில் கருணாகரத் தொண்டைமான் எனும் சோழ அரசனின் தளபதியால் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணத் திலிருந்து உப்புப் பெறுவதற்காக தொண்டைமானாற்றை வெட்டுவித்த இம் மன்னன் பணியின் நிமித்தம் இணுவிலில் தங்கியிருந்தபோது உரும்பராயில் இக்கோவிலை அமைத்து வழிபட்டதுடன் கோவிலில் பல திருப்பணிகளையும் செய்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. இக் கோவிலில் காணப்படும் 2 அடி 4 அங்குல நீளமுடையதும் 11 அங்குல அகலம் உடையதுமான சதுரத்தூண் போன்ற ஒரே கல்லில் இரண்டு கல்வெட்டுக்கள் செதுக்கப் பட்டுள்ளன. தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள இக் கல்வெட்டுக்கள் கி.பி. 15ஆம், 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. முதலாவது கல்வெட்டு காலத்தால் முந்தியதாகவும், இரண்டாவது கல்வெட்டு சற்று பிந்தியதாகவும் உள்ளதென எழுத்துக்கள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. முதலாவது கல்வெட்டு கி.பி. 1567ஆம் ஆண்டில் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தானம் ஒன்றைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. நிலத்தானம் செய்தவர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் அவை சிதைந்த நிலையிலுள்ளன. இரண்டாவது கல்வெட்டு கோயிற் பண்டாரத்துக்கு அதாவது கோயிலின் திறைசேரிக்கு ஐந்து பணம் தர்மமாக வழங்கப்பட்டதைப் பதிவு செய்கிறது. அருகில் திரிசூலம் போன்ற இலச்சினையும் பொறிக் கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலிலுள்ள பழைய கல்வெட்டொன்று அரச பிரகடனமொன்றை வெளிப்படுத்துவதாக உள்ளது. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக உள்ள இக் கல்வெட்டு கடலில் செல்லும் கப்பல்கள் அடிக்கடி சேதமுறுவது தொடர்பாகக் கூறுவதாயுள்ளது.

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலிலுள்ள கல்வெட்டொன்று 144 வருடங் களுக்கு முன்னர் கட்டப்பட்ட சத்திரமொன்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 1875/6ஆம் ஆண்டு சி. நமசிவாய முதலியார் என்பவரால் பொதுப்பயன்பாட்டுக்காக ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் வளாகத்தில் தரும சத்திரமொன்று கட்டப்பட்டமையினை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இது ஓர் நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்ட கல்வெட்டாகும். வல்வெட்டித் துறை சிவன் கோயில் வளாகத்தில் அமைந்துள்ள சதுரக்கல் தொட்டி, மடம் ஆகியவற்றிலும் அவற்றுக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட கற் செதுக்குகளிலும் காணப்படும் தமிழ் பிராமி வடிவ எழுத்துக்கள் 2000 வருடங்களுக்கு முற்பட்டவை என்பதுடன் நாகர் காலத்துக்கு உரியவையாகவும் காணப்படுகின்றன. நாகர்களின் மிகப் பழமையான வழிபாட்டிடமாக இச் சிவன் ஆலயம் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. நாயன்மார்கட்டு அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்திற்கு அருகில் 1942இல் கண்டுபிடிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டொன்றில் சிங்கை ஆரியனால் இக் கேணி புனரமைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் இக் கோயில் மிகப்பெரிய வழிபாட்டிடமாக இருந்திருக்கலாம் என்பது புலனாகிறது. நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகிலுள்ள பூதராசர் ஆலயத்திலுள்ள பாத்திரங்கள், விளக்குகள் என்பன 200இலிருந்து 300 வருடங்களிற்கு முன் வாழ்ந்த மக்கள் தமது பெயர் குறிப்பிட்டு ஆலயத்திற்கு தானமாக அளித்துள்ளனர். (தொடரும்...

## அஞ்ஞான இருள் நீக்க அருளொளியாய் வா முருகா!

இருளால் ஒளியை விழுங்கிட முடியுமா முருகா
திருமறைக்கும் எதிர்மறையுண்டோ திருமுருகா
ஒருமறையாம் பொதுமறையை விளக்கிடும் பொதுச்சபை
முருகா அந்தத் தில்லைத் திருச்சபையாம் கனகசபை.

வேரின்றி மரமுண்டோ முருகா
மரமின்றிக் கிளையுமுண்டோ குமரா
கிளையின்றி மலரும் மலர்ந்திடுமோ முருகா
மலரின்றி உலகில் தீஞ்சுவைத் தேனுமுண்டோ குமரா.

வேருக்கு நீர் பாய்ச்சும் வேதியனே முருகா
மரமாகிக் கிளையாகி மலரான இறைவா - உந்தன்
அருள் மலரிற் சுரக்கும் அருமறையாம் ஆனந்தத்தேனை
விரும்பிச் சுவைக்கும் அடியாருடன் கூடிச் சுவைத்துண்ண வாமுருகா.

ஆடியிலே போட்டவிதை அகிலமெங்கும் முளைவிட்டுப் பயிராகி
வாடி வதங்காமல் அன்பென்னும் நீர் பாய்ச்சி
தேடிக் களை களைந்து உரமிட்டுத் தான் வளர்த்து
அடியாருளம் களிக்க அரும்பாகி மலராகித் தேனுண்ணும் வண்டாகி

பாடியுளம் தெளிந்து தேனுண்டு களிக்கும் வண்டாக
அடியார் கூட்டம் அகிலமுழுதும் ஆனந்தமுற
நாடியே நலமளிக்கும் திருவாசகத் தேனமுதை
ஓடி ஓடிச் சுவைத்து மகிழ விரைந்தோடி வந்திடுவாய் முருகா

கலியுக வரதனே கதிர்காமத்தையனே கார்த்திகேயா
கிலியின்றி உயிர்களெலாம் உலகினிலே
வலிமையுடன் வாழும் வழியைக் காட்டவா
நலியாது நாம்வாழத் தலைவனாய் நீயிருந்து தரணியாள வந்திடுவாய் முருகா
என் குரல்கேட்டு நீயும் குலம்காக்க வருவாய் குமரா

-திருமதி பரமேஸ்வரி நடராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செந்தூர்

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

கணக்கிட முடியாத முத்துக்களையும் மணிகளையும் இரத்தினங்களையும் அலைகளாகிய கைகளினால் அள்ளிவந்து கரையில் சேர்க்கும் கடற்கரைக்குப் பக்கமாகவுள்ள இப் புண்ணிய தலத்தில் எங்கு பார்த்தாலும் கடப்ப மரங்கள் பூக்களைப் பூத்து நிற்பது பார்ப்பவரின் கண்களுக்கு இன்பமாக இருக்கும். இத்துடன் சேல்மீன்கள் துள்ளிப் பாயும் குளங்களையும் நெல்லு, பயறு, கரும்பு, எள்ளு முதலியன விளையும் வயல்களையுடையதும் மேலும் பல இயற்கை வளங்களையுடையதுதான் திருச்செந்தூர் என்று சொல்லப்படும் புண்ணியத் தலம். முருகப்பெருமான் சூரனை சங்காரம் செய்து அவனை சேவலும் மயிலுமாக ஆட்கொண்ட தலமும், முருகப்பெருமானது ஆறுபடை வீடுகளுள் இரண்டாவது படை வீடுமாகும்.

இத் தலம் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் தெற்குக் கோடியில் அமைந் துள்ளது. சென்னையில் இருந்து 600 கி.மீ தொலைவில் உள்ளது. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் காட்டப்பட்டுள்ள இவ்வாலயம் 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முருகன் தலமாகும். இத்தலத்திலுள்ள முருகப்பெருமானை சிலப்பதிகாரம் பின்வருமாறு போற்றுகிறது. (சீர்கெழு செந்திலும் செங்கோடும் ஏரகமும் நீங்கா இறைவன் என்றும்) சங்க இலக்கியமாகிய புறநானூறு (கத்தும் தரங்கம் எடுத்தெறியும் கரும்கடலின் என்றும்) நக்கீரர் (உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய் என்றும்) பாடியுள்ளார். முருகப்பெருமான் தமது வேலாயுதத்தால் தாரகாசுரனையும் கிரவுஞ்ச மலையையும் அழித்து இம்மலையின் குகைகளில் மயக்க நித்திரையிலுள்ள வீரவாகு முதலாகச் சொல்லப்படும் வீரர்களின் மயக்கத்தை அகற்றி பழைய அறிவைக் கொடுத்து எழுப்பி வேலானது ஆகாய கங்கையில் மூழ்கி முருகப்பெருமானது திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. அப்போது வீரவாகு முதலாகவுள்ள வீரர்கள் முருகப்பெருமானுக்கு முன்பாக வந்து அவரை வாழ்த்தி வணங்கி அருள் பெற்றனர். பின்பு தேவர்கள் தேவகிரியில் தேவதச்சனால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் முருகப்பெருமானை எழுந்தருளும்படி செய்து அவருக்கு திருமஞ்சனம் முதலாகச் சொல்லப்படும் கிரியைகளைச் செய்து வழிபட்டு திருவருளைப் பெற்றனர்.

இதன் பின்பு முருகப்பெருமான் சிவபெருமான் வீற்றிருக்கும் பல சிவத்தலங்களை வழிபட்டு அருள்பெற்று திருச்செந்தூரை வந்தடைந்தார். அப்போது இந்திரனைப் பார்த்து இந்திரனே சூரன் முதலாயினோர் பிறந்ததும் தவம் செய்தும் வரம் பெற்றதும் அரசு செய்ததும் உங்களுக்குச் செய்த துன்பங்களையும் சொல்லுவாயாக என்று கேட்க அப்போது இந்திரன் குருவாகிய வியாழ பகவானையும் பார்த்து வணங்கி குருவே தாங்கள்தான் இவற்றை

*செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு சொல்லியருள வேண்டுமென்று கூற வியாழ பகவான் முருகப்பெருமானை வணங்கி சூரபன்மன் முதலிய அசுரர்களின் வரலாற்றை சொல்லி முடித்தார். முருகப்பெருமான் இதற்குப் பின்பு வீரவாகு தேவரை சூரபன்மனிடம் தூதுவராக அனுப்பி சில அறிவுரைகளை சொல்லும்படி சொல்லுவித்து இதற்கு அவன் மறுப்பு தெரிவிக்க இதை அறிந்த முருகப்பெருமான் அடுத்தநாள் யுத்தகளம் சென்று போரை தொடங்கி சிங்கமுகாசுரன் நால்வகைப் படைகளையும் அழித்து இறுதிநாள் சூரபன்மனது ஆணவத்தை வேலாயுதத்தால் அடக்கி மேலும் அவனது உடம்பை குத்தி இரு பிளவாகும்படி செய்து வேதங்கள் முழங்க வேலானது ஆகாய கங்கையில் மூழ்கி முருகப்பெருமானது திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. அப்போது சூரன் இருந்த உடம்பு மயிலாகவும் பதுமன் இருந்த உடம்பு சேவலாகவும் உருவம் பெற்று தமக்கு முன்பாக வர அப்போது முருகப்பெருமான் தமது திருக்கண்களால் இவர்களைப் பார்த்து திருவருள் செய்து மயிலை தம்மைத் தாங்கிச்செல்லும் வாகனமாகவும் சேவலை சேவற்கொடியாகவும் ஏற்றுக்கொண்டார்.

இக் காட்சியைக் கண்ட தேவர்கள் வீரவாகு முதலாகச் சொல்லப்படும் வீரர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்து முருகப்பெருமான்மீது பூமழை சொரிந்து வாழ்த்தி வணங்கினர். இதன்பின் முருகப்பெருமான் வீரவாகு தேவர்மூலம் சயந்தன் முதலிய தேவர்களை சிறையில் இருந்து வெளியே வரும்படி செய்து பின்பு அசுரர்களோடு போர் செய்து இறந்த பூத சேனைகள் மீண்டும் உயிர்பெற்றெழும் வண்ணம் திருவருள் செய்து புண்ணியத் தலமாகிய திருச்செந்தூருக்கு வந்து மயில்வாகனத்திலிருந்து இறங்கி ஆலயத்துக்குள் போய் இந்திரன் முதலிய தேவர்கள் வணங்க அருள் புரியும் கருணையோடு சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தார். அப்போது தேவர்கள் குமாரதந்திர விதிப்படி ஆறுமுகப் பெருமானுக்கு கும்பம் விம்பம் யந்திரம் ஆகிய மூவகை இடத்திலும் பூசை செய்து திருவடிகளை வணங்கினார்கள். இதன்பின் முருகப்பெருமான் அங்கே தேவதச்சனைக் கொண்டு ஒரு ஆலயத்தை அமைப்பித்து இலிங்கத்தில் சிவபெருமானை பிரதிட்டை செய்து பஞ்சகவ்வியம் முதலியவற்றை தேவர்கள் கொடுக்க சிவாகம விதிப்படி சிவனை வணங்கி அருள் பெற்றார்.

**விளக்கம்**

சண்முகப் பெருமான் சிவபெருமானாகில் பூசை செய்வது எப்படியென்றால் உருவம் அருவுருவம் அருவமாகிய திருமேனிகளையுடைய மூர்த்திகள் பரமசிவன் இல்லை. பரமசிவன் இம் மூர்த்தி பேதங்களைக் கடந்து அப்பாற்பட்டவர் சண்முகப் பெருமான். மூர்த்திகளில் ஒருவர் ஆதலால் அவர் பரமசிவனை பூசை செய்து வணங்குவது சரியே.

சண்முகப் பெருமான் சூரனது ஆணவத்தை அடக்கி அவனை சேவலும் மயிலுமாக ஆட்கொண்டதால் இப் பெருமான் செயந்திநாதர் எனப் பெயர் பெற்றார். பிற்காலத்தில் இப் பெயரே செந்தில்நாதர் என திரிபடைந்தது. சிறிது காலத்துக்குப்பின் திருஜெயந்திபுரம் (ஜெயந்தி- வெற்றி) என்ற பெயருடன் அழைக்கப்பெற்று இப்போது திருச்செந்தூர் என்ற பெயருடன் காணப்படுகிறது.

*பலவற்றைக் கேளுங்கள். ஒருசிலவற்றை மட்டும் பேசுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்தூர் முருகப்பெருமானை வழிபட்டு அருள்பெற்றவர் பலர். அவர்களில் இருவர் வரலாற்றை பின்வருமாறு கூறுவோம்.

## 01) குமரகுருபர சுவாமிகள் வரலாறு

தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றங்கரையிலுள்ள ஸ்ரீ வைகுண்டம் என்னும் பகுதியில் வடபுறத்தே கைலாசபுரத்தில் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த சண்முகசிகாமணிக் கவிராஜர் என்னும் சைவப்பெரியார்க்கும் மனைவி சிவகாம சுந்தரிக்கும் தவப்புதல்வனாக 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிறந்தார். இவர் ஐந்தாண்டு வரையும் பேச்சில்லாமல் ஊமைபோல இருக்க, பெற்றோர் இவரைத் திருச்செந்தூர் முருகன் ஆலயத்துக்கு எடுத்துச் சென்று அங்கே இவரை முருகன் சந்நிதானத்தில் படுக்கவைத்து தாங்களும் விரதமிருந்தனர். அப்போது முருகப் பெருமானின் திருவருளால் இவர் ஊமைத் தன்மையிலிருந்து நீங்கிப் பேச்சு வல்லமையைப் பெற்று முருகப்பெருமான்மீது பக்திப்பாடல்களைப் பாடத் தொடங்கினார். கந்தர் கலிவெண்பா என்னும் அருள் நூலைப் பாடி முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று மேலும் பல தலங்களுக்குச் சென்று வணங்கி அருள்பெற்று பக்திப்பாடல்களைப் பாடினார் என்பது வரலாறு.

திருச்செந்தூர் கலிவெண்பா 122 பாடல்களில் ஐந்து பாடல்களை பின்வருமாறு காண்போம்

01) பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு

02) நாதமும் நாதாந்த முடிவும் நலை தீர்ந்த
போதமும் காணாத போதமாய் - ஆதிநடு

03) அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய் - வந்த

04) குறியும் குணமுமொரு கோலமு மற்று எங்கும்
செறியும் பரமசிவமாய் - அறிவுக்கு

05) அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய் - தனாதருளின்
என்று முடிகிறது.

### பகளிக் கூத்தர்

பகளிக் கூத்தர் என்பவர் தமிழ்நாட்டில் பிறந்தும் வாழ்ந்து வந்தவர். இவர் குருகுல முறைப்படி தமிழைக் கற்று இனிய தமிழ்க் கவிதைகள் பாடும் அறிவாற்றலுடையவர். ஒருநாள் இவருக்கு கடும் நோயாகிய சூலைநோய் வந்து இவரைத் தாக்கியது. அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இந்நோயைத் தாங்கமுடியாமல் உடம்புவற்றி உருக்குலைந்து துன்பப்பட்டார். பல மருந்துகள் அருந்தினார். நோய் இவரைவிட்டு விலகவில்லை. அப்போது திருச்செந்தூர் முருகப்பெருமான் இவரது மனக்கண்ணில் காட்சி கொடுக்க அப்போது திருச்செந்தூருக்கு வந்து கடலின் பக்கமாகவுள்ள ஆலயத்துக்குள் சென்று சண்முகப்பெருமானைப் பார்த்து வாழ்த்தி வணங்கி தன்னை மறந்து உள்ளம் உருக உருகப் பாடத் தொடங்கினார் இவர். அப்போது பாடிய பாடல் திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ். இப் பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்க வரும் பிள்ளைப் பெருமான் என்னும் பேராளா என்று தொடங்கி வரவழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ என்று திருவருள் முனைப்பில் முருகப்பெருமானைப் பார்த்துக் கேட்கிறார் பகழிக் கூத்தர். இவ்வாறு பிள்ளைத்தமிழைப் பாடி முடிக்க இவரைத் துன்பப்படுத்திய சூலைநோயும் அப்போது இவரைவிட்டு நீங்கியது. அவர் முருகப்பெருமானது திருவருள் நிறைந்த இன்பக்கடலில் மூழ்கி எழுந்தார். ஆனந்தக் கூத்தாடினார். ஆதலால் நாமும் திருச்செந்தூர் முருகப்பெருமானை மனம் வாக்கு காயம் மூன்றினாலும் வழிபட்டு மானிடப்பிறவியின் பயனை அடைவோமாக.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் அருளிச்செய்த திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம் என்னும் நூல் கூறும் திருவருள் சிறப்பு.

**05ஆம் பாடல்**

திரைபொன்று மாபோலும் வினைபொன்று மின்றே
திருமுன்பு வம்மின்க ளெனநின்றவன் போல்
திரை பந்தியாய் வந்தகரை நின்ற செந்தில்
சேயோனை யிதயத்திலே வைத்துளேனே.

**பொ.ரை:**

என் சந்நிதியில் கடலின் அலைகள் அழிதல்போல் என்னை தஞ்சம் என்று அடையும் மக்களின் தீவினைகளும் அழிந்துவிடும். ஆகையால் என் முன் வாருங்கள் என்று எடுத்துணர்த்துவதுபோல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தளியும் சீரலைவாயில் நின்ற செந்திற் குமாரனை யான் என் மனமாகிய ஆலயத்தில் வைத்துள்ளேன்.

**19ஆம் பாடல்**

குமாரா சிவன் சேய் குறக் கன்னி நாதா
குகா கந்த சேனாபதீ சத்தி பாணி
எமார்வப்ரபோ தார காரீ மயூரா
இனாநீவு வாய் செந்திலாயஞ்ச லென்னே.

**பொ.ரை:**

மாரன் என்ற மன்மதனை வென்ற சிவகுமாரா குறத்தியாகிய வள்ளிமணாளா இரகசியத் தத்துவப் பொருள்களுக்கு பொருத்தமாயுள்ள குகன் என்ற திருநாமங் கொண்டவனே, அன்பர்களின் இருதயத் தாமரைக் குகையில் வாழ்பவனே ஆறு குழந்தைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகச் சேர்க்கப்பட்டு கந்தன் என்ற பெயருடன் விளங்குபவனே தேவர்களாகிய வீரர்களுக்கு சேனாபதியே பராசக்தியின் உருவமாகிய வேல் என்ற ஞானாசக்தியை எப்போதும் திருக்கரத்தில் தாங்கிய வீரனே என் அன்புக்கு இடமாகிய குருவே. தாரகாசுரனின் விரோதியே மயில்வாகனனே வணங்குவோரின் துன்பங்களை நீக்குபவனே செந்திலாதிபனே அடியேனுக்கு அபயமளிக்கவேண்டும்.

செந்தில் நாயகன் சேவடி போற்றி.

---

ஊதுபத்தி ஏற்றுவது இறைவனை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக என்று நம் வீட்டிலுள்ள பெரியவர்கள் கூற நாம் கேள்விப்பட்டிருப்போம்.

அதனுள் மறைந்திருக்கும் உண்மையான பொருளை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஊதுபத்தியை ஏற்றி வைத்தவுடன் அதனிலிருந்து புறப்படும் தெய்வீக மணம் சுற்றுச் சூழலை சூழ்ந்துவிடும். அது புகைந்து சாம்பலானாலும் தன்னைச் சுற்றியிருப்பவர்களைத் தன் மணத்தால் மகிழ்விக்கின்றது. இது ஒரு தியாக மனப்பான்மையின் வெளிப்பாடு. ஓர் உண்மையான இறைத்தொண்டன், தன்னுடைய சுயநல குணங்களை எல்லாம் விட்டொழிக்க வேண்டும், பிறருக்காக நன்மை செய்வதில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களின் வாழ்க்கையும் மணம் வீச வழி செய்வதே தெய்வீகச் செயலாகும். ஊதுபத்தி சாம்பலாகிவிட்டாலும் அதன் மணம் மட்டும் காற்றில் கலந்துவிடுகின்றது. அதன் மணத்தை முகர்ந்தவர் அதை தம் நினைவிலே வைத்திருப்பர்.

அதுபோலத்தான் மற்றவர்களுக்காக நன்மை செய்துவிட்டு வாழ்ந்து மறைந்தவர்களின் பேரும் புகழும் என்றுமே மக்களிடையே நிலைத்திருக்கும். நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு நன்மை தரும் நல்ல விடயங்களைக் கூறுவதும், நல்ல விடயங்களை அவர்களுக்குச் செய்தலும், அவர்கள் எப்போதும் நல்வாழ்வு பெறவேண்டும் என மனதார நினைப்பதும் மிகப்பெரிய உன்னதமான செயலாகும்.

இதுபோன்ற குணத்தைத்தான் ஊதுபத்தி குறிக்கின்றது. இதுபோன்ற குணத்தை உடையவர்கள்தான் இறைவனுக்கு மகிழ்ச்சியைத் தருபவர்கள். இதைத்தான் நம் பெரியவர்கள் அவ்வாறு கூறியுள்ளனர்.

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்"

அறத்தை (தருமம், புண்ணியம்) பெருக்கக்கூடிய நல்லனவற்றை (நல்ல சொற்கள், எண்ணங்கள், செயல்கள் என்று) மட்டும் பயக்கவற்றை பிறரிடம் நாடிச்சென்று இன்பம் பயக்கும்வண்ணம் இனிய நற்சொற்களைச் சொல்வார் என்றால் அவரிடம் உள்ள தீயவையும் பயனற்றவையும் பாவங்களும் குறைந்துகொண்டே இருக்கும்.

அறத்தைப் பெருக்கும் இனியவற்றை நாடிச்சென்று பேசினால் துன்பமெல்லாம் குறையும். அது நம்மை செம்மைப்படுத்திக்கொண்டே இருக்கும். அமைதி பிறக்கும். மனம் மகிழும். இதையே இன்று நேர்மறை என்று எல்லோரும் கூறுகின்றனர். நல்லவற்றைச் சொன்னால் மட்டும் போதாது. அதனை இனிய சொற்களில் சொல்வதும் அவசியம். ஏனெனில் நல்லவையானாலும் கடும் சொற்களால் சொன்னால் அது அறமாகாது.

மற்றவர்களுக்கு நன்மை தரும் நல்ல விசயங்களைச் சொல்வதால் ஒருவருடைய தீவினைகள் தேய்ந்து நல்வினைகள் பெருகும்.

***உன் மனச்சாட்சிதான் உனக்கு ஆசான். அதைவிட வேறு ஆசானில்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# வள்ளுவர் உபதேசம்

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் –

ஒரு ஈயாப்பத்தன் இருந்தான். அவன் எச்சிற் கையாலே காகந் துரத்தான். அவன் வீட்டில் எறும்பு ஊருவதில்லை. அங்கே எறும்பு எடுக்கத்தக்கபடி அவன் பொருளை வைத்திருப்பதில்லை. கண்ணை இமை காப்பதுபோல அவன் பொருளிலே கவனம் உள்ளவன். அப்படிப்பட்ட அந்த உலோபிக்கு மரணகாலம் வந்துவிட்டது. தானங் கொடுக்கிறார்கள். தானத்துக்கு பசு வேண்டும். உள்ள பசுக்களுக்குள்ளே ஒரு வயதுபோன பசுவைக் கொடுக்கும் படி அந்த உலோபி கஷ்டப்பட்டு அந்த மரண நேரத்தில் உத்தரவிட்டான். அது நடக்கமாட்டாத கிழட்டுப் பசு. பிராமணன் தானத்தை மறுக்கக்கூடாது. என்ன செய்வது, ஏற்றுக்கொண்டான். அதை மெள்ள மெள்ளத் தள்ளிக்கொண்டு வெளியே புறப்பட மூன்றே முக்கால் நாழிகை கழிந்தது. பிராமணனுக்கு வெகு சிரமம். அவ்வளவிற் பசுவும் செத்துப்போனது. அடுத்து உலோபியுஞ் செய்துப்போனான். யம கணங்களுக்கும் தேவ கணங்களுக்கும் போர் மூண்டது. தேவ கணங்கள் உலோபியைப் பறித்துக்கொண்டுபோய்ச் சுவர்க்க உலகத்திலே கற்பகதரு நிழலிலே இருத்தினார்கள். உலோபிக்கு இது வெகு ஆச்சரியமாயிருந்தது. விசாரித்தான். "உன்னுடைய கிழப்பசு மூன்றேமுக்கால் நாழிகை பிராமணன் வசம் இருந்தது. அவ்வளவும் நீ சுவர்க்க அதிபதி. அப்பால் சதாகாலம் நரகத்துக்குச் சக்கரவர்த்தி" என்றார்கள். உலோபி அப்படியா காரியம் என்று அறிந்துகொண்டு உடனே அங்கேயுள்ள காமதேனுக்களையும் கன்றுகளையும் தானஞ்செய்துவிட்டான். மூன்றேமுக்கால் நாழிகைக்கிடையிற் செய்து முடித்துப்போட்டான். பிறகு யமகணங்கள் அங்கேவந்து அவனை எட்டிப் பார்த்து வெட்கிப் போனார்கள். அவன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். அவன் சுவர்க்கத்துக்கு இந்திரனாய் விட்டான். நிலையாத செல்வத்தாலே நீடித்த செல்வத்தைப் பெற்றுவிட்டான். இனியும் அவன் புண்ணியமே செய்வான்.

இது கதாப்பிரசங்கி சொன்ன கதை. திருவள்ளுவரின் மாணவருக்கு அந்த இரண்டு குறளுக்கும் பொருத்தமான கதையாய் இருந்தது அந்தக் கதை. அவர் பெரிய புண்ணியங் களைச் செய்யத்தொடங்கினார்; செய்தார்.

முன் பிறருக்குத் தீமை வாராமல் வாழ்க்கை நடத்தினவர்; இப்பொழுது மற்றவர்களுக்கு நன்மையுஞ் செய்யத் தொடங்கிவிட்டார்; இம்மையிலேபோல மறுமையிலும் நல்வாழ்வு வாழ்தற்காக.

பிறருக்கு நன்மை செய்தலும் சுயநலமேயென்பதை அந்த மனிதர் நன்கு உணர்ந்தார். அவர் ஒருநாள் காசி யாத்திரை செய்தார். காசியிலே வேதவியாசரைக் கண்டார். வேதவியாசர், "நீ யார், எங்கேயிருந்து வருகிறாய்? என்று வினவினார். அப்பொழுது அந்த மனிதர் "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னார். திருமயிலாப்பூரிலிருந்து வருகிறேன். பிறந்த ஊர் இன்னது" என்றார். அப்பொழுது வேதவியாசர் உரக்கச் சிரித்து, "நீ ஆர்" என்று கேட்டால் உடம்பின் பெயரைச் சொல்லு கிறாயே, "நீ உந்த உடம்பா?" நூறு வருடங்களுக்கு முன் உன் பெயரென்ன? அப்பொழுதும் குறித்த ஊரிலேதான் இருந்தாயா? திருவள்ளுவருடைய ஊராகிய திருமயிலாப்பூரிலிருந்து வருகிற மனிதனே!

"நீ யார்? எங்கேயிருந்து வருகிறாய்? இனி நீ எங்கே போகப்போகிறாய்? என்று கேட்டால் நேர்விடை சொல்லுகிறாயில்லையே! திருக்குறளிலே உனக்கு எத்தனை குறள் தெரியும்? இந்தக் கேள்விகளுக்கு அதில் மறுமொழி இருக்கிறதே" என்றார்.

உடனே அந்த மனிதர் ஒன்றும் பேசாமலே ஆகாயக் கப்பலிலே புறப்பட்டு, நேரே திருமயிலாப்பூரிலே இறங்கித் திருவள்ளுவரிடம் போய்த் தமக்கு நேரிட்ட அவமானங்களைச் சொன்னார். சொல்லி, "சுவாமீ, நான் ஆர்? நான் எங்கிருந்து வந்தேன்? எங்கே போகப்போகிறேன்? எங்கே போக வேண்டும்? இந்த வினாக்களுக்கு விடை தெரியவில்லையே! ஏன் எனக்குத் தெரியவில்லை? அநுக்கிரகிக்க வேண்டும்" என்று அழுதார் அந்த மனிதர்.

அப்பொழுது திருவள்ளுவர் அந்த மனிதரைப் பார்த்துச் சொல்லுகிறார்: ஒருவன் தன் நன்மைக்காகப் பிறருக்குத் தீமைசெய்யாமலிருப்பான்; தன் நன்மைக்காகப் பிறருக்கு நன்மைகூடச் செய்வான். ஆனால் தான் இரங்கிய ஒரு ஏழை திடீரென்று பணக்காரனாய் நல்வாழ்வு வாழ அதைப்பார்த்துச் சகிக்கமாட்டான்; எரிச்சல் வந்துவிடும். அதற்கு வஞ்சகம் என்றும் பெயர். அது மனசுக்கு ஒரு மறு; மாசு. அந்த எரிச்சலாகிய மாசு இருக்கும்வரைக்கும், வியாசருடைய கேள்விகளுக்கு மறுமொழி காண முடியாது. என்ன செய்வது எரிச்சலைப் போக்க வேண்டும் என்றார்.

அப்பொழுது அந்த மனிதருக்குப் பெரியபுராணத்திலுள்ள ஒரு கதையும் நினைவுக்கு வந்தது.

கலிக்கம்பநாயனார் சிவனடியார் ஒருவரின் திருவடிகளைத் தங் கையாலே தீண்டிக் கழுவுகின்றார். அவருடைய பத்தினியார் கரகத்தால் நீர் வார்க்கின்றார். அப்படி வார்த்தவர் இடையில் தயங்கினார். அந்தச் சிவனடியார், முன் அங்கே வீட்டுப் பணியானாய் இருந்தவர். அவருக்கு "இந்த உயர்ந்த நிலையுமா" என்று ஒரு மாசு மனத்திலே ஊர்ந்ததினாலேதான், நீர் வார்த்தலிலே தடங்கல் ஏற்பட்டது. அதைக் கண்ட மன மாசில்லாத கலிக்கம்ப நாயனார் மனைவியார் கையைத் தறித்துவிட்டார்.

மணிமேகலையில் ஒரு ஆபுத்திரன் வருகின்றான். அவனிடம் ஒரு அமுதசுரபி இருந்தது. அதில் உணவுப் பண்டங்கள் பெருகிக்கொண்டிருக்கும். உணவுகளை உயிர்களுக்கு வழங்கி மகிழ்வான். ஒரு காலத்தில் மழை பெய்து நாடு செழித்துச் செல்வம் பெருகியதால், ஒருவரும் அவனுடைய கொடையை விரும்பவில்லை. அவனுக்குப் பெரிய துக்கம் வந்துவிட்டது. செல்வம் பெருகி உயிர்கள் நல்வாழ்வு வாழ்வதை அவன் மகிழவில்லை. நாம் நல்வாழ்வுக்காகப் பிறர்க்குத் தீமை செய்யாதிருப்போம்; பிறர்க்கு நன்மைகூடச் செய்வோம். அது வேறு. எல்லாரும் வாழவேண்டும் என்று எண்ணுவது, பிறர் நல்வாழ்க்கையை மகிழ்வது வேறு.

எல்லாரும் வாழவேண்டும்; "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்கின்ற நிலை எளிதிற் கைகூடுவது அன்று. பிறர் நன்றாயிருப்பதை நம் மனம் சகியாது எரிந்து

*ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேயிருக்கும். ஒரு படித்த மனிதர் எரிச்சலைப் போக்குகிறதற்கு மிளகாயை உபயோகி யாது விட்டுப் பார்த்தார். அது போகவில்லை. அவர் மிளகாயை நிறுத்தி அசீரணத்தை வருவித் தாரேயன்றி எவ்வித பயனையும் அடையவில்லை. ஒரு கோடி பிறப்பிற் செய்யும் முயற்சிகூட மன எரிச்சலை - மாசை - வஞ்சகத்தைப் போக்குதற்குப் போதாது.

பெரிய இருடிகளும் முனிவர்களும் எரிச்சல் தம்மிடம் இருப்பதைக் கண்டு நாணு கின்றார்கள்; ஏங்குகின்றார்கள்; அதனைப் போக்கத் தவங்கிடக்கின்றார்கள்.

திருமுகன் வள்ளிநாயகியைத் தினைப்புனத்திற் கண்டு அவளைக் களவு செய்து கொண்டு தெய்வநாயகியிடஞ் செல்லுகின்றான். தெய்வநாயகி வள்ளி நாயகியைக் கண்டு எரியவில்லை; புகையவில்லை; கதவைப் பூட்டவில்லை.

"ஈங்கொரு தமிய ளாகி யிருந்திடு வேனுக்கு இன்றோர்
பாங்கிவந் துற்ற வாறு நன்றெனப் பரிவு கூர்ந்தாள்"

-கந். வள்ளியம்மை திருமண. 235.

முருகன் சர்வான்மநாயகன்; அவன் ஊருணி. ஊராரால் நுகரப்படும் நீர்நிலை. அவன் அருள்வெள்ளம். அந்த வெள்ளத்தை எவரும் அள்ளிப் பருகவேண்டும் என்கின்ற நிலை தெய்வநாயகியின் திருவுள்ள நிலை. அந்த நிலைக்குத்தான் அறம் என்று பெயர்.

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

-குறள் 34.

எவன் "எல்லாரும் வாழல் வேண்டும் என்கின்ற மனநிலை எனக்கு வரவில்லையே" என்று என்றைக்கு ஏங்குகின்றானோ அவன் அன்றைக்குச் சமயி ஆகின்றான்; சைவத்திற் பிரவேசிக்கின்றான். அவனுக்கு மனமாசு நீங்கத் தொடங்கிவிட்டது என்று அர்த்தம். இருள் நீங்க நீங்க நிலம் வெளிக்கிறதுபோல, எரிச்சலாகிய மனமாசு நீங்க நீங்க வியாசருடைய வினாக்களுக்கு விடை வெளிக்கும். "நான்" தெரியும்; போக்குவரவு விளங்கும்.

எல்லாரும் வாழவேண்டும் என்கின்ற - மனமாசு நீங்கும் நிலைதான் சைவத்தின் தொடக்கம்; சைவம்.

தன் நல்வாழ்வு கருதிப் பிறருக்குத் தீமை செய்யாதிருப்பது; தன் நல்வாழ்வு கருதிப் பிறருக்கு நன்மை செய்வது; வைதிகம். அந்த வைதிகந்தான், முதிர்ந்து தன்னிடம் எரிச்சல் இருக்கிறதே என்று நாணி ஏக்கங்கொள்ளும்போது சைவம் ஆகின்றது. சைவத்துக்கு ஆதாரம் வைதிகம்; நமது சமயத்துக்குப் பெயர் வைதிக சைவம்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (முற்றும்)

---


*கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகத்தான் சேவை என்ற வழிமுறையை இறைவன் மனிதனுக்கு அளித்திருக்கிறான். யாருக்குச் சேவை செய்ய வேண்டும்? மனிதனுக்கே சேவை செய்ய வேண்டும். நாம் எதற்காகச் சேவை செய்ய வேண்டும்? நாம் யாருக்கோ உதவி செய்வதற்காகச் செய்யப்படுவதில்லை சேவை. நாம் இறைவனுக்குச் செலுத்தவேண்டிய கடனை நிறைவு செய்யவே சேவையைச் செய்கிறோம். எந்த ஒரு சேவை செய்யும் போதும், இறைவனுக்கு நீங்கள் கொடுக்கவேண்டிய கடனில் ஒரு சிறுபகுதி நிறைவு செய்கிறது.*


*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப்பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்





வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு 750,000. 00 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.





மனிதன் தோல்வியின்மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். போதனா வைத்தியசாலைக்கு என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சையை ஆரம்பிக்கத் தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 525,000. 00 ரூபா வைத்தியசாலை பணிப்பாளரிடம் வழங்கப்பட்டது.




திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு 750,000. 00 ரூபா நிதி பல கட்டங்களாக வழங்கப்பட்டது.

வாழ்வில் முன்னேற முதலில் தன்னம்பிக்கை அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலைக்கு 13 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.



தோல்வி துரத்துகிறது என்றால் வெற்றியை நெருங்குகிறாய் என்று அர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் சைவநெறிக்கூடத்துக்கு 550,000. 00 ரூபா பெறுமதியான உழவு இயந்திரப்பெட்டி தலைவர் திரு க. கணேசன் என்பவரிடம் கையளிக்கப்பட்டது.



தொண்டைமானாறு இந்து அபிவிருத்தி நிலையத்தினருக்கு அறநெறிப் பாடசாலை மாணவர்களை ஆன்மிக சுற்றுலாவான திருக்கேதீச்சரம் அழைத்துச் செல்வதற்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

ஆசைப்படுவதை மறந்துவிடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்துவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர்

– *செல்வி பா. வேலுப்பிள்ளை* அவர்கள் –

முருகன் அருள்பெற்று உய்தியடைந்தவர்கள் நக்கீரர், பாலன் தேவராயன், அருணகிரி நாதர். நக்கீரர் சிவபூசையில் தவறுவிட்டதால் கற்கிமுகி என்னும் பூதத்தால் சிறை வைக்கப்பட்டபோது முருகனை நினைந்து பாடியது திருமுருகாற்றுப்படை.

கொடிய வயிற்று நோயால் பீடிக்கப்பட்டு பல வைத்தியங்கள் செய்தும் மாறாத நிலையில் இறையருள் பெற்ற பெரியார் ஒருவர் வழிகாட்ட திருச்செந்தூர் முருகனை வழி பட்டு நோய் மாறியபோது முருகனை மெய் உருக உருக அவர்மீது பாடல்கள் பாடினார். முருகன் உறைகின்ற ஆறு இடங்களிலும் ஆறு நாட்கள் கவசம் பாடினார். அவையே கந்த சஷ்டி கவசங்களாகும்.

ஆனால் அருணகிரிநாதர் தன் வாலிப வயதில் கற்ற கல்வியை மறந்து இறைவனை மறந்து பரமாதரை அணைந்து உலக போகத்தில் திளைத்தவர். இளமை மாறி தீராத கொடிய நோய் கண்டு பரமாதரும் உற்றார் உறவினர் வெறுத்து ஒதுக்க “இனி நான் வாழ்வதால் பயனில்லை. இறப்பதே மேல்” என மனம் நொந்து திருவண்ணாமலை கோயில் கோபுரத்தின் உச்சியிலிருந்து வீழ்ந்து இறக்க முனையும்போது “நில்லு அருணகிரி” என விழித்து தன் திருக்கரங்களில் ஏந்தி காப்பாற்ற உயிர் பிழைத்தார். உடலைப் பற்றிய பிணியும் உளப்பிணியும் நீங்கியது. பிரணவ உபதேசம் தந்து திருப்புகழ் பாடும்படி பணித்தார் முருகப்பெருமான்.

பாட வழி தெரியாது மனங் கலங்கியபோது “முத்தைத்தரு பத்தித் திருநகை” என அடியெடுத்துக் கொடுத்தார். ஞானம் மேலிடுகிறது. முருகன் அருளால் உய்திபெற்ற அருணகிரிநாதர் உலகோர் உய்யும் வண்ணம் பாடும் பணியே தன் சிறந்த பணியெனக் கருதி திருப்புகழ் பாடத் தொடங்கினார்.

முருகன் பல்வேறு இடங்களிலும் உள்ள காவும் கழனியும், சந்தியும் சதுக்கத்திலும் எழுந்தருளியபோதும் தனக்கேயுரிய முதன்மையான ஆறு திருத்தலங்களையும் தரிசித்து திருப்புகழ் பாடினார். இத் திருத்தலங்களே ஆறுபடை வீடுகளாகும். அவை வருமாறு.

| | |
|---|---|
| திருப்பரங்குன்றம் | - தெய்வயானையை மணம் புரிந்த இடம் |
| திருச்செந்தூர் | - சூரனை வென்ற இடம் |
| திருஆவினன்குடி (பழனி) | - ஆண்டியாக ஞானப்பழமாக நின்ற இடம் |
| திருவேரகம் (சுவாமிமலை) | - தந்தைக்கு பிரணவப் பொருள் உபதேசித்த இடம் |
| பழமுதிர்சோலை | - ஔவைக்கு அருள்புரிந்த இடம் |
| திருத்தணிகை | - வள்ளியை மணம்புரிய வந்து தங்கிய தலம். |

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தலங்கள்தோறும் சென்ற அருணகிரியார் முருகனால் ஆட்கொள்ளப்பட்டபோது ஞானம் பெற்றதால் நல்லறிவு பெற்றார். வாழ்ந்த நாட்களில் விட்ட தவறையும் அதனால் உண்டான நோயையும் இறக்கத் துணிந்தவேளை முருகன் கருணையால் உயிர் மீண்டதையும் எண்ணி மனம் உருகினார். உலகம் உய்ய அருணகிரியார் தான் எவ்வாறு உய்திபெற்றார் என்பதனை உலகோர்க்கு வழிகாட்டி ஆற்றுப்படுத்திய இடங்களே ஆறுபடை வீடுகள்.

ஒவ்வோர் தலங்களிலும் முருகன் புகழ் பாடும்போது,

கருவில் உருவாகி வந்து பலகலைகளையும் பயின்றேன்
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடினேன்
அரகரசிவாய என்று தினமும் உனை நினைக்கவில்லை
ஆசனமிடுவார்களின் மனைவாசல்களில் நான் நாண
மின்றி அலைந்திருக்கிறேன்.

அப்போதெல்லாம் கருணை புரியாத காரணம் என்ன? என முருகனுடன் உரையாடியவர் பழனிமலையை தரிசித்தபோது, "முருகா! நான் அவனியில் பிறந்து மழலை மொழிபேசி, குறுநடை நடந்து பதினாறு வயது இளைஞனானபோது வேத ஆகமங்கள் சமய சாஸ்திரங்கள் தெரிந்த ஞானிகளை வணங்கித் துதியாமல் பெண்ணாசை கொண்டு கவலையில் மூழ்கியபோது என்னை காவாதது என்ன என மனம் வருந்துகிறார். அடுத்து திருவேரகம் (சுவாமிமலை) தலத்தில் பாடுகிறார்.

ஒருநாள் ஒருபொழுது அரை நிமிஷம்கூட உன்னை மனதில் தியானம் வைக்க முடியாமல் என் பழவினை (ஊழ்) தடுக்கின்றதே, கடப்பமாலை அணிந்தவனே! இத் தருணத்திலாவது "நீள் சவுக்ய சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வு தகமை சிவஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து அநுதினமும் உன்னையே தியானிக்கவும், புகழ்பாடவும் அருள்வாய்" என வேண்டுகிறார்.

இவ்வாறு முருகன் உறையும் இடங்கள் அல்லாத வேறு நாடுகளுக்கும் சென்று அலங்காரம், அநுபூதி பாடி அருணகிரியார் புகழ்பெற்று விளங்கினார்.

அக்காலத்தில் திருவண்ணாமலையை ஆண்ட அரசவையில் சம்பந்தாண்டான் என்ற சக்தி உபாசகர் அருணகிரியாரின் புகழ் கேட்டு பொறாமை கொண்டான். அதனால் அருணகிரி நாதர் பற்றி அவதூறுகள் கூறி மன்னனை தன்வசமாக்கி போட்டி ஒன்றை ஏற்பாடு செய்தான். என்ன போட்டி தெரியுமா? "என்னால் தேவியை யாவரும் அறியக் காட்டுவேன். இதைப்போன்று அருணகிரிநாதரும் முருகனை மக்களுக்குக் காட்டினால் அவரை முருகபக்தன் என ஏற்றுக் கொள்வோம்" மன்னன் உடன்பட்டான்.

சம்பந்தாண்டான் தான் சக்தி உபாசகன்; மந்திரங்கள் தெரிந்தவன் என்ற ஆணவச் செருக்குடையவன். ஆனால் அருணகிரிநாதர் துன்பக்கடலில் ஆழ்ந்து முருகன் அருள்பெற்று ஞானம் பெற்றவர். முருக தரிசனம் பெற்றவர். அளவிலா பக்தியுடையவர். மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் போட்டி ஆரம்பமானது. சம்பந்தாண்டான் மந்திர உச்சாடனம் தொடங்கினான். அருணகிரியாருடைய பக்தியை உலகோர்க்குக் காட்ட விரும்பிய முருகப்பெருமான் சக்திதேவியை தன்வயப்படுத்தவும் சம்பந்தாண்டானுடைய மந்திர உச்சாடனம் மாறுபடவே அவனுக்கு தேவி காட்சி தரவில்லை. தோல்வி பெற்றான். இப்போ அருணகிரிநாதருடைய முறை. திருவண்ணாமலை ஆலய இராஜகோபுர உள் மண்டபத்தில் மக்கள் கூடினார்கள். முருகனின் தரிசனம் கிடைக்கவேண்டி மெய்யுருகி கண்ணீர் சொரிய அருணகிரியார் பாடினார். சம்பந்தாண்டான் தன் மந்திர சக்தியால் தடுக்கப் பார்த்தான். இதனை மெய் அறிவால் உணர்ந்த அருணகிரிநாதர் முருகப்பெருமானை உளமாரத் தியானித்து,

"முருகா! அருவாய் உருவாய்
என் துயர்கெட மயில் மீதேறி
வருவாய் அருள்வாய் குகனே"

எனப் பாடவும் முருகப்பெருமான் மயில்மீது வந்து அனைவர்க்கும் காட்சி தந்தார். சம்பந்தாண்டான் வெட்கித் தலை குனிந்தான். முருகனின் காட்சியைக் காணாது மன்னனின் கண் பார்வையை மங்கியது. மன்னனின் கண்பார்வையை குணப்படுத்த எண்ணிய அருணகிரி நாதர் கோயில் கோபுரத்தில் தன் உடலை வைத்துவிட்டு கிளியினுருவம் கொண்டு வானுலகம் சென்றார். பகைகொண்ட சம்பந்தாண்டான் அவரது உடலை புதைத்துவிட்டான். மீண்டு வந்து தன்னுடலைக் காணாதது கண்டு முருகனை நினைந்து கிளிவடிவிலேயே முருகன் திருப்பாதங்களை அடைந்தார்.

"அல்லும் பகலும் முருகனை நினை மனமே
தீராத பிணியெலாம் தீர்த்து வைப்பான்"

## ஆன்மிகச் சிந்தனை

இறைவன் நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டாதவன். முடிவில்லாத பெருமையைக் கொண்டவன். மனம், வாக்கு, காயத்தால் அறிய இயலாதவன். அவனே நமக்கு அருள் செய்வதற்காக தன்னைக் குறைத்துக் கொள்கிறான்.

ஒவ்வொருவரும் இறைவனின் பெயரை உச்சரிக்கவே செய்கிறார்கள். ஆனால் மனத்தூய்மை இல்லாமல் உச்சரிப்பதால் மட்டும் இறைவனை அடைய இயலாது.

நம் மனம் மதம் பிடித்த யானையைப் போன்றது. பந்த பாசங்களினாலும், மரண பயத்தினாலும் உயிர் அலைந்து திரிகிறது. இதிலிருந்து விடுபட இறையருள் ஒன்றே நமக்குத் துணை செய்யும்.

நாம் விரும்பியதை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் இறைவனே நம்மை வழிநடத்துபவன். அதனால் பக்தி மார்க்கத்தைவிட்டு விலகுதல்கூடாது. அவன் நம் தகுதி அறிந்து நிச்சயம் அருள் செய்வான்.

*துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புக்கள் ஒளிந்திருக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

நாம் ஏன் ஆலயம் சென்று இறைவனை வணங்கவேண்டும்? வீட்டிலேயே இருந்து வணங்கினால் என்ன? ஆண்டவன் தான் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறதே எனவே எம் வீட்டிலும் அவர் இருக்கத்தானே செய்வார் என்று வினா எழுப்புவர் எம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களுக்கு நாம் என்ன பதில் கூறுவது? அவர்கள் கூறியபடி ஆண்டவன் தூணிலும் இருக்கின்றார் துரும்பிலும் இருக்கின்றார் எம் வீட்டிலும் இருக்கின்றார், ஏன் எம்முள்ளேயும் இருக்கிறார் எமது மனச்சாட்சி வடிவிலே. இதில் தப்பு இல்லை.

ஆனால் இந்த ஆனாவிலேதான் இவ்வினாவுக்கு விடையே இருக்கிறது. நாம் சாதாரண மனிதர்கள். வீட்டிலே இருந்து இறைவனை வணங்கவும் அவர் எமக்கு காட்சி தந்து அருள் புரியவும் நாம் ஒன்றும் அப்பர் சுவாமிகளோ சம்பந்தரோ சுந்தரரோ மணிவாசகரோ அல்லர். எனவே எமக்கு பூஜை அறையும் முக்கியமாக ஆலயங்களுமே தஞ்சம்.

ஆலயம் என்பதன் பொருள். ஆன்மாக்கள் ஆண்டவனோடு லயிக்கும் இடம் என்னும் போது, யாம் எவ்வாறு ஆலயத்துக்குச் செல்லாமல் இருக்க முடியும்! பசுவில் உடல் முழுவதும் பாலானது சூட்சுமமாக உள்ளது. இருப்பினும் அப்பாலை நாம் பசுவின் மடியில் இருந்துதானே கறந்தெடுக்க முடியும்! இதேபோன்றுதான் ஆலயத்தின் கதையும். அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாக ஈசன் இருப்பினும் ஆண்டவனது இன்னருளைப்பெற உரிய இடமாக ஆலயங்களே விளங்கிவருகின்றன. இதனாலேயே நம் முன்னோர்,

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும்
"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்றும் கூறி உள்ளனர் எமது முன்னோர். நாம் அன்றாடம் கற்கும் சைவ மெய்யடியார்கள் நாயன்மார்கள் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் அவர்கள் தம் வாழ்வில் ஆலய வழிபாட்டிற்கு எத்தனை முக்கியத்துவம் அளித்து வந்தார்கள் என்பதை பறை சாற்றுகின்றன. தல யாத்திரை என்பது அவர்கள் வாழ்வின் உயிர்நாடியாக விளங்கியது. அவர்கள் செய்த அத்தனை அற்புதங்களும் ஒவ்வொரு திருத்தலத்திலேயே இடம்பெற்றதை யாம் நன்கு அறிவோம்.

எம்மைத் தம்பால் ஈர்க்கவே ஆலய கோபுரம் அத்தகை எழிலுடன் கம்பீரமாக ஊரின் நடுவில் உயர்ந்து நிற்கின்றது. தூல லிங்கம் என்று அழைக்கப்படும். கம்பீரம் கலந்த அந்த எழிற்கோபுரத்தை கண்டதும் எமது மனம் எம்மை அறியாமலே இறைவன் பால் ஒரு கணமேனும் சாய்கின்றது. இது எத்தனை உண்மை! நதியைத் தொடர்ந்து சென்றால் கடலை அடையலாம் என்பது முதுமொழி. அதுபோல் ஆலயத்தை நாடினால் ஆண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளை அடையலாம். ஆலய தரிசனத்தின் விசேடம் என்னவென்றால் பொதுவாக மனதை ஒரு வழிப்படுத்த முடியாமல் சங்கடப்படுபவர்களை அது ஒரு வகையில் ஒரு வழிப்படுத்து கின்றது. ஆலயத்திலே சூட்சுமமாக வீசிக்கொண்டிருக்கும் தெய்வீக அலைகள் உணர்வுகள் புனித நறுமணங்கள் யாவும் அங்கு செல்வோரையும் தூய்மைப்படுத்துகின்றது, தெய்வீக மாக்குகிறது. மனதை ஒருவழிப்படுத்த ஆலயம்போல் சிறந்த இடம் வேறு ஒன்றில்லை.

திருக்கோயிலும் அதன் சுற்றுப் பிரகாரமும் அங்கு காணப்படும் எழிலமைந்த சிற்பங்களும் அழகுபடிந்த ஓவியங்களும் எமக்கு இறைவனது வடிங்களையும் திருவருட் செயல்களையும் அடியார்களது வரலாற்றையும் அறியத்தந்து எமது பக்தியை தளராத பக்தி ஆக்குகின்றன. எமது பக்திக்கு மெருகூட்டுகின்றன.

என்றுமே திருத்தலங்களும் திருக்கோயில்களும் எம்முன் வாழ்ந்த அனுபூதிமான்களது வாழ்க்கையோடு தொடர்புகொண்டுள்ளன. அவர்களது உயர்ந்த வாழ்க்கை முறையை எமக்கு மீண்டும் ஞாபகப்படுத்துகின்றன.

வேதாரணியம் என்றதும் அப்பர் சுவாமிகளும் ஞானசம்பந்தரும் ஆலயத் திருக்கதவை திறந்து வைத்த அருட்செயலே எமது ஞாபகத்துக்கு வருகின்றது. திருமயிலாப்பூர் என்றதும் ஞானசம்பந்தப்பெருமான் பூம்பாவையை உயிர்ப்பித்த அற்புதச் செயலே எமது மனக்கண் முன் தோன்றுகின்றது.

எனவே, எமது ஆத்மீக வாழ்க்கைக்கு இனிய முறையில் கைகொடுக்கும் அருள் நிறைந்த ஆலயத்தை வாரம் ஒருமுறை தன்னும் யாம் தரிசித்தாக வேண்டும் அல்லவா.

## மூச்சு விடும் நேரம்

புத்தர் தன் சீடர்களிடம், "ஒரு மனிதனின் ஆயுட்காலம் எவ்வளவு?" என்று கேட்டார்.

ஒரு சீடர் எழுபது என்றார், இன்னொருவர் அறுபது என்றார், மற்றொருவர் ஐம்பது என்றார். அனைத்துமே தவறானது என்று சொன்ன புத்தர் "ஒரு மூச்சு விடும் நேரம்" என்று புன்னகையுடன் சொன்னார்.

ஆச்சரியப்பட்ட சீடர்கள், "மூச்சு விடும் நேரம் என்பது கணப்பொழுதுதானே?" என்றனர்.

உண்மை. மூச்சு விடும் நேரம் கணப்பொழுதுதான். ஆனால் வாழ்வு என்பது மூச்சு விடுவதில்தான் உள்ளது. ஆகவே ஒவ்வொரு கணமாக வாழவேண்டும். அந்தக் கணத்தில் முழுமையாக வாழ வேண்டும்" என்றார் புத்தர்.

பெரும்பாலானவர்கள் கடந்தகால மகிழ்ச்சியிலே மூழ்கியிருக்கிறார்கள். பலர் எதிர்காலத்தைப் பற்றிய பயத்திலும், கவலையிலும் வாழ்கிறார்கள். நிகழ்காலம் மட்டுமே நம் ஆளுகைக்குட்பட்டது. அதை முழுமையாக வாழவேண்டும் என்று சொன்னார் புத்தர்.

*வாழ்க்கைக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ அப்படியேதான் உழைப்பும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தி சேர்தல் எல்லோர்க்கு மழகு

– திரு பொ. பாலேஸ்வரன் அவர்கள் –

கலகல வென யலை யடித்து
நுரை யொதுங்கு மகரை யமர்ந்தான்
பலபல வென கரங் கூப்பும்
அடியார் வரு மாலயமாம்
நலம் பெற நாடு மடி யார்கள்
சென்றிறைஞ்சு மனம் கொண்டவர்
குல தெய்வ மாம்கு மரன் குடி
யிருக்கு மிவ்வா லயமாம்.

பதி யொன் றில்பதி யமர்ந்து
வினை தீர்க்கு மாறுமுகம்
நிதி கொண் டுசெல் லாதார்கை
நிறைய நிதி வழங்கும் வேல்
மதி தன்னைம றந்து வாழும்
மானிடர் க்கெலாம்
விதி தன்னை யுணர்த் திநிற்கும்
விசித் திரதெய் வாம்சம்.

பசி யென்று வந்தா ருக்குபசி
தீர்க் குமன்னக் கந்தன்
புசி யென்று சொல்லா மல்பசி
தீர்க் கும் தமிழ்த் தெய்வம்
கசிந்து ருகிவேண் டவேகண்
மூடிப் பார்த் திருப்பான்
விசித் திரமாக வேவி ளையாடி
வினை களை யுமற் புதன்.

ஓமென் றுசொன் னார்க் கோடி
வந்து கரங் கொடுப் பான்
வான் நின்று பொய்த் தாலும்
வரங் கொடுக் குமன முள்ளான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனி னிமை யாய் தெள்ளு
தமிழ் பாட்டெடுப் பான்
தா னெனு மகந் தையை தறி
கெட் டோடவை ப்பான்.

அழகு தமிழ் பாட் டெழுதி
அர்ச் சனை கள்செய் திட்டால்
விழி யொளி தந்தி டுவான்
விரும்பி யதை க்கேட்டிடுவான்
பழி தீர்கு மப் பாவை யர்கண்
படா மல் முன் நிற்பான்
மேழி க்குமரன் மௌனம் காத்
திடுவான் விசித்திரம் செய்திடுவான்.

காலை நேரத் தென்ற லேகந்தன்
முகம் குளிர வீசிவிடு
சோலை மலர்கு யில்களே
குமரன் பேரை ச்சொல்லி கூவிவிடு
மாலை வேளை ஒலித் திடும் மணியே
அழகன் பேரைச் சொல்லி யொலித்துவிடு
மாலை சேரு மலர்க ளேமங்க ளமாய்
முருகன் தோளில் சாய்ந்து விடு.

முச்சங் கம்தந்த வன் நீயே
முத்த மிழ்கொ டுத்த வன் நீயே
உச்சத் தில்உயர்த் தியுலகம்
போற்ற வைத்த வன் நீயே
எச் சமயத் திலும் உயர்ந்தது
சைவ மென்று நின்றும் துணிந்தும்
அச்ச ம்நீங்க வாழ வைத்ததும்
சந்நி திப் பதி யமர்ந் தவனே.

முருக னென்பது தனியழகு
முன் பிறந்த தமி ழழகு
காரிருள் வானத்தின் தனி யழகு
கை கொடுக் கும்தா யதனிலு மழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரு மிடம் சேர்ந்தா லது வழகு
கை கொடுக் கும் தமி ழழகு
வருந் தியுழைத்த செல் வமழகு
வாரிக் கொடுப்ப துமதுவு மழகு.

பூ பூத் தால்சோ லைக் கழகு
மலர் தொடுத்தால் மாலைக் கழகு
பிழை யின்றி யெழுது வது
தமிழுக் கழகு மேகம்
மழை பெய்தா லது மண்ணுக் கழகு
பயிர் வளர்வது நாட்டுக் கழகு
கழலடி சேர் தல் அடியார்க் கழகு
முத்தி சேர்த லெல் லோர்க்கு மழகு.

---

**மனதில் நோயை சேர்க்க வேண்டாம்**

ஒரு பெரிய குருகுலத்தில் அனைத்திலும் மிகவும் திறமை வாய்ந்த ஒரு குருவிடம் சகாதேவன், மகாதேவன் என்னும் இரு மாணவர்கள் நீண்ட நாட்களாக கல்வி பயின்று வந்தனர். அந்த குருவிற்கு தெரியாதது எதுவுமே இல்லை என்று சொல்லலாம். அத்தகைய அவரிடம் பயிலும் அந்த இரு மாணவர்களும் மிகவும் நெருங்கிய நண்பர்கள்.

அதில் மகாதேவன் நேர்மையானவன், எதையுமே மனதில் வைத்துப் பேசத் தெரியாதவன். எப்போதுமே வெளிப்படையாகப் பேசும் குணம் கொண்டவன். அவனுக்கு தான் கற்ற கல்வியை மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. மேலும் தன்னைப்போலவே அனைவரும் நேர்மையாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுபவன்.

ஆனால் சகாதேவன் சற்று வித்தியாசமானவன். எதையும் வெளிப்படையாகப் பேசமாட்டான். மிகவும் பொறுமைசாலி, எந்தப் பிரச்சனைக்கும் செல்லாதவன். யார் என்ன சொல்லி திட்டினாலும், ஏமாற்றினாலும் அதை தன் மனதிலே வைத்துக், கஸ்டப்பட்டுக் கொண்டிருப்பவன். ஒருமுறை விளையாடிக்கொண்டிருக்கும்போது ஒரு மாணவன் அவனிடம் வம்பு இழுத்து, அடித்து திட்டிவிட்டான். அப்போது சகாதேவனுடன் அவன் நண்பன் மகாதேவன் இல்லை.

இதனால் சகாதேவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. உடல்நிலை சரி யில்லை என்பதை அறிந்த அவனுடைய நண்பன் மகாதேவன் அவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்லாமல், அவனது குருவிடம் அழைத்துச் சென்றான். நீண்ட நாட்கள் அவர்களுடன் இருந்த அந்தக் குருவிற்கு சகாதேவனுக்கு எதனால் உடல்நிலை சரியில்லை என்று புரிந்துவிட்டது. அதனால் அவர் சகாதேவனிடம் “இது உடலில் வந்த நோய் அல்ல. உன் மனதில் வந்த நோய். அதை நீதான் சரிசெய்ய வேண்டும்” என்று கூறினார்.

அந்தக் குரு அவ்வாறு சொல்வதற்கு காரணம், அந்த சகாதேவனின் மனதில் தைரியம் குறைவாகவும், அளவுக்கு அதிகமான பொறுமை,, சகிப்புத்தன்மை அளவுக்கு அதிகமாக இருப்பது போன்றவை இருக்கின்றன. இவை யாவும் ஒருவகையான நோய்தான். ஆகவே அந்த நோயை அவன் சரிசெய்துவிட்டால், அவன் சரியாகிவிடுவான் என்பதற்காகவே சொன்னார்.

*முயன்று செயல்களைச் செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் விழா

– தொகுப்பு: **இ. கஜன்** அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் முருகனின் அருளாளர் அருணகிரிநாதர் பெருவிழா 22.06.2024 சனிக்கிழமை காலை 09.15 மணிக்கு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சுழிபுரம் அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதும் நிகழ்வுடன் விழா ஆரம்பமாகியது.







அதனைத் தொடர்ந்து தொடக்க உரையினை ஆசிரியர் திரு இ. வாகீசன் அவர்கள் ஆற்றினார்கள். இந்நிகழ்வில் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய ஞான ஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றது.

தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி செல்வி ஆருத்திரா ஜெயமோகன் அவர்களின் தனி நடனமும் இடம்பெற்றது. பின் செல்வன் ப. பிரவீன் (இந்து வாலிபர் சங்கம், வட்டுக்கோட்டை) அவர்களின் சொற்பொழிவும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இந் நிகழ்வில் இசைத்துறை நுண்கலைமாணி திருமதி சித்திரா ஹவிக்குமார் அவர்களின் திருப்புகழிசை நிகழ்வினை பக்கவாத்திய சகிதம் நிகழ்த்தினார்.

*எல்லாம் இழந்தாலும் கலங்காதே. வெறும் பாத்திரம்தான் நிரப்பப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னால் இசைத்துறை தலைவர் கலாநிதி நா.வி.மு. நவரத்தினம் அவர்கள் கலந்துகொண்டு அருணகிரியான் எனும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு ஆற்றினார்.





உலகம் பார்த்து வாழ்பவன் சராசரி மனிதன். உலகமே பார்க்க வாழ்பவன் சாதனை மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வில் கலந்துகொண்டு கலைநிகழ்வுகளை அரங்கேற்றிய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.





தொடர்ந்து திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

**05.07.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :-** "அயில் வேலன் கவி"

**வழங்குபவர் :-** திரு நா. நவராஜ் அவர்கள்

[உளவளத்துணையாளர்]

---

**12.07.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**19.07.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :-** "மகாபாரதம்" (தொடர்)

**வழங்குபவர் :-** செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**26.07.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆடி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :-** செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள்

**மதிப்பீட்டுரை :-** திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

[சைவப்புலவர், ஆசிரியர்]

319 ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org